
# புவனம்




## மணிவிழா மலர்

### திரு.வேலாயுதம் புவனேந்திரன்

பிரதி அதிபர், யா/வயாவிளான் மத்திய கல்லூரி

## யா/வயாவிளான் மத்திய கல்லூரி
## வயாவிளான்

# புவனம்

மணிவிழா மலர்

29.06.2018

# கல்லூரிக்கீதம்

வயாவிளான் மத்திய கல்லூரி என்றும் வாழ்க
இயைவுறும் ஆசிரியரும் மாணவர்களும் வாழ்க

செம்மைநெறிநில் என்னும் எங்கள்
சீரிய வாய் மொழியின்
உண்மை உணர்த்தும் எண்ணும் எழுத்தும்
ஊக்கமுடன் பயில்வோம்
துணிவும் பணிவும் தொழில்கள் பலவும்
இணையும் கல்வியுடன்
இணையிற் கலைகள் பிறவும் நிறைவாம்
இயைவுடன் கற்றுயர்வோம்

(வயா)

மாணவர் நலனை மாண்புடன் நாளும்
பேணிவரும் அதிபர்
ஆள்நலப் பணியும் ஆற்றலும் வாய்ந்த
ஆசிரியர்களுடன்
செல்வச்சிறுவர் அன்புடன் ஒன்றாய்ச்
சேர்ந்து நன் னெறிபயிலும்
கல்விக் கோயில் என்னத் திகமும்
கற்றவர் புகமும்

(வயா)

இயற்றியவர்
கவிஞர் கந்தவனம்
முன்னாள் ஆசிரியர்

# கொடிக்கீதம்

வயாவிளான் மத்திய கல்லூரி அன்னையின்
மாண்பினை உயர்த்தும் கொடி பறக்குது பார்
பறக்குது பார் கொடி பறக்குது பார் கொடி
பறக்குது பார் கொடி பறக்குது பார் கொடி (வயா)

மாணவர் எமக்குயர்ந்த மேன்மைகளைத் தருகின்ற
மன்னு பேராயலயத்தின் கொடி இது
மாநிலத்தில் மகிமைகளில் மலர்ந்து நாம் எழுந்திட நன்
மார்க்கங்களைத் தரும் கொடி கொடி தான் பறக்குது பார் (வயா)

ஆண்மை தரும் கல்வி கேள்வி அறிவியற் கலைகளோடு
ஆற்றல் பல தருகின்ற கொடி இது
அனுதினமும் அகமகிழ்ந்து அறிவூட்டும் கல்லூரி
அன்னையவள் கொடியுயர்ந்து பறக்குது பார் (வயா)

சாதிமத பேதமின்றிச் சன்மார்க்க நெறி நிற்கும்
சால்பினை உயர்த்துகின்ற கொடி இது
சாந்தி சக்தி ஜோதி கீர்த்தி எங்கள் வாழ்வில் எய்திடவே
சாலவும் உழைக்கும் கொடி பறக்குது பார் (வயா)

இயற்றியவர்
ஆ.சி.நடராசா
(முன்னாள் அதிபர்)

# கல்லூரியின் விபரம்

| | |
|---|---|
| பெயர் | : யா/ வயாவிளான் மத்திய கல்லூரி |
| முகவரி | : பலாலி வீதி, வயாவிளான். |
| ஆரம்பம் | : 16.01.1946 |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : வயாவிளான் மேற்கு [J/245] |
| பிரதேச செயலகம் | : தெல்லிப்பழை |
| பாடசாலை குறியீட்டு இலக்கம் | : 1013040 |
| பாடசாலை தொகை மதிப்பு இல. | : 09216 |
| பாடசாலை பரீட்சை இல. | : 11451 |
| பாடசாலை வகை | : 1 AB [Super] |
| தொலைபேசி இல. | : 021 221 3910 |
| மின்னஞ்சல் | : vayavilanmmv@gmail.com |
| இணையம் | : wwww.vayavilancc.org |



திரு.வேலாயுதம் புவனேந்திரன் அவர்கள்
B.Sc.(Maths) Dip in Education


விழா நாயகனின் பெற்றோர்



விழா நாயகனுடன் குடும்பத்தினர்



# மலர்க்குழு



**திரு.வே.த.ஜயந்தன்** - கல்லூரி முதல்வர்

**திரு.ந.கிசோக்குமார்** - தலைவர், ஆசிரியர் நலன்புரிக்கழகம்

**திருமதி கி.சிங்கராஜன்** - இதழாசிரியர்

**திரு.ந.முரளிதரன்** - ஆசிரியர்

**திரு.ச.திருச்செந்தூரான்** - ஆசிரியர்

**திரு.மு.கணேசானந்தன்** - பொருளாளர், பழையமாணவர் சங்கம்

**திரு.செ.தயானந்தன்** - செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்



# ஆசிச்செய்தி

வயாவிளான் மத்திய கல்லூரியில் சிறந்த கணிதபாட ஆசானாகவும், உப அதிபராகவும், பிரதி அதிபராகவும் கடமையாற்றிய திரு.வேலாயுதம் புவனேந்திரன் அவர்களின் பாராட்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் மணிவிழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மனமகிழ்வு அடைகின்றேன்.

1989ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை கல்லூரியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு அளப்பரிய சேவையாற்றி 29.06.2018இல் ஓய்வு பெறும் மணிவிழா நாயகனை உளமார வாழ்த்துவதோடு, அவருக்கு இறைவன் நல்ல உடல் ஆரோக்கியத்தையும், மகிழ்வான வாழ்க்கையையும் தொடர்ந்து வழங்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு எனது ஆசிகளையும் தெரிவிக்கின்றேன். மேலும் வயாவிளான் மண்ணில் பிறந்து வயாவிளான் மத்திய கல்லூரியில் கல்வி கற்று உயர் கல்வியினையும் முடித்து மீண்டும் தாம் பிறந்த மண்ணிற்கு பெருமை சேர்க்க எண்ணி இப்பாடசாலையிலே வந்து கற்பித்து தற்போது 29ஆவது வருட நிறைவில் பிரதி அதிபராக ஓய்வு பெறுவது போற்றுதற்குரிய விடயமாகும். இதன் அடிப்படையில் திரு.வேலாயுதம் புவனேந்திரன் அவர்களை மீண்டும் நான் பாராட்டுவதோடு எனது ஆசிகளையும் தெரிவிக்கின்றேன்.

- வாழ்க வளமுடன் -

## ஆசிச்செய்தி



# வாழ்வுக்கு வழிகாட்டிய ஊழியன்

யாழ்.வயாவிளான் மத்திய கல்லூரியில் கடந்த 29 ஆண்டுகள் கல்வித்துறையில் அரும்பணியாற்றி ஓய்வு பெறும் மணிவிழா நாயகன் திரு.வேலாயுதம் புவனேந்திரன் ஆசிரியர் அவர்களை இறை ஆசீருடன் வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் அவர்களின் கல்விப் பணி தற்கால சவால் நிறைந்த உலகமயமாக்கல் சமூகத்தில் பாராட்டுதற்குரியது. மாணவர்களிடையே நல்ல அறிவையும், நல்லொழுக்கத்தையும், நேசக்கரத்தையும் நீட்டி நேர்மையாக நடந்து கொண்டு இதமான நல்ல எதிர்காலத்தை உருவாக்க உழைத்த உத்தமர் திரு.வேலாயுதம் புவனேந்திரன் ஆசிரியர்.

இவர் ஒரு விசுவாசம் நிறைந்த கத்தோலிக்கரும் கூட இவர் தெய்வபயம் நிறைந்த ஒரு பக்தர். இவரது வாழ்வின் வெற்றிக்கும், சாதனைகளுக்கும் இவர் கொண்டுள்ள இறை நம்பிக்கையே காரணம் என்றால் மிகையாகாது. எமது ஆலயத்தில் இடம்பெறும் எல்லாத் திருப்பலிகளிலும் தவறாது கலந்து கொண்டு வழிபாடுகளைச் சிறப்பிக்கும் ஒரு நல்ல தந்தை.

நீங்கள் கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் சமய, சமூக கலைப்பணிகளில் தொடர்ந்தும் தீவிரமாக ஈடுப்பட்டு எமது சமூகத்திற்கு விசுவாசம் நிறைந்த, அறிவு நிறைந்த அனுபவத்தைத் தந்து சேவையாற்ற வாழ்த்துகின்றோம். உங்கள் ஓய்வு நிலை குடும்ப வாழ்வு மகிழ்ச்சியாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அருட்பணி ம.பத்திநாதர்,**
பங்குத்தந்தை, புனித மிக்கேல் ஆலயம்,
உரும்பிராய்.



# வாழ்த்துச் செய்தி

அகவை அறுபதில் ஓய்வு பெறும் யா/வயாவிளான் மத்திய கல்லூரி பிரதி அதிபர் திரு.வேலாயுதம் புவனேந்திரன் அவர்களது சேவையைப் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன்.

இப்பாடசாலையயின் பழைய மாணவனான இவர் சிறந்த கணித ஆசானாகத் திகழ்ந்தவராவார். மாணவர்களது கல்வி வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்பட்ட இவர் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் விருப்புடன் ஈடுபடும் ஒருவராக தனது கடமைகளை ஆற்றியுள்ளார்.

ஆசிரியராக, உப அதிபராக, பிரதிஅதிபராக கல்விப்பணியாற்றி ஓய்வுபெறும் திரு.வேலாயுதம் புவனேந்திரனிற்கு எனது பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவிப்பதுடன் இவரது ஓய்வுக்காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றேன்

**செ.உதயகுமார்,**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்.



# வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

வலிகாமம் கல்வி வலயத்தின் 1 AB பாடசாலையான யா/வயாவிளான் மத்திய கல்லூரியின் பிரதி அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெறுகின்ற திரு.வேலாயுதம் புவனேந்திரன் அவர்களுக்கு அவரது மணிவிழா சார்பாக எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1984 ஆம் ஆண்டு கல்விப் புலத்தில் ஆசிரியராக நுழைந்த B.Sc. பட்டதாரியான இவர் ஓர் சிறந்த கணித ஆசானாக மட்டுமன்றி யா/வயாவிளான் மத்தியகல்லூரியின் உப அதிபராக, பிரதி அதிபராக இப்பாடசாலையில் நீண்ட காலம் கல்விப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. முதல் நியமனம் மேல் மாகாணமாக இருந்த போதிலும், தான் கல்வி கற்ற பாடசாலையான யா /வயாவிளான் மத்திய கல்லூரியில் ஏறக்குறைய மூன்று தசாப்த காலம் தனது சேவையை அர்ப்பணிப்பாக ஆற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தான் கற்ற பாடசாலை என்ற அக்கறை காரணமாக மாணவர்கள் மீது மிகுந்த அக்கறையுடன் செயற்படுபவராக விளங்கினார். இறை நம்பிக்கையும், அனைவருடனும் பண்பாகப் பழகும் சுபாவமும் கொண்டவர். நல்லாசிரியர்களுக்கு வழங்கப்படும் "பிரதீபா பிரபா" விருதினையும் பெற்றுக் கொண்டவர். இவரின் அர்ப்பணிப்பான சேவைக்கு இது சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பாடசாலைக்குத் தனது சிறந்த சேவையை நல்கிய திரு.வேலாயுதம் புவனேந்திரன் அவர்களது சேவைநலன் பாராட்டு விழாவும், சேவை நயப்பு மலர் வெளியீடும் சிறப்புற நடைபெற வாழ்த்துவதோடு, அவர்கள் தனது ஓய்வு காலத்தில் தனது குடும்பத்தினருடன் சகல சௌபாக்கியங்களுடனும், மகிழ்வுடனும் வாழ வாழ்த்துகின்றேன்.

**செல்வரட்ணம் சந்திரராஜா,**
கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம் வலயக்கல்வி அலுவலகம்.

# யா/வயாவிளான் மத்திய கல்லாரியின்
# ஆசிரியர் திரு.வே.புவனேந்திரன்
# அவர்களுக்கான மணிவிழா வாழ்த்து

யா/வயாவிளான் மத்தியகல்லூரியில் திரு.வே.புவனேந்திரன் ஆசிரியருடன் பன்னிரண்டு வருடங்கள் சக ஆசிரியராகப் பணியாற்றியவன் என்ற வகையில் அவரது மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகிறேன்.

ஆசிரியர் திரு.வே.புவனேந்திரன் அவர்கள் எளிமையானவர், மாணவர் மையக் கல்வியை நடைமுறைப்படுத்தியவர் ஆசிரியர் நலனில் அக்கறையானவர் இப் பாடசாலையின் பழைய மாணவர் என்ற வகையில் பாடசாலையின் பௌதிக கல்வி அபிவிருத்தியில் அதிக ஈடுபாடுடையவர்.

ஓய்வு காலத்தில் உடல், உள ஆரோக்கியத்துடனும் குடும்பத்தினருடன் மகிழ்வுடனும் வாழ வாழ்த்துகின்றேன்.

**திரு.குகதாசன் விக்னரூபன்**
உதவிக்கல்விப் பணிப்பாளர்,
வலிகாம வலயம்,
மருதனார்மடம்.

# மணிவிழா வாழ்த்துச் செய்தி

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்பது ஔவையார் வாக்காகும். இவ்வாக்கானது எண்ணாகிய கணிதத்தின் முக்கியத்துவத்தினையும் எழுத்தாகிய தாண் மொழியின் தேவையினையும் சிறப்பாக இயம்பி நிற்கிறது. கண்கள் நாம் இவ்வுலகத்தை காண்பதற்கு முக்கியமானது. அதே போல் எண்ணும் எழுத்தும் இவ்வுலகத்தில் உள்ள அனைத்தையும் அறிந்து கொள்ள அவசியமானது. இதனால் தான் ஔவையார் இவ் உடலில் எத்தனையோ முக்கிய அம்சங்கள் இருந்தாலும் இவ் இரண்டிற்கும் கண்களை உதாரணமாகக் கூறியுள்ளார். இதனால் தான் பாடசாலைக் கலைத்திட்டத்தில் கணிதம், தாய்மொழி ஆகிய இரண்டும் பிரதான பாடங்களாக ஆரம்பக் கல்வி முதல் முக்கியத்துவம் வழங்கி கற்பிக்கப்படுகின்றது.

கணித பாடம் கற்பதனால் மாணவர்களுடையே எண்ணுதல், அளத்தல், எண்கள் தகவல்களை ஒழுங்கமைத்தலும், பகுப்பாய்வு செய்தலும் அனுமானத்தில் தர்க்கரீதியாக சிந்திக்கப்பழகுதல், தீர்மானம் எடுத்தல் மற்றும் பிரச்சினைக்கு தீர்வு காணுதல் போன்ற திறன்கள் விருத்தியடைகின்றது. இவை அவர்களாக எதிர் காண வாழ்வில் பிரகாசமடைய உதவி புரிகின்றன.

இத்தகைய சிறப்புகள் பெற்ற கணித பாடத்தினை மாணவர்களுக்கு பயனுற கற்பித்தவர் ஆசிரியர் திரு.வேலாயுதம் புவனேந்திரன் அவர்கள் ஆவார். இவர் மாணவர்களின் நலன்களில் அதீத அக்கறை கொண்டு அவர்களின் அடைவு மட்டங்களுக்கு ஏற்ப கணித பாடத்தினை கற்பிப்பது இவரின் சிறப்பாகும். கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவது இவரின் திறன்களல் முக்கியமானதாகும். இக்கல்லூரியின் பழைய மாணவரான இவர் இக்கல்லூரி குடும்பத்தின் மிக முக்கியமான உறுப்பினராவார். இவரின் ஆளுமையும், திறமையும் காரணமாக இக்கல்லூரியில் ஆசிரியராகவும், உபஅதிபராகவும் மற்றும் பிரதி அதிபராகவும் இருந்து கல்லூரியினை முன்னேற்றி வழிநடத்தியவர். இவர் ஓய்வு பெற்றுச் செல்வது இக்கல்லூரிக்கு மிகப்பெரிய இழப்பாகும்.

எப்போதும் சுறுசுறுப்பானவருக்கு ஓய்வு என்பது பொருந்தாத ஒன்றாகும். ஆயினும் அகவை அறுபதில் ஓய்வு பெறவேண்டும் என்பது நிர்வாக விதிமுறையாகும்.

**திரு.அ.சுபாகரன்**
உதவிக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.



# கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

புவனம் போற்றும் புவனேந்திரன் வயவன் தந்த மாண்புறு மகனாய் மாணவர் தம் மனங்களில் நிறைந்து, மணிவிழா நாயகனாய் மதிப்புறுகின்றார். அவர் தம் பணி நலன் பாராட்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

"அறிஞர்க்கழகு கற்றுணர்ந்து அடங்கல்" என்கிறது வெற்றிவேற்கை. இவ் வாக்கிற்கு இலக்கணமாய் வாழ்ந்தும், வாழவும் வழிகாட்டியாய்த் திகழ்ந்த நல்லாசான் புவனேந்திரன். சிரித்த முகமும் சீரிய நட்பும் பூண்டு கடின பாடமாம் கணித பாடத்தைக் கச்சிதமாய் கற்பித்த கலங்கரை விளக்கு. அதனாலன்றோ "பிரதீபா பிரபா" விருதுக்குப் பாத்திமானார். இவர் என்றும் இன்பம் பெருக்கும் இயல்பினால் எவர் மனதையும் புண்படுத்தா புண்ணியவாளன். அன்பிலே நண்பனை வெற்றிகொள். களத்திலே எதிரியை வெற்றி கொள். பண்பிலே சபையை வெற்றி கொள் என்ற கவிஞர் கண்ணதாசனின் வைரவரிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாய் மாணவர் தம் மனங்களில் மதிப்புறும் மாட்சிமை பெற்று நிற்கின்றார்.

" தாம் இன்புறுவது உலகின் புறக்கண்டு" என்ற வள்ளுவன் வாக்கிற்கு ஏற்றாற் போல சேவையால் உயர்ந்த செம்மலாய் இன்று ஏற்றம் பெற்றிருக்கின்றார். இப் பாடசாலையில் மாண்புறு மாணவனாய், மதிப்புறு நல்லாசானாய், கண்ணியம் மிக்க கல்லூரியின் உப அதிபராய், மற்றும் பிரதி அதிபராய் கல்லூரி வளர்ச்சிக்கு அயராது உழைத்திட்ட உத்தமர் இரண்டு தசாப்தங்களுக்கு மேல் கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டுள்ளார் என்பதை இன்றைய மதிப்பளிப்பு நிகழ்வு பறைசாற்றுகின்றது.

எனவே கல்விக்கூடம் என்பது சமுதாயத்தின் வயல், மாணவர்கள் வளரும் பயிர் அப்பயிரை நன்றாய் வீரியமுள்ளதாய், விழுமியமுள்ளதாய் வளர்த்து நிற்பவர்கள் என்றைக்கும் நினைவு கூரப்படுவார்கள், மதிப்புறுத்தப்படுவார்கள் என்பதற்கு திரு.புவனேந்திரன் அவர்களின் மணிவிழா மலர் என்றுமே சான்றாய் திகழும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஆகவே "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று " என்ற வள்ளுவர் வாக்கிற்கு இலக்கணமாய், நல்லதோர் வீணை நலங்கெடாது வயவன் மைந்தர்கள் பயனுற சிற்பியாய் நின்று செதுக்கிய செம்மல் இளைப்பாறும் இந்நாளில் இன்று போல் என்றும் இன்பமாய் வாழ வாழ்த்தி அமைகின்றேன்.

**மா.ஆனந்தகுமார்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம்.

# ஆளுமையுடன் கூடிய ஒரு சிறந்த கணித ஆசான்

வயாவிளான் மத்திய கல்லூரியில் கடந்த 29 வருடங்களாக ஆசிரியராக, உப அதிபராக, பிரதி அதிபராகப் பணியாற்றி ஓய்வு பெறுகின்ற திரு.வேலாயுதம் புவனேந்திரன் அவர்கள் ஆளுமையுடன் கூடிய ஒரு சிறந்த கணித ஆசான். கல்லூரியின் கணித பாட பெறுபேற்று அடைவுமட்டத்தை சிறப்பாகப் பேணுவதற்கு இவரது பங்களிப்பு அளப் பரியதாகும். இவர் உபஅதிபராக, பிரதி அதிபராகக் கடமையாற்றும் சந்தர்ப்பங்களில் கூட க.பொ.த (சாதாரண) வகுப்பில் ஒரு பிரிவிற்கு கணிதம் கற்பிக்கும் செயற்பாட்டில் மிகுந்த சிரத்தையுடன் ஈடுபடும் ஒருவர். தனது ஓய்வை அண்மித்த காலங்களிலும் சிறப்பான கற்பித்தலை மேற்கொள்பவர். எல்லா மாணவர்களிலும் மிகுந்த அக்கறை கொண்டவர். இவருடைய சுறுசுறுப்பான கற்பித்தல் காரணமாக அடைவுமட்ட அதிகரிப்பு, மற்றும் ஆளுமையான செயற்பாடு என்பவற்றினூடாக "பிரதீபா பிரபா" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவர் பெரியவர், சிறியவர் என்று பாராது எல்லோருடனும் இன்முகத்துடன் பழகும் ஒருவர். இவர் ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றாலும் சென்ற இடத்தில் அவர் தனது குடும்பத்துடன் சிறப்பாகவும், ஆரோக்கியமாகவும் பல்லாண்டு காலம் வாழ எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு.க.ஆதித்தன்**
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (கணிதம்)
வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்.



# தாராள சிந்தனையின் நாயகன்

புகழ் பெற்ற யா/வயாவிளான் மகாவித்தியாலயத்தின் (தற்போது யா/ வயாவிளான் மத்திய கல்லூரியில் இயங்கும்) ஆசிரியர்களில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஆசிரியரும் எனது நண்பருமாகிய திருவாளர் வேலாயுதம் புவனேந்திரன் ஆசிரியர் அவர்கள் இன்று தனது மணி விழா காணும் நன்னாளில் அவரை வாழ்த்துவதில் எனது மனம் பூரிப்படைகிறது. சுமார் 20 வருடங்கள் அவருடன் இணைந்து இதே பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றியது எனக்குப் பெருமையாக இருக்கின்றது. அவரது செயற்றிறன், அனுபவம், ஆற்றல் மற்றும் பொறுமை என்பவை என்னை மிகவும் கவர்ந்தது. இப்பாடசாலையில் நான் அவரை ஒரு தொழிலதிபராக, ஆசிரியராக, ஆலோசகராக, நிர்வாகியாக, தலைமை தாங்கும் அதிகாரியாக எனப் பல்வேறு பரிணாமங்களில் கண்டிருக்கிறேன். தேவைக்கேற்றவாறு தனது பரிணாமங்களை மாற்றி பாடசாலையின் அபிவிருத்திக்காக செயற்பட்டவர். மாணவர்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் வரும்போது அவர்களுடன் கலந்துரையாடி நீதிக்காகப் போராடி சிறந்த தீர்வைப் பெற்றுக் கொடுப்பதில் அவருக்கு நிகர் அவரே. அவர் பாடசாலைக்கு லீவு எடுப்பதில் கஞ்சத்தனத்தையும், பாடசாலை ஆரம்பிக்கும் முன் வந்து பாடசாலை விட்டு கடைசி மாணவர் வெளியேறும் வரை அங்கு நின்று செயற்படுவதில் தாராள நன்மையையும் காட்டியவர் என்பது சிறப்பான விடயமாகும். பாடசாலை நேரத்தில் ஓய்வாக இருந்ததை நான் அவரிடம் என்றுமே பார்த்ததில்லை. ஏதாவது ஒன்றை செய்து கொண்டேயிருப்பார். பாடசாலை மீண்டும் தனது சொந்த இடத்தில் இயங்குவதற்காக பங்காற்றியவர் என்றால் மிகையாகாது. கஷ்ரமான பாடம் எனக் கருதப்படும் கணித பாடத்தை மாணவர்களுக்கு இலகுவாக விளங்க வைப்பதில் வல்லவர். அவர் கற்பித்தலின் போது தன்னை மறந்து கவனஞ் செலுத்தினார் என்பதை பறைசாற்றும் அவர் ஒரு கிறிஸ்தவ சமயத்தவர். அச்சமயத்தில் கூறிய விழுமியங்களுக்கேற்ப வாழ்ந்து காட்டிய ஓர் மனிதர். பல இடப்பெயர்வுகளை இப்பாடசாலை சந்தித்த போது அதை மீண்டும் இயங்க வைப்பதில் பாரிய பங்காற்றியவர் என்றால் அது இவராகத்தானிருக்கும். முக்கியமாகத் தனது உடல், உள, பொருள் வசதிகளை வழங்கி செயற்பட்ட சிறப்பான மனிதர் என்றால் மிகையாகாது.

பாடசாலை நிர்வாகம், பழையமாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பவற்றின் பாலமாக செயற்பட்டு அவ்வப்போது ஏற்படும் சிறுசிறு பிரச்சினைகளை சமாதானப் புறாவாக செயற்பட்டு தீர்த்து பாடசாலையை சீராக செயற்பட ஒற்றுமையாக்கி வைத்த பெருமகன்.

அவரிடம் கல்வி கற்ற பல மாணவர்கள் இங்கும் வெளிநாடுகளிலும் சிறந்து விளங்கிக் கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக குறிப்பாக 1994 கணிதப்பிரிவு (A/L) மாணவர்கள் பலர் இயந்திரவியலாளர்களாக கடமையாற்றிக் கொண்டிருப்பது அவருக்கும் அவர்தம் கற்பித்தல் திறமைக்கும் ஓர் எடுத்துக் காட்டாகும்.

பாடசாலைப் பொது வைபவங்களில் முக்கிய பங்காளியாக நின்று வரவேற்று மற்றும் விருந்தோம்பல் என்பவற்றைச் சிறப்பாக செயற்படுத்தி பலரது கவனத்தையும் ஈர்த்தவர் என்பது கண்கூடு. தனது சக ஆசிரியர்களுடன் அன்பாகப் பேசி அவர்களது ஆதரவைப் பெற்று பாடசாலை வளர உறுதுணையாக நின்ற திருவாளர் வேலாயுதம் புவனேந்திரன் ஆசிரியர் அவர்களின் மணிவிழா காண்பதில் எனது மனம் உவகையுறுகிறது. அவர் தனது ஓய்வு காலத்தில் எல்லாம் வல்ல தேவனின் அருளால் சிறப்பாக தனது குடும்பத்தவர்களுடன் வாழ எனது ஆசிகளும், வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

**நா.ஸ்ரீகணேஸ்**

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்

கணிதம்



# கல்லூரி முதல்வரின் வாழ்த்துச் செய்தி

எமது கல்லூரியில் பழைய மாணவனும், பிரதி அதிபருமாகிய திரு. வேலாயுதம் புவனேந்திரன் அவர்கள் மூன்று தசாப்தங்கள் வயவன் அன்னைக்கு கல்விக்காக அரும் பணியாற்றி அகவை அறுபதில் ஓய்வுக்காக செல்கின்ற வேளையில் அவரின் சேவையினைப் பாராட்டி வெளிவருகின்ற “புவனம்” இதழிற்கான வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

என்னுடைய மூன்று தசாப்த கால அதிபர் சேவையில் இவ்வாறான ஒருவரை கல்விச் சேவையாளரைச் சந்திப்பது பெருமகிழ்வாக உள்ளது. அர்ப்பணிப்பு, கீழ்படிவு, தலைமைத்துவம், பொறுமை, இறை அன்பு போன்ற உன்னத குணாங்களுக்கு உரிமையுடையவர் திரு வேலாயுதம் புவனேந்திரன் அவர்கள்.

இவரது ஓய்வுக்காலம் உன்னதங்கள் நிறைந்த சுபீட்சமாக அமைய எல்லாம் வல்ல கற்பக விநாயகரை பிரார்த்திக்கின்றேன்.

**திரு.வே.த.ஜயந்தன்**
அதிபர்,
யா/வயாவிளான் மத்தியகல்லூரி.



# மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்!

வயவன் அன்னையின் மடி தவழ்ந்து
வல்லமையுடனே கற்றுணர்ந்து சான்றோனாய்
கணிதமெனும் கனமான பாடமதனை
கற்பித்த வயவன் புத்திரனே !

மணிவிழாக் காணும் மாணிக்க நாயகனே !
பணிவான பண்பும் கனிவான மொழியும்
கற்றோர் மற்றோர் என்று பேதமிலா பேச்சும்
சிரித்துப் பேசிடும் மறுத்திடா உள்ளமும்
உங்களுக்குகே உரியதன்றோ!

கூட்டல் விருத்தியோடு பெருக்கல் விருத்தியையும்
பைதகரஸ் தேற்றத்தையும் சொல்லித் தந்த ஆசான்
மழை வெயில் பாராது உடல்நலமும் பாராது
கல்லூரி அன்னைக்காய் வெள்ளை மனதுடன் பாடுபட்ட
சான்றோனே !

பிரதீபா பிரபா எனும் பெருமையான விருதையும்
பெற்ற பெருமகனே உங்களின் மகத்தான பணியால்
எழுந்த புத்திரர்கள் பல்துறை வித்தகர்கள்
சமயத்தில் ஈடுபாடும் சலியாத மனமும் உடையவரே !

கல்வி உலகின் ஏணிப்படிகள் தாண்டிய கல்வியாளன் நீங்கள் அன்றோ
வயவன் அன்னையின் மாணவனாய், ஆசிரியராய்,
உபஅதிபராகி, பிரதி அதிபராகி சுறுசுறுப்பாக
சேவையாற்றிய அறிவின் சிகரமே மணிவிழா
நன்நாளில் வாழ்த்துகின்றோம் உங்களை

அன்புடன் வாழ்த்திடும் மாணவன்
**பாலசுப்பிரமணியம் செந்தூரன்**
பிரதி அதிபர்,
யா/வயாவிளான் மத்தியகல்லூரி.



# பிரதி அதிபர் திரு.வேலாயுதம் புவனேந்திரன் அவர்களின் பணி நிறைவு நயப்புரை

சிரேஷ்ட ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் கடமையாற்றி வந்த திருவாளர் வேலாயுதம் புவனேந்திரன் அவர்கள் "கடமையை செய் பலனை எதிர்பாராதே" என்ற பகவத்கீதை வாசகத்திற்கமைய சேவை புரிந்து அகவை அறுபதினைப் பூர்த்தி செய்து பணி நிறைவு எய்துகின்ற வேளையிலே வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றுறேன்.

இவர் வளம் பல நிறைந்த வயாவிளான் பகுதியில் பிறந்து தனது அறிவாற்றலை வளர்த்தெடுப்பதற்கு யா / வயாவிளான் மத்திய கல்லூரியிலும் ஒரு மாணவனாகி வெளியேறி பின் பல்கலைக்கழகத்தில் கணிதவிஞ்ஞானப் பிரிவில் உயர் கல்வியைப் பெற்று கணித விஞ்ஞான ஆசானாகக் கல்வி உலகில் வெளிவந்தார். பின்னர் தனது சேவையை ஆரம்பத்தில் வெளி மாவட்டத்திலும் இதன் பின் 29 வருடங்கள் தொடர்ந்து தான் கற்ற பாடசாலையாகிய வயாவிளான் மத்திய கல்லூரியிலும் சேவை புரிந்தமை பாராட்டுக்குரியதொன்றாகும்.

மேலும் இவர் மென்மையான சுபாவம் கொண்டவர் எப்போதும் சுறுசுறுப்பானவர். மாணவர்களுடன் அன்பாகப் பழகும் சுபாவம் கொண்டவர். இதை விட பொது விடயங்களிலும் அக்கறை காட்டி வருவார். இவரும் இவரது குடும்பமும் இன்னும் பல சமூக சேவைகள் செய்து வளமுடன் வாழ வாழ்த்தி நிற்கிறேன்.

**திருமதி த.வசந்தராணி**
உபஅதிபர்,
யா/வயாவிளான் மத்தியகல்லூரி.



# வாழ்த்திடுவோம்

அன்பின் உருவாய்
அறிவின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாரினில் உலவி வரும்
கணித ஆசானுக்கு - எனது
இனிய நல் வாழ்த்துக்கள்

வயவன் அன்னையின் மைந்தனாய்
வளர்ந்திட்ட ஆசானே!
கணித மேதையாய் - கருத்துடனே
கற்பித்தல் நுட்பங்கள் அறிந்து
வயவன் சிறார்களை - நல்ல
வளமுடனே வளர்த்திட்டீர்

மார்க்க நெறியில் சிறந்து மாண்புடனே ஒழுகி
சாந்த சொரூபமாய் - நிதமும்
சத்தியத்தின் வழி நின்று
இப்புவியில் அனைவருடனும்
இனிமையாகப் பேசிடுவீர்

மணிவிழாக்காணும்
மாண்புமிகு ஆசானே
வாழ்த்துவதில் மகிழ்வுறும்
ஆசிரியர் நாமே
சேவையில் சிகரம் தொட்டீர்
சிந்தனையில் உயர்வு பெற்றீர்
ஓய்வுக்காலம் நலம் பெறவே
வாழ்கவென வாழ்த்துகிறேன்.

திருமதி சி.சிவலிங்கம்
ஆசிரியர்.



# தன்னடக்கம் கொண்ட செயல்வீரன்

தமிழர் தம் வாழ்வில் அரசியல், பொருளாதார, கல்வி நடைமுறைகள் வாழ்வியற் பண்புக் கோலங்களில் கனதியான மாற்றங்களைக் கொண்ட 30வருட கால ஆசிரிய, உதவி அதிபர் பணியில் இசைவாக்கத்திறனும், செயலூக்கமும் கொண்ட பல நடிபங்களினூடாக கல்விப் புலத்தில் வரலாற்றுத் தடம் பதித்து அகவை 60ல் இளைப்பாறிச் செல்லும் இனிய ஆசானே!

உமது நிறைந்த பண்பும், சேவையை ஆர்வமுடன் செய்யும் ஆற்றலும், பாடசாலையின் பௌதீகவள விருத்தியில் நீவிர் காட்டும் அளப்பரிய பங்களிப்பும், புன்னகை தவழும் மதிவதனமும், மற்றோரை மதிக்கும் பண்பு, நல்ல நிர்வாகிக்குரிய பொறுமை அளவாகப் பேசும் பண்பு, பெரியோராயினும் சரி, சிறியோராயினும் சரி மதித்து நடக்கும் பண்பு, பாடசாலையின் ஒவ்வொரு பகுதியிலும் நீவிர் காட்டும் அக்கறை என்பன தங்களை எல்லோரும் உயரிய இடத்தில் வைத்து மதிப்பதற்கு காரணமாகும்.

எமது பாடசாலை இடம்பெயர்ந்து சென்ற காலத்திலும் சரி, கொட்டகைகள் அமைத்த போதும் வீடு வீடாக ஓலை சேர்த்துக் கிடுகு இழைத்து கொட்டில் மேய்ந்து பாடசாலை ஆக்கி வலிகாமத்தில் முன்னணியில் திகழ்ந்த கொட்டில் பாடசாலைகளில் எம் பாடசாலையைத் திகழ வைத்த பெருமையில் ஒருபங்கு தங்களுக்குரியதென்றால் நிகராகாது. கணித பாடத்தை நயமுடன் கற்பித்து ஆசிரியராக, பொறியியலாளராக, விரிவுரையாளர்களாக, எழுத்தாளர்களாக ஆக்கி அவர்கள் சமுதாயத்தில் தற்போது முன்னிலை வகிக்கின்றனர்.ஒரு ஆசிரியரின் ஒழுக்கம், தன்னடக்கம், சேவையை மதிக்கும் பண்பு, ஆன்மிக ரீதியான பற்று என்பன மனிதனை மனிதனாக வாழ வைக்கும் இத்தகைய அனைத்துப் பண்புகளும் ஒருங்கே காண்பதென்றால் புவன+ இந்திரனிடம் தான் எனக் கூறினால் மிகையாகாது. இத்தகைய உயரிய பண்பாளன் தனது ஓய்வு காலத்தில் எல்லாச் செல்வங்களும் பெற்று சுகநலத்துடன் வாழவேண்டுகின்றேன். விநாயகரின் ஆசியுடன் மீண்டும் வாழ்த்துகின்றேன்.

- வாழ்க வளமுடன் -

**திருமதி கௌ.ஸ்ரீதரன்**

ஆசிரியை,

யா/வயாவிளான் மத்தியகல்லூரி.



# கடமை வீரன் எங்கள் ஆசான்

அகவை அறுபது நிறைவெய்தி பணிநயப்பு பெற்றுச் செல்லும் வயாவிளான் மத்தியகல்லூரியின் பிரதி அதிபர் திரு.வேலாயுதம் புவனேந்திரன் அவர்களுக்கான மணி விழா மலரிற்கான வாழ்த்துச் செய்தியினை அவரது மாணவனாகவும், சக பணியாளனாகவும் இருந்து வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

வயாவிளான் மத்திய கல்லூரியில் ஆசிரியராக, உபஅதிபராக மற்றும் பிரதி அதிபராகவும் கடந்த 29 வருடங்களாக கல்விச் சேவையினை வழங்கிய பெருமை திரு.வே.புவனேந்திரன் அவர்களையே சாரும். இக்கல்லூரியின் வளர்ச்சிப் படியிலே மிக முக்கிய இடத்திலே நட்சத்திரமாக இருப்பவர் இவரே.

பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களது இன்பதுன்பத்தில் மிகவும் உறுதுணையாக முன்னே செல்வது இவரது இயல்பான சுபாவம் ஆகும். ஆசிரியர்களுக்கு ஏதும் பிரச்சனைகள் ஏற்படின் அதனை முரண்பாடின்றி சுமுகமாகத் தீர்க்கும் திறனுடையவர். அது மட்டுமன்றி கல்வி கற்கும் மாணவர்களை நேர்வழியிலே நடாத்தும் நெறியினை இலகுவாக கையாள்வதோடு அவர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை அவர்கள் சொல்லத் தயங்கும் போதே அதையறிந்து தீர்த்து வைப்பதில் சிறந்தவர்.

பாடசாலையின் தேவைகளை சுயமாக உணர்ந்து தானாகவே நிறைவேற்றும் ஒருவர். பாடசாலையின் எந்தவொரு நிகழ்வுகளிலும் முன்னிற்பவர். அதிபராய் ஒப்படைக்கப் படுகின்ற கடமைகளைத் தானாகவும், ஆசிரியர்களுடன் இணைந்தும் பூரணமாக நிறைவேற்றக் கூடியவர். இறைவிசுவாசம் கொண்ட ஒழுக்க சீலராகவும், நேர்மையான கிறிஸ்தவராகவும் வாழ வேண்டும் என்பதில் நெஞ்சுறுதி கொண்டவர். அதோடு மற்ற மதங்களையும் மதிப்பவராக உள்ளார்.

இவர் ஆசிரியப் பணி மட்டுமன்றி உதவி அதிபர், பிரதி அதிபராக பணியாற்றிய போதும் இவரிடம் ஒப்படைக்கப்பட்ட பணி எதுவுமே குறையாக இல்லாது நிறைவாக முடிக்கப் பட்டது. எந்த நிகழ்வானாலும் அது உங்கள் பணி இது இவர் பணி என வேற்று மனிதராக கூறாது இது நம்முடைய பணியென உணர்ந்து முழுமையாக செய்வார். பெரியவர், சிறியவர்வேறுபாடின்றி பேசுவதோடு சுறுசுறுப்பாகவும் இயங்க வல்லவர்.

இவரது பணிகளை சில வசனங்களால் கோடிட்டுகூற முடியாது கடமையுணர்வு, கட்டுப்பாடு, கண்ணியம், விசுவாசம், நேர்மை என்பன இவரோடு கூடப் பிறந்தனவாகும்.1989ம் ஆண்ட முதல் இன்று வரை இவரது கல்விச்சேவையினை எம் பாடசாலை பெற்றுள்ளது என்பது எமக்குப் பெருமையாகும். கசக்கும் என மாணவர்

பின்னிற்கும் கணித பாடத்தினை இலகுவான வகையில் கசக்கிப் பிழிந்து சாறாக மாணவர்களிடம் பருகக் கொடுக்கும் திறமை இவரிடம் காணப்படுகின்றது.

ஓய்வு எனப்படுவது ஓய்ந்திருப்பது இல்லை. தன்னை வேறு ஒரு சமூக பணியில் னை இணைத்துக் கொள்வதற்காக இவ்வளவு காலமும் செய்த பணியில் இருந்து ய்ந்திருப்பதாகவே அமையும். எமக்காகவும் எம் பாடசாலைக்காகவும் தன்னை 29 வருடங்களாக ஆசிரியராகவும், உப அதிபராகவும், பிரதி அதிபராகவும் இணைத்துக் கொண்ட திரு.வே.புவனேந்திரன் அவர்கள் ஓய்வுநிலை அடைவது மனவேதனைக்குரியது ஆனாலும் அவர் தேக ஆரோக்கியத்துடன், நீண்ட ஆயுளினையும் பெற்று சுகவாழ்வு வாழ வேண்டும் என்பதனை ஆசானின் மாணவனாகவும், சகபணியாளனாகவும் இறை ஆசியினை வேண்டி வாழ்த்துகிறேன்.

**நடராசா கிசோக்குமார்**
தலைவர்,
ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/வயாவிளான் மத்தியகல்லூரி.

# வாழ்த்துச்செய்தி

எமது பாடசாலையின் பிரதிஅதிபரும், முன்னைநாள் ஆசிரியரும், பழைய மாணவருமாகிய மதிப்பிற்குரிய வேலாயுதம் புவனேந்திரன் ஆசிரியர் அவர்கள் மணிவிழாக்காணும் இந்நாளில் அவருக்கு வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்வடைகின்றோம். எமது பழையமாணவர் சங்கத்தில் கடந்த காலங்களில் பொருளாளர், உபதலைவர், நிர்வாக உறுப்பினர் ஆகிய பதவிகளை வகித்து பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி பெருஞ்சேவை ஆற்றியதுடன் இன்றும் கூட ஆயுட்கால உறுப்பினராக தனது கடமையை செவ்வனே செய்து கொண்டு வருகின்றார். இவர் பாடசாலையிலே மிகச்சிறந்த அர்ப்பணிப்பான ஆசிரியராக இருந்தது மட்டுமன்றி பாடசாலையின் வளர்ச்சிக்காக பல்வேறு சேவைகளை செய்திருக்கின்றார். இவரது சேவைகளை நாம் அளவிட்டுக் கூற முடியாது "கண்ணன் என் சேவகன் " எனும் பாடலிலே வரும் அனைத்து பண்புகளையும் நாங்கள் இவரிலே காண்கிறோம்.

அவர் பிரதி அதிபராக இருந்தும் கண்ணன் என் சேவகன் போல தன் பதவியைப் பாராது எல்லா நிலையிலும் தன்னைத் தாழ்த்தி சேவை புரிந்து இன்று எங்கள் முன் உயர்ந்து காணப்படுகிறார். ஏனையவர்களும் இவரைப் பின்பற்றுவதற்கு ஒரு முன் உதாரணபுருசராக எம்முன் காட்சியளிக்கின்றார். இவர் ஓய்வு காலத்தில் தமது குடும்பத்துடன் இன்பமாகவும், நலமுடனும், வளமுடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம். இவர் எமது பழைய மாணவர் சங்கத்தினூடாக தொடர்ந்து எமது பாடசாலைக்கு சேவையாற்ற வேண்டுமென அன்பாகக் கேட்டு நிற்கின்றோம்.

**திரு.பொ.பத்மநாதன்**
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்



## பிரதி அதிபர் திரு.புவனேந்திரன் அவர்களின் மணிவிழா வாழ்த்துச் செய்தி

கடந்த பல வருடங்களாக தனது ஆசிரியப் பணியை நேர்மையுடனும் முறைமையுடனும் செயற்படுத்திப் பல மாணவ மாணவிகளை பல்கலைக்கழக அனுமதியை பெறுவதற்கு காரணமாக இருந்ததுடன் ஏனைய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர்.

நான் ஆசிரியப் பணியில் இருந்த போது (1990-1994) அவருடன் சக ஆசிரியராக பணியாற்றும் வாய்ப்பு கிடைத்ததை எண்ணிப் பேருவகையடை கின்றேன். மிக அமைதியான குணத்தினை இயற்கையாகவே கொண்ட இவர் சிரித்த முகத்துடன் என்றும் புரியும் வகையில் மாணவர்களுக்கு கல்வியைப் போதிப்பார். அதுமட்டுமல்லாது பாடசாலை பிரதி அதிபராகவும் தன்னை எம் கல்லூரியின் வளர்ச்சிக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்டு வந்தார். இவர் எம் கல்லூரியை விட்டு இளைப்பாறுவது எவராலும் ஈடு செய்ய முடியாதவொரு இழப்பென்பது மறைக்க முடியாத உண்மை. பலரது வாழ்வில் தனது சேவையால் ஒளியேற்றி வைத்த அவர் தன் வாழ்வில் என்றும் நோய் நொடி இன்றி நலமுடன் வாழ எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி நிற்பதுடன் அவரது ஓய்வுக்காலம் மேலும் நன்றாக அமைய வயாவிளான் பழைய மாணவர்கள் அனைவரதும் சார்பாக வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

**திருமதி. அருணா இராமச்சந்திரன்,**
செயலாளர்,
வயாவிளான் பழைய மாணவர் சங்கம்,
ஐக்கிய இராச்சிய கிளை.

# நிகழ்வுகளின் பதிவுகள் சில...

















# வாழ்த்துச்செய்தி

ஈழமணித்திருநாட்டின் வடக்கே செம்புலமும் நன்னீர்வளமும் செழித்தோங்கும் வயாவிளானில் அவதரித்த நற்குணவான் திரு.வேலாயுதம் புவனேந்திரன் ஆசிரியரின் மணிவிழா மலரில் வாழ்த்துச் செய்தி வழங்க கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு மிகவும் மகிழ்வடைகின்றேன்.

எமது வயவன் அன்னையிடம் கல்வி பயின்று எம் அன்னைக்கு புகழ் சேர்த்த பழையமாணவன் மட்டுமன்றி எம் அன்னையின் கணிதபாட ஆசானாக வந்து தன் சுறுசுறுப்பான கற்பித்தலாலும் நிர்வகிக்கும் திறனாலும் உபஅதிபராக, பிரதி அதிபராக பணியாற்றியவர்.

பெரியவர் சிறியவர் என்ற பாகுபாடு இன்றி எல்லோரோடும் அன்பாகப் பழகும் சுபாவம் உடைய இவர் 1989ம் ஆண்டிலிருந்து 29ஆண்டுகளாக எம் அன்னையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவராவார். தனது அறுபதாவது அகவைதனில் 0207.2018 அன்று தனது உன்னதமான சேவையிலிருந்து ஓய்வு பெறவிருக்கும் வயவன் அன்னையின் பிரதிஅதிபர் இனிவரும் காலங்களில் நலமாக வாழ யேசுபிரான் துணைபுரிவாராக.

**செல்லையா தயானந்தன்**
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

# யா/வயாவிளான் மத்தியகல்லூரி, பிரதி அதிபர் திரு.வேலாயுதம் அவர்கள்

| | |
|---|---|
| முழுப்பெயர் | : திரு.வேலாயுதம் புவனேந்திரன் அவர்கள் |
| தந்தை | : சின்னத்தம்பி வேலாயுதம் |
| தாய் | : அந்தோனியாப்பிள்ளை(ஆசிரியர்) |
| பிறந்த இடம் | : வயாவிளான் தெற்கு |
| பிறந்த திகதி | : 02.07.1958 |
| ஆரம்பக்கல்வி | : யா/புன்னாலைக்கட்டுவன் சைவவித்தியாசாலை |
| இடைநிலைக்கல்வி | : யா/குரும்பசிட்டி பொன் பரமானந்தா ம.வி<br>யா/வயாவிளான் மத்தியகல்லூரி<br>யா/மத்தியகல்லூரி |
| மேற்படிப்பு | : பௌதிக விஞ்ஞானத்துறை<br>யாழ்.பல்கலைக்கழகம் 1979 - 1982 |
| நியமன பாடம் | : கணிதம் |
| துணைவியார் | : திருமதி அன்னமலர் புவனேந்திரன் |
| பிள்ளைகள் | : பு.ஆனந்தன் NDT<br>: பு.மகிழ்மொழி - க.பொ.த.(உ/த), யா/இந்துமகளிர் கல்லூரி |
| சேவை விபரம் | : முதல் நியமனம்<br>♦ கம்பஹா அல் பத்திரியா மகாவித்தியாலயம்<br>02.01.1984 - 28.02.1989<br>♦ வயாவிளான் மத்தியகல்லூரி 01.03.1989 - 2012<br>உபஅதிபர் - 2006 - 2012 வரை<br>பிரதி அதிபர் - 2012 - இன்றுவரை |
| சிறப்புப் பணிகள் | ♦ எமது கல்லூரியின் மீள் குடியேற்றத்திற்காக அரும்பாடுபட்டமை |
| அவர்களது | ♦ தோலகட்டி ஆச்சிரம துறவிகளால் வழிப்படுத்தப்பட்டு போதனைகளைப் பின்பற்றியமை<br>♦ அருட்தந்தை செலஸ்ரீன் அடிகளால் கவரப்பட்டு அவரது எளிமை, பணிவு, இன்சொல், ஒழுக்கம், கட்டுப்பாடு, மனித நேயம் போன்ற பண்புகளை வாழ்வியலில் கடைப்பிடித்தமை. |
| கௌரவம் | : நல்லாசிரியர் விருது வலயமட்டம் (2012) |
| எதிர்பார்ப்பு | : ஆசிரியர்கள் சமூகப் பொறுப்பை உணர்ந்து பணியாற்றுவதன் மூலமாக ஆளுமைப் பண்புகள் நிறைந்த சமுதாயத்தை உருவாக்க முயற்சிக்க வேண்டும். |

# கணித ஆசான்

"எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு" கணிதத்தின் முக்கியத்துவத்தை இற்றைக்கு இரண்டாயிரம் (2000வருடங்களுக்கு முன்பே நிலைநிறுத்தி உள்ளார் திருவள்ளுவர். எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் இது ஔவை மூதாட்டி. அந்த வகையில் கணித ஆசானாக மிகச் சிறப்பாக நீண்ட கால சேவை ஆற்றிய உயர்திரு வே.புவனேந்திரன் அவர்கள் நல்லாசானாக விளங்கியதோடு மட்டுமல்லாது எம் அனைவருக்கும் எளிய முறையில் கணித பாடத்தைக் கற்பிப்பதில் வல்லவர். எமக்கு மிகச் சிறந்த சிந்தனைத் தூண்டியாகவும் இருந்து எமது ஆளுமை விருத்தியில் பெரும்பங்காற்றியவர் ஆவார். கற்பிப்பதில் ஆர்வம் மிக்கவராதலால் தான் கற்பிக்கும் கணித பாடத்தின் மீதான ஆர்வத்தையும், ஈர்ப்பையும் இயல்பாகவே மாணவர்களிடம் விதைத்தவர் என்பது மிகையில்லை. இவ் ஆசானிடம் எனது பொன்னான மாணவப் பருவத்தின் மிக முக்கியமான கல்விக் காலகட்டமாகிய க.பொ.த சாதாரணதரம் மற்றும் க.பொ.த உயர்தரம் என்பவற்றில் கணிதம், தூயகணிதம் கற்றுத் தேர்ந்தேன் என்பது பெருமைக்குரிய விடயம்.

ஆசான் உயர்திரு.வே.புவனேந்திரன் ஆசிரியர் அவர்கள் இறைபக்தி மிக்கவர். அவரது சமய நூலான பைபிளின் வார்த்தைகளைப் பின்பற்றுபவர். மேலும் வகுப்பறையில் அன்பு, பண்பு, ஒழுக்கம், இறைபக்தி போன்ற நற்பழக்க வழக்கங்களையும், கல்வியின் முக்கியத்துவத்தையும், நாட்டிற்கு நற் குடிமக்களாய், சமுதாயத்திற்கு வைரமாய் வாழவேண்டிய முறை பற்றியும் அறிவுரை வழங்குவார்.

இவர் எனது கல்லூரித் தாயின் புகழ்பூத்த பழைய மாணவன். கல்லூரித் தாயின் பழைய மாணவ சங்க உறுப்பினராகவும், பொருளாளராகவும், உபதலைவராகவும் செயற்பட்டு கல்லூரி வளர்ச்சி கண்டு பூரிப்படைந்தவர். 1989ம் ஆண்டில் கல்லூரியில் தன்னை கணித ஆசிரியராக இணைத்துக் கொண்ட விழா நாயகன் திரு.வே.புவனேந்திரன் அவர்கள் தன்னலமற்ற அளப்பரிய சேவையினாலும், சேவை மூப்பின் அடிப்படையிலும் வலயக்கல்வி அலுவலகத்தால் பிரதிஅதிபராக நியமிக்கப்பட்டு இன்று வரை பிரதி அதிபராக கல்லூரி வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றி ஓய்வு பெறுகின்றார்.

இவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் பலர் இன்று பொறியியலாளர்களாக, மருத்துவர்களாக, நிர்வாகத்துறை சார்ந்தவர்களாக, வங்கியாளர்களாக, பாடசாலை அதிபர்களாக, பிரதி அதிபர்களாக, ஆசிரியர்களாக மற்றும் துறைசார் வல்லுநர்களாக தம்மாலான சேவையை நாம் வாழும் சமூகத்திற்கும், நாட்டிற்கும் ஆற்றி வருவது வெள்ளிடை மலை. வையத்துள் வாழ்வாங்கு வாழவைத்த எனது கணித ஆசிரியர் உயர்திரு.வே.புவனேந்திரன் அவர்கள் இன்னும் பல அகவை கண்டு களிப்புற வாழ்த்துகின்றேன்.

- நன்றி -

அன்புசால் மாணவன், **திரு.செ.யோகேஸ்வரன்**
சிரேஸ்ர விரிவுரையாளர் (தரம் II) (பௌதிகவியல்)
பௌதிக விஞ்ஞானத்துறை, திருகோணமலை வளாகம்.



# வாழ்த்துச் செய்தி

யா/ வயாவிளான் மத்திய கல்லூரியின் பிரதி அதிபர் திரு.வே. புவனேந்திரன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். ஆளுமை, கடமையுணர்வு கட்டுப்பாடு ஒழுக்கம் என்பவற்றை தான் கடைப்பிடித்தோடு கல்லூரி மாணவர்களையும் கடைப்பிடிக்க வைத்த பெருந்தகை இவர். க.பொ.த.சாதாரணதரம், க.பொ.த உயர்தரம் என்பவற்றில் கல்விகற்கும் மாணவர்களுக்கு கணிதம் , பிரயோக கணிதம் போன்ற பாடங்களை கற்பித்து அவர்கள் உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்று உயர்கல்வியை தொடர காரணமாய் இருந்தவர். இப்பாடசாலை நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழலால் நான்கு தடவைகள் இடம் பெயர்ந்த போதும் அதிபர் ஆசிரியர்களுடன் இணைந்து அதன் வளர்ச்சிக்கு பலமாக இருந்தவர்.

கல்விச் செயற்பாட்டிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் பக்கபலமாக இருந்து பல சாதனைகளைப் பெற அர்ப்பணிப்புடன் செயலாற்றியவர். மணிவிழாக்காணும் இந்நாளில் பல செல்வங்களும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

**திரு.சி.மணியம்**
ஓய்வு நிலை அதிபர்
யா/ ஏழாலை மகாவித்தியாலயம்

# அர்ப்பணத்திற்கு ஒரு இலக்கணம்

வயாவிளான் மத்திய கல்லூரியில் மிக நீண்ட காலமாக ஒரு நல்லாசிரியராக, பிரதி அதிபராகக் கடமை புரிந்து, அதற்கான விருதுகளைப் பெற்று அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் என முழுமையான பாடசாலை சமூகத்தினதும் அன்பிற்கும், ஆதரவிற்கும், நட்பிற்கும் பாத்திரமாகத் திகழ்பவரே மணிவிழா நாயகன் மதிப்பிற்கும், மரியாதைக்கும், கௌரவத்திற்குமுரிய திரு.வே.புவனேந்திரன் அவர்கள்.

இவர் அன்பும், அருளும் ஆழ்ந்தகன்ற அறிவும், அமைதியும் நிறைந்தவர். இன்முகம் காட்டி இன்சொல் பேசும் இனியவர் பாடறிந்து ஒழுகும் பண்பாளர். எளிமையின் இமயமாக விளங்குபவர், தூய்மையும், உறுதியும் மிக்க மனத்தவர். ஆசிரிய சேவையைத் தெய்வீகமாகக் கருதி தவமாகச் செய்தவர். மதிநுட்பமும், வினைத்திட்பமும் மிக்கவர். ஆசிரிய சேவை வணிகத் தொழிலாக மாற்றமடைவதற்கு முற்பட்ட (குரு) ஆசிரியருடைய உரு இது. இவரைப் போன்ற ஆசிரிய மணிகள் பலர் இன்றும் பணி புரிகின்றனர். இதன் பயன் விளைவாக பாடசாலைகள் வளர்ச்சி பெறும், அறிவும், ஆற்றலும் மானுட மேம்பாட்டிற்கான விழுமியங்களைப் பேணும் நல்லதோர் சமூக உருவாக்கமும் நடைபெறும் என்ற நம்பிக்கை துளிர் விடுகின்றது.

இவரது வகுப்பறைப்பணி, பிரதிஅதிபர் பணி, கல்லூரி வளர்ச்சிக்கான பணிகள் பற்றி ஓரிரு வரிகள்,

ஊசி விழுந்தால் சப்தம் கேட்கும் அளவிற்கு இவரது வகுப்பறையில் அமைதி நிலவும், ஆசிரியரின் மென்மையான குரல் கடைசி வாங்கு மாணவனுக்கும் கேட்கும். தவறு செய்யும் மாணவனை நெறிப்படுத்துவதற்கு கடுஞ் சொல் வராது. உடற் தண்டனை கிடையாது. காட்சிக்கெளியனாய், கடுஞ்சொல் அற்றவனாய் அன்பை ஆயுதமாக்கி கடுதோச்சி மெல்ல எறியும் தந்திரோபாயத்தைக் கையாள்வார். மாணவர் மனமுருகித் திருந்துவார். துடுக்குத்தனத்துடன் துள்ளித் திரிவது மாணவர் இயல்பு என்பதனை நன்றாகவே அறிந்திருந்த ஆசிரியர் வகுப்பறைக்கு வெளியே அவர்களுடன் சகபாடியாக சல்லாபிக்கும் உத்தியைக் கையாண்டதன் மூலம் நல்லுணர்வும், நட்புணர்வும் அடைந்த மாணவர்கள் தாமாகவே கட்சிக்குள் அடங்கினர். உத்தியோகம் புருஷ இலட்சணம் என்பதனை உணர்த்தி பரீட்சைகளில் திறமைச் சித்திபெற ஊக்குவித்தார். பிற்காலத்தில் நல்லதோர் தொழில்புரிந்து, வருமானம் ஈட்டி, இல்லறத்தில் இன்பம் பெற்று, தனக்கும், பிறருக்கும் பயனுள்ள வகையில் சமூகத்தில் பெருமைப்பட வாழ்வாங்கு வாழ்வதற்கான சமூகவியற் சிந்தனைகளை இடைக்கிடையே போதிப்பதிலும் கவனஞ் செலுத்தினார்.

அதிபர்களாகப் பதவியேற்ற பல்வகை ஆளுமை கொண்ட சகல அதிபர்களுக்கும் உற்ற இடத்தில் உதவிக்கரம் கொடுத்து, உறுதுணையாக இருந்து அவர்களின் அன்பையும்,

பாராட்டையும் பெற்றவர். பாடசாலையின் உட்புறக் கடமைகள் அனைத்தையும் காலங் கருதாது , கண்துஞ்சாது, பசிநோக்காது செய்து முடித்தவர். ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் யாவரையும் பணிவோடும், அன்போடும் வரவேற்று அவரவர்க்குத் தேவையான கருமங்களை உடனுக்குடன் நிறைவேற்றி வைத்தவர். அவரை அணுகிய எவரும் மனவிரக்திக்கு ஆட்பட்டது கிடையாது.

கல்லூரி வளர்ச்சிக்காக அவர் பட்டபாடுகள் பல. ஏச்சும், பேச்சும் அதிகம். போற்றுவார் போற்ற தூற்றுவார் தூற்ற கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவக்கூடிய எல்லாக் கருமங்களிலும் விசுவாசத்தோடு நம்பிக்கையுடன் துணிச்சலாக ஈடுபட்டார். வளர்ச்சிக்குத் தடையான எந்தச் செயல்களுக்கும் துணை போகவில்லை. " ஒரு முட்டை போட்டுவிட்டு கொக்கரிக்கும் கோழி போல ஆரவாரம் போடாது ஆயிரம் முட்டைகளை இட்டுவிட்டு அமைதியாக இருக்கும் ஆமைக்கு நிகரானவராக விளங்கினார். தளம்பாத நிறைகுடமாகவே இருந்தார்.

ஒரு பிரதி அதிபர், பாடசாலை பழைய மாணவர் சங்கம், அபிவிருத்திச் சங்கம் என்பவற்றின் மாதாந்தக் கூட்டங்களுக்கான அறிவித்தலை அங்கத்தவர்களின் வீடுகளுக்குச் சென்று விநியோகிக்கும் பணிவுக்கும், எளிமைக்கும் நிகர் யாது?

" பணியுமாம் என்றும் பெருமை – சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து " என்ற பொய்யா மொழிக்கு மிகப் பொருத்தமுடையவராக விளங்கி கல்லூரித் தாயின் வாழ்வுக்கும், வளத்திற்குமாக கடுமையாக அர்ப்பணிப்போடு அயராது உழைத்த பெருமகனே புவனேந்திரன் அவர்கள்
"பெருமைக்கும் ஏழைச் சிறுமைக்கும் அவரவர் கருமமே கட்டளைக்கல்" !

நான் வயாவிளான் மத்திய கல்லூரியில் 1953ல் இணைந்தபோது திரு.புவனேந்திரனின் தாயார் எனது குருவாக இருந்தவர். எமக்கு அயலில் சிறிது காலம் குடியிருந்தவர்கள் எனது சகோதரி குமாரசாமி செல்லம்மாவுடன் இவர்கள் கொண்டிருந்த தொடர்பு காரணமாக குடும்ப உறவாகப் பரிணமித்தது. பாடசாலை சமூகத்தைச் சேர்ந்தவன் என்ற வகையிலும், இனிமையாக உறவாடுபவர் என்ற வகையிலும் அவருக்கும் எனக்கும் இடையில் நட்புறவு வலுப்பெற்றது. அவர் எனக்கு உதவிகள் பல செய்தமையால் நன்றி உணர்வும் உள்ளது. எனக்கு ஜனாதிபதி விருது கிடைத்தமைக்கு உதவியவர் என்பதையும் அறிவேன் . இவை எதுவும் அவர் பற்றிய எனது மதிப்பீட்டுக்கு மாசு ஏற்டுத்தவில்லை என்பதனை வினயத்துடன் தெரிவிக்கின்றேன். மணிவிழா நாயகன் திரு.புவனேந்திரன் அவர்களும், அவரது குடும்பத்தவர்களும், அருட் பேராற்றலின் கருணையினால் உடல் நலம், ஆன்மீகநலம், சமூகநலம், நீளாயுள், நிறைசெல்வம், உயர்புகழ், மெய்ஞ் ஞானம் பெற்று ஓங்கி வாழ வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

**T.V கிருஷ்ணசாமி**
ஓய்வு பெற்ற உள்ளூராட்சி ஆணையாளர்



# மறைக்கலைத்திட்டத்தால் உயர்ந்த மாமனிதன்

மறைக்கலைத்திட்டத்தின் மூலமாக மாணவர்களை உயர்த்தும் ஆசிரியர் ஒருவருக்கு மாமனிதன் பட்டம் கொடுக்க வேண்டும் என்று நினைப்பவன் நான், அந்த வாய்ப்பு எனக்கு கிடைத்தால் புவனேந்திரன் ஆசிரியருக்கு அந்த விருதைக் கொடுப்பேன். அதற்கு தகுதி உடையவர் அவர்தான்.

வயாவிளான் மத்திய கல்லூரியிலே நான் புதிதாக சென்றபோது யாரை முன் மாதிரியாக கொள்ளலாம் என்று ஆசிரியர்கள் அனைவரையும் பார்த்தேன் அந்த வேளையிலே,

கட்டுறுதி உள்ள உடல் கண்ணிலே நல்ல குணம்
ஒட்டுறவை நன்றாய் உணர்த்திடும் சொல்
இங்கிவற்றால் தங்கவென்று உளதே.....

என்றெண்ணி இவரை மகிழ்ச்சி கொண்டு பின்பற்ற ஆரம்பித்தேன். ஆனால் தோற்றுவிட்டேன். நான் சைவன் என்பதை அவர் என்னை பார்த்த அடுத்த நிமிடமே உணர்ந்திருப்பார். ஆனால் அவரை கிறிஸ்தவர் என்ற அடையாளம் காண ஒரு வருடம் எடுத்தது. நான் இந்து, மன்றத்துக்கு பொறுப்பாசிரியராக இருந்த காரணத்தால் கீரிமலைக்கு மாணவர்களை அழைத்துச் செல்வதற்கு ஒரு ஆசிரியரை உதவிக்கு கேட்பதற்கு இவரை கேட்டேன் இவரும் சம்மதித்தார். ஆனால் கோயிலுக்கு வந்தபோது தான் அவர் கிறிஸ்தவர் என்பதை அறிந்து கொண்டேன். அவருடைய நடத்தையால் மறுநாளே வயவன் என்பதையு ணர்ந்து கொண்டேன். ஆனால் சமயத்துக்குரிய வேடமும் இல்லை. மனிதப் பண்பிலே உயர்ந்து நின்றார். மாணவர்கள் பாடசாலையை மதிக்க வேண்டும். பாடசாலைக்கு சேவை செய்ய வேண்டும் என்று நான் பல தடவை உரையாற்றியிருப்பேன். ஆனால் ஒரு தடவை கட்டளையிட்டுச் சொல்லாது பாடசாலையில் நிற்கின்ற முழுநேரமும் பாடசாலை அன்னைக்கு சேவை செய்வது என்ற மனநிலையில் தான் சிரேஷ்ட ஆசிரியர் என்றோ பிரதிஅதிபர் என்றோ அவர் கருதியது கிடையாது. நிர்வாகத்தை நடத்துகின்ற நிலையிலும் நிற்பார் அடுத்தகணம் சிற்றூழியன் போல் பாடசாலை தோட்டத்திற்கு நீர் பாய்ச்சுவார். மாணவர் பின்பற்றி நடக்கக் கூடிய முன்மாதிரி மாணவன், பழைய மாணவர் பின்பற்றக்கூடிய பழைய மாணவன், ஆசிரியர்கள் பின்பற்றக்கூடிய ஆசிரியர், அதிபர்கள் பின்பற்றக் கூடிய முன்மாதிரி அதிபர் முழுமையாக பார்த்தால் மறைக்கலைத்திட்டத்தால் உயர்ந்து நிற்கும் மாமனிதன் என்று வாழ்த்துகிறேன்.

வாழ்க பல்லாண்டு வளமுடன் வாழ்க !

**சைவப்புலவர் செ.பரமேஸ்வரன்**
அதிபர், யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்



# வாழ்த்துப்பாமாலை

நல்லோர்கள் வாழ்ந்த மண் - நலனோடு புகழ்
வசாவிளான் என்னும் பதியினிலே
வேலாயுதம் அந்தோனிப்பிள்ளை எனும் மனங்கள் இணைந்ததன் பயனாய்
புகழ் சேர்க்கவென வாழ்வில் புவனேந்திரன் - உதித்தார்
வாழி நீடூழி காலம் வாழி

தான் பெற்ற கல்விதனை தன்னோடு - அழிந்திடாது
பிறர்பெற வேண்டுமென்ற பெருமனதுடனே
கணித பாடமதனை விளக்கமாக கற்பிக்க
விருப்புடனே நாமும் அதை பக்குவமாய் பெற்றிடவே
வழிசெய்த எம் ஆசானை வாழ்த்துகின்றோம்
நீடூழி காலம் வாழ்கவென்று

சிந்தனைச் சிற்பிகளாய் சாதனைச் செல்வங்களாய்
சுதந்திர நாட்டிற்கு வளம் சேர்க்க
வார்த்தெடுக்கும் வள்ளலே
ஆசிரியராய், பகுதித்தலைவராய், உப அதிபராய், பிரதி அதிபராய்
வாழ்வில் பெருமைகளைப் பெற்றிட்ட
வாழ்வியல் புத்தகமே வாழ்க பல்லாண்டு

எத்தனையோ உள்ளங்களை ஏற்றங் காண வைத்த உள்ளம்
இத்தரணியில் இன்பங்கள் பல கண்ட உத்தமனே
காலமெல்லாம் போற்றுகின்றோம் எம் ஆசானை
அழியாது உம் சேவை ஆண்டு தான் சென்றாலும்
பாரினிலே பெற்ற புகழ் என்றும் மாறாது
பலகோடி வாழ்த்துடனே பாமாலை சூடுகின்றேன்
மனது நிறை ஆசானே வாழ்க வாழ்க

**சூ.சசீதரன், அதிபர்**
யா/வட்டு கார்த்திகேய வித்தியாலயம்,
வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை.

# நிகழ்வுகளின் பதிவுகள் சில...

















# நேரமுகாமைத்துவ திட்டமிடலின் முக்கியத்துவம்

இன்றைய கடும்போட்டி நிலவுகின்ற சூழலில் நாடுகள், நிறுவனங்கள், மற்றும் தனிநபர்கள் போன்றோர் நேரத்தை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்காக கற்றல்களைக் கொண்டிருப்பது ஓர் இன்றையமையாத விடயமாகக் காணப்படுகின்றது. நேரத்தை வினைத்திறனாக பயன்படுத்தாவிடத்து மனஅழுத்தம், அடிக்கடி கோபப்படல், முரண்படல் ஆகிய விரும்பத்தகாத குணவியல்புகள் உருவாகி வினைத்திறனான இலக்கை அடைவதில் தடையை ஏற்படுத்தும். எனவே நேரத்தின் முக்கியத்துவம் பற்றி இக்கட்டுரை யில் ஆய்வு செய்யப்படுகின்றது.

"நேரம் மணியானது" " காலம் பொன்னானது" நேரத்தையும், காலத்தையும் வீணாக்கியவன் முடத்துக்குச் சமமானவன். அதனை விட நேரமும் கூடி வர வேண்டும் காலமும் கனிந்து வர வேண்டும். என்ற எண்ணிக் கொண்டு வானத்தைப் பார்த்துக் கொண்டிருப்பவன் இறந்தே பிறந்ததற்குச் சமமானவன். இவனை விட மிகப்பெரிய அடிமுட்டாள் யாரும் இருக்க முடியாது.

நாம் எந்த விடயத்தை எடுத்துக் கொண்டாலும் பருவத்தில் பயிர் செய்யப் பழகிக் கொள்ள வேண்டும். ஒரு மனிதனுக்கு ஒவ்வொரு வயதிலும் ஒவ்வொரு தேவை உள்ளது. தேவைகளும் எதிர்பார்ப்புக்களும் எப்படியோ சங்கிலித் தொடராய் நம்மை வந்து கட்டிக் கொண்டேயிருக்கும். நாம் முன்கூட்டியே திட்டமிட்டு எதனையும் செய்யப் பழகிக் கொள்ள வேண்டும்.

மனித ஆயுட்காலம் வரையறுக்கப்பட்டது. இது ஒரு குறுகிய காலப்பயணம். வாழ்க்கை விடை இல்லாத வினா அல்ல. முற்றுப்புள்ளி எப்போது வேண்டுமானாலும் வரலாம். நமது நேசத்தையும் காலத்தையும் ஒரு விநாடி என்றாலும் பயனற்ற நிலைக்கு மாற்றி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். முதுமைக்குப் பின் ஓய்வு அவசியம் என்பதை உணர்ந்து அதற்கு முன்னர் நம்மை நாமே நன்றாக தயார்படுத்தப் பழகிக் கொள்ள வேண்டும்.

நம் வாழ்க்கையில் சிறிய தாமதம் கூட நமது வயதையும், காலத்தையும் வீணடித்து விடும். "நன்றே செய் அதுவும் இன்றே செய் " என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும்.

இன்றைக்கு நாம் ஒரு குழந்தைக்கு அந்தந்த வயதுக்குரிய அறிவியலை ஏற்படுத்திக் கொடுக்கிறோம். படிப்பை முடித்துவிட்டு நேரில் நம்மைத் தேடி வரவேண்டும் என்று எண்ணும் சிலரும் வாழ்க்கையில் அடிமட்டத்தில் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களுக்கு தொழில் வழிகாட்டல் அவசியம். இல்லாவிட்டால் தேவையற்ற சுற்றுப்புற சூழலில் சிக்கிக் கூடாத சகவாசத்தில் சீரழிந்து விடக்கூடும். இவர்களுக்கு காலத்தின் பெறுமதியை உணர்த்தி ஒளிமிகுந்த எதிர்காலத்தைக் காட்ட முயற்சி செய்ய வேண்டும்.

இன்னும் சிலரோ தூங்குவது உண்ணுவது தொலைக்காட்சி, திரைப்படம் என்று காலத்தில் பெறுமதியை மறந்து விடுகின்றனர். இன்ரநெற், பேஸ்புக், மெகாதொடர் எனப் பொழுதை இழப்பவர்களும் உண்டு. இவர்கள் பொன்னான நேரத்தை மண்ணாக்காமல் பிள்ளைகளுக்குப் பல விடயங்களில் வழிகாட்டியாகத் திகழ வேண்டும்.

ஆகவே வயது, காலம், செல்வம், ஓய்வு, ஆரோக்கியம் இவை சென்றால் திருப்பி வராது. இளமை மறையு முன்னர் செல்வத்தையும் நோய் வருமுன் ஆரோக்கியத்தையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நேரம் உண்மையில் பெறுமதி மிக்கது. விலைமதிக்கக் முடியாதது. இன்று சிலர் எதற்கெடுத்தாலும் தனக்கு நேரமில்லை என்கின்றனர். இவர் தன் நேரத்தை திட்டமிட்டு ஒழுங்கமைப்பு செய்து இயங்காததன் விளைவே. காலத்தை சரிவர முகாமைத்துவம் செய்வது தனிமனிதப் பொறுப்பாகும். நேரத்துக்கு ஒரு வேலை வேலைக்கு ஒரு நேரம் என்ற வகையில் நம்மை நாம் பயிற்றுவிக்க வேண்டும். நாளையை இன்றே திட்டமிட்டுக் கொள்ள வேண்டும்.

வெட்டி வேலைகள் விடயங்களுக்கு காலத்தை நேரத்தை ஒதுக்கலாகாது. கருத்தரங்கு, பயிற்சிப்பட்டறை, சமகாலத்தில் ஏராளமாக, தாராளமாக உள்ளன. தெரிந்தவர், நண்பர்கள், சகபாடி, உறவினர்கள் அழைக்கிறார்கள் என நியாயம் சொல்லிக்கொண்டு வீணானவர்களுடன் சேர்ந்து தானும் தனது பொன்னான நேரத்தை மண்ணாக்கலாகாது.

ஒரு மனிதன் காலை எழும்புவதிலிருந்து இரவு தூக்கத்திற்குச் செல்லும் வரை அனைத்துச் செயற்பாடுகளிலும் நேரம் செல்வாக்குச் செலுத்துகின்றது. நேரத்தின் பெறுமதியை எம்மால் மதிப்பிட முடியாது. அதனை நிறுத்தி வைக்கவோ, திரும்பப் பெறவோ முடியாது. நேரம் இழந்தது இழந்ததாகவே இருக்கும் மீண்டும் அதனைப் பார்க்க முடியாது. நேரத்தைப் பிடிக்க வேண்டுமெனில் அது உன்னை எதிர் கொண்டு வரும்போது பிடித்துக் கொள் கடந்த பின் பிடிக்க முடியாது.

நேரத்தை வீணடிப்பது வாழ்க்கையை வீணடிப்பதற்குச் சமமானதாகும். எனவே நேரத்தின் முக்கியத்துவத்தை அறிந்து அதனை முகாமை செய்து செயற்பட வேண்டும். ஒவ்வொரு தனி நபருக்கும் தமது இலக்கை அடைவதற்கு நன்கு திட்டமிடல் அவசியம். அத்திட்டமிடலானது நேரத்துடன் பின்னிப் பிணைந்து காணப்படுவதால் நேரத்தை முகாமை செய்ய வேண்டிய தேவையுள்ளது. இத்தகைய நேர முகாமைத்துவத்தை பாடசாலை ஆசிரியர்கள் விளங்கிக் கையாளுமிடத்து பாடசாலை என்ற நிறுவனம் முழுமையாகவே வினைத்திறனும், விளைதிறனும் மிக்கதாக விளங்கும். பாடசாலையின் பௌதிக நிதி

மற்றும் மனிதவளம் தொடர்பாக விரயங்கள் ஏற்படுவதையும் தவிர்த்துக் கொள்ள முடியும்.

ஆசிரியர் ஒவ்வொருவரும் தமக்குக் கிடைக்கும் நேரத்தை சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமானால் நேரம் தொடர்பான எண்ணக்கருவை ஒழுங்காகத் திட்டமிட்டு பயன்படுத்திக் கொள்வது அவசியமாகும். ஆசிரியர்களை முழுமையான தொழில் வாண்மைத்துறையினராகவும், வினைத்திறனும், விளைதிறனும் மிக்கவர்களாகவும் மாற்றியமைப்பதில் நேர முகாமைத்துவம் முக்கியமான பங்கு வகிக்கின்றது.

எனவே நேரமானது ஓடிக்கொண்டேயிருக்கும். அதனை நாம் தக்க முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நேரமானது விலை மதிக்க முடியாத பெறுமதி வாய்ந்த ஒன்றாகும். ஆகவே நாம் நேரத்தை முகாமை செய்து பயன்படுத்த வேண்டும்.

உசாத்துணை நூல் : ஆசிரியரை விளைத்திறன் மிக்கவராக்கல் - மா.சின்னத்தம்பி

**திருமதி அகிலா குபேந்திரநாதன்**
(B.com(Hons) Dip.in.Edu.)(வயவன்)
முன்னாள் ஆசிரியர்



# வயவன் அன்னையின் கணித சிற்பி

யா/வயாவிளான் மத்திய கல்லூரியின் புகழ் பூத்த கணித ஆசானும், பிரதி அதிபராகவும் விளங்கி மணி விழாக்காணும் திரு.வே. புவனேந்திரன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நான் இப்பாடசாலைக்கு பிரதி அதிபராக கடமையேற்க வரும் போது இன்முகத்தோடு வரவேற்று உபசரித்த உத்தமர். மாணவர்களுக்கு கசப்பான பாடமாகிய கணித பாடத்தை மிகவும் நுணுக்கமாகவும் விளங்கக்கூடிய முறையிலும் கற்பிக்கக் கூடிய ஓர் ஆசான். வயவன் அன்னையின் மாணவச் செல்வங்களுக்கு கணித எண்ணக்கருக்களை இரண்டு தசாப்தங்களுக்கு மேல் போதித்து வந்தார். எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகக்கூடியவர். இவருடைய ஓய்வுக்குப்பின் பெரிதும் பாதிக்கப்படக்கூடியவை எமது பாடசாலையின் அழகிய பூமரங்கள், செடிகள், கமுகு மரங்கள் போன்றவையே. ஏனெனில் பாடசாலையில் காணப்படுகின்ற எல்லாத் தாவரங்களுக்கும் தனது ஓய்வு பாடவேளை களிலும் பாடசாலை விடுமுறை காலங்களிலும் தண்ணீர் ஊற்றி அதனை பராமரிக்கும் உத்தமர் இவரே ஆவார். என்னுடன் கலந்துரையாடும் போது பாடசாலையில் கணித பாட சித்தி வீதத்தை அதிகரிக்க பல திட்டங்களை வகுத்து வழங்குவார். காலையில் மேலதிக வகுப்புக்கள் நடைபெறும் காலத்தில் யாராவது ஆசிரியர் வரத் தாமதமாகினால் உடனடியாக வெண்கட்டியுடன் சென்று படிப்பிக்கத் தொடங்கிவிடுவார். தனது ஓய்வான பாடவேளைகளில் எந்த வகுப்பிற்காவது ஆசிரியர்கள் சமூகமளிக்காதவிடத்து உடனே சென்று கற்பிக்கக் கூடிய உத்தமர்.

பாடசாலையில் நடைபெறுகின்ற விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா, ஒளி விழா, தமிழ்த்தின விழா போன்றவற்றிற்கு முன்னின்று ஒழுங்குகளை மேற்கொள்ளுவார் தான் கிறிஸ்தவர் என்ற பாகுபாடின்றி பாடசாலைகளில் நடைபெறும் எல்லா சமய நிகழ்வுகளிற்கும் தன்னால் முடிந்த உதவிகளை வழங்கும் பண்புடைய ஓர் மனிதர். அதிபர், ஆசிரியர்கள், சக ஊழியர்களுடன் பண்பாகப் பழகக்கூடியவர். எமது பாடசாலை ஆசிரியர்களின் வீடுகளில் நடைபெறும் எந்த நிகழ்வுகளுக்கும் தவறாது சென்று சுகதுக்கங்களில் பங்கேற்கும் ஓர் முன்னோடி இவர்.

கல்விப் புலத்தில் புகுந்து கல்வி சமூகத்திற்கு அர்ப்பணிப்பு மிக்க சேவைகளை ஆற்றி அகவை அறுபதை பூர்த்தி செய்து மணிவிழாக்காணும் எமது அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய ஆசான் தன் ஓய்வுக்காலம் சிறப்புற அமைந்து நீண்ட காலம் சுகவாழ்வு வாழ இறைவனின் நல்லாசியும் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**திரு.பொ.சிவரஞ்சன்**

அதிபர்.

யா/வட்டுமேற்கு அ.மி.த.க பாடசாலை.



# பெருந்தகையாளன் புவனேந்திரன் ஆசான்

ஆசிரியப்பணி என்பது பல வகிபாகங்களை ஒன்றிணைத்து உயரிய பணியாகும். அத்தகைய வகிபாகங்கள் அனைத்தையும் ஒருங்கே பெற்றுக் கொண்ட உன்னத ஆசான் புவனேந்திரன் அவர்கள். கடமைஉணர்வு, கண்ணியம், கண்டிப்பு என்பவற்றை தன்னகத்தே கொண்ட ஆசான் ஆவார்.

கணித பாடத்தில் புலமையும் சாதாரண மாணவர்களுக்கு கற்பிக்கின்றபொழுது இலகுவாக விளங்கக் கூடிய வகையில் கற்பிக்கும் வல்லமையும் பெற்றவர். பெரும்பாலும் மெல்லக்கற்கும் மாணவர்கள் மீது அக்கறை அவர்களை க.பொ.த(சா/த) பரீட்சையில் சித்தியடையக் கூடிய வகையில் கற்பித்தல் நுட்பங்களைக் கையாண்டு அவர்களின் சித்தி வீதத்தைத் தொடர்ந்து அதிகரிக்கச் செய்தவர். வகுப்பறைக்குச் சென்று பாடப் பிரவேசத்திற்கு முன்பு மாணவர்களுக்குப் பல அறிவுரைகளைக் கூறுவார். மாணவர்களின் கல்வி, ஒழுக்கும், அவர்களுடைய எதிர்காலம் என்பவற்றிலம் மிகுந்த அக்கறையுடன் செயற்படுவார்.

கற்பித்தல் பணியைத் தவிர இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், பாடசாலையின் அபிவிருத்தி, பாடசாலை, சமூக உறவு என்பவற்றிலும் ஆர்வத்துடனும், அர்ப்பணிப்புடனும் செயற்படுவார். பாடசாலைக் கடமை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களிலும் பாடசாலையின் அபிவிருத்திக்காக தன்னுடைய மகத்தான பணியை வழங்குபவர். பாடசாலையில் எந்தவொரு வேலையானாலும் தானே உரிய இடத்தில் நின்று அந்த வேலையை செய்து முடிப்பார். அவரிடம் இருக்கின்ற உயரிய பண்பு யாதெனில், எந்தவொரு காரியத்தையும் மறுக்காது, மனம் சலிக்காது, தனிப்பட்ட முறையில் வேலைச்சுமைகள் இருந்தாலும் அவற்றையும் பொருட்படுத்தாது கல்லூரியின் பணிகளை கடமை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களிலும் தன் சொந்தப் பணியாகக் கருதி செய்து முடிப்பார்.

வயாவிளான் மத்திய கல்லூரியில் கல்வியினைப் பெற்ற பின்பு பல்கலைக்கழகம் சென்று பி.எஸ்.சி பட்டம் பெற்று ஆசிரியப் பணியின் பொரும்பாலான காலப்பகுதியில் இக் கல்லூரியிலேயே கடமையாற்றி உப அதிபராக, பிரதி அதிபராக கல்வியிலும், நிர்வாக விடயங்களிலும் கண்ணுங்கருத்துமாக செயற்பட்டு இன்று மணிவிழாக்காணும் புவனேந்திரன் ஆசிரியரும் அவரது குடும்பத்தாரும் நலமுடன் வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் புரியப் பிரார்த்திப்பதோடு உளமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ச.சுபாஸ்கரன்**
ஆசிரியர்,
யா/வயாவிளான் கல்லூரி

# செவ்விய சுடரே வாழி

பாரெலாம் புகழ் கொழிக்கும்
பேரெழில் வயாவிளான் மத்திய அன்னை
சீர்மேவு சேவை தந்த வேலாயுதம் புவனேந்திரன்
சேர் புகழ் பொலிந்து வாழி

வயாவிளான் பதி பயந்த
தொல் குலக்குணக் குன்றே
பள்ளிக்கு உபபதியாய், பகுதித் தலைவருமாய்
கணிதத்தின் கலங்கரை விளக்காய்
பாங்குடன் பணி புரிந்த வள்ளலே வாழி ! வாழி!!

பாரிய புலப்பெயர்வு தந்த வடுவினிலும்
கச்சாய் அல்லாரை யெலாம்
பூனையாய் காவிச் சென்று
கல்வி தந்து புகழ் காத்து
சேவையால் நெடிதுயர்ந்த செம்மலே வாழி ! வாழி!!

அழைத்து வந்தவர்கள் அடித்துத் துரத்தலாமா
இகத்தில் கொடுமையன்றோ
மாணவர் திருந்த வழிகாட்ட வேண்டுமன்றோ
ஓட விரட்டி உபத்திரம் கொடுக்கலாமோ

புனித வேதம் சொல்லவில்லை
பாவச்சுமை சுமந்த வள்ளலும் சொல்லவில்லை
அவன் மைந்தன் நானும் அதற்கிடம் கொடுக்கமாட்டேன்
அன்பினால் அணைத்திடுவேன் - என
மகாத்மாவாய் வாழ்ந்த வள்ளலே வாழி ! வாழி!!

எளிமையாய் கணிதமூட்டி
பொறுமையாய் ஒழுக்கம் தந்து
வேதாகமம் செப்பும் வழி
மனச்சாட்சிக்காய் உழைத்து நின்றீர்
பழைய மாணவனாய் பள்ளியின்
புகழ் காத்த மைந்தனே வாழி ! வாழி !!

பதவி தனில் உயர்ந்த போதும்
மற்றோரை வஞ்சியாது பொறை காத்த மைந்தா
ஆசானாய் மட்டுமன்றி காராளனாய்
கண்ணெனக் கடமை காத்து
ஆறு பத்து வருடம் பூத்த
புவனம் ஏற்றும் புண்ணியத் திருமகனே
புவனம் ஏழிலும் புகழ் பரப்பி
எண்ணியவை நிறைவாய்ப் பெற்ற
பாரினில் செல்வமெலாம்
சேவையின் அகல்விளக்காய்
செவ்விய சுடரையேற்றி
என்றென்றும் வாழ்க வாழ்க .....

**இ.மகேஸ்வரன்**
ஆசிரியர்,
யா/இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.



# வயவன் மைந்தனுக்கு வாழ்த்துக்கள்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவன் வானுலகத்தில் உள்ள தெய்வ முறையில் வைத்து மதிக்கப்படுவான் என்பது பொய்யாமொழிப் புலவரின் பொருள் பொதிந்த கூற்றாகும்.

இந்த வகையில் இறை விசுவாசமும், மானிடநேயமும், பொறுப்புணர்வும் மிக்கவர் எங்கள் ஆசான் என்றால் அது மிகையாகாது.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் ஒழுக்க விதிகளின்படி உதாரண புருஷராக வாழ்ந்து, நல்லதொரு சமுதாயத்தின் தூண்களான சிறுவர்களின் உயர்ச்சிக்காக, அயர்ச்சியின்றி செயற்படும் பிரதி அதிபர் அவர்களை அகமும் முகமும் மலர வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

மூன்று தசாப்தங்களாக ஒரே கல்லூரியில் பணியாற்றி சிறந்த கல்விப் பாரம்பரியத்தைக் கட்டிக்காப்பதென்பது இலகுவான விடயமல்ல. பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய ஆசானின் அபரிமிதமான பணியினை அவர் நடைபயின்ற எம் கல்லூரியின் செம்மண்ணும் தாவரங்களும் கூட ஆழமாக எடுத்துரைக்கும்.

பிரதி அதிபர் என்ற பெருமையின்றி விடுமுறைக் காலங்களிலும் கல்லூரிக்கு வருகை தந்து, தான் நேசித்த தாவரங்களின் பசுமை குன்றிவிடாத வண்ணம் நீர்பாய்ச்சும் வேலைகளைத் தனியொருவராக நின்று செய்து முடிக்கும் பெருமனம் படைத்த இவரின் கற்பித்தல் திறனுக்கு நிகரேது?

கட்டாய பாடமான கணிதத்தில் அனைத்து மாணவர்களும் சித்திபெற வேண்டும் என்னும் ஆதங்கத்தில் மேலதிக வகுப்புக்கள் நடாத்தி சித்திவீதத்தை அதிகரிக்கும் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலே முன்னின்றுழைத்தமையை மறக்க முடியுமா?

அகவை அறுபதில் மணிவிழாக்காணும் எம் ஆசானின் ஓய்வுக்காலம் சிறப்புற இறையாசியை வேண்டிநிற்கின்றேன்.

**திருமதி.கிருஷ்ணவேணி சிங்கராஜன்**
ஆசிரியை
யா/வயாவிளான் மத்திய கல்லூரி

# நிகழ்வுகளின் பதிவுகள் சில...




















# வேரும் விருட்சமும்



முளைத்து செடியாகி விருட்சமாகி பயன் பல தருகின்ற வித்தானது முளைக்கின்றபோது முதலில் முளைப்பது அதன் வேர்கள். ஏனெனில் அவ்வித்திற்கு ஆதாரமாகவும், ஊட்டத்தை வழங்குவதாகவும் அவை தொழிற்படுகின்றன. வேர்களின் ஆரோக்கியமும் செயற்திறனுமே ஒரு விருட்சத்தின் செழுமைக்கும் நிலைத்திருப்புக்கும் ஆதாரமாக அமைகின்றன. புயலோ பெருமழையோ வருகின்றபோதும் விருட்சத்தினைத் தாங்கி தக்கவைக்கின்ற பணியைச் செவ்வனே நிறைவேற்றுகின்றன இவ்வேர்கள்.

இவ்வேர்களை ஒத்ததே ஆசிரியப் பணியாகும். ஆசிரியர் என்னும் பதம் குற்றங்களை நீக்குபவர் எனப் பொருள்படும். மாணவர்களின் எதிர்கால விருத்திக்காக நிகழ்காலத்திலே அவர்களைச் செப்பனிட்டு மெருகூட்டும் பணி அவர்களுடையதாகும். இத்தகைய உயர் ஆசிரியப் பணிக்கு ஒப்பற்ற உதாரண புருசராகத் திகழ்பவரே திரு. வேலாயுதம் புவனேந்திரன் அவர்கள். ஒரு நிலக்கரிக் கப்பலை இயக்குவதற்கு அதன் அடித்தளத்திலே பலர் கடுமையாகவும் தொடர்ச்சியாகவும் உழைத்தவண்ணம் இருப்பர். கப்பலின் வெளி அழகை இரசிப்பவர் களுக்கோ, அல்லது அதிலே பயணம் செய்கின்ற பலருக்கோ தொழிலாளிகளின் உழைப்போ அல்லது வேதனைகளோ தெரிவதில்லை. அத்தொழிலாளிகளும் அவர்களின் அனுதாபத்தையோ (Sympathy) அல்லது சமூக அங்கீகாரத்தையோ (Social recognition) எதிர்பார்ப்பதில்லை.

இத்தகைய தொழிலாளிகளின் உழைப்பை ஒத்த கடின உழைப்பையும், ஒரு ஞானியை ஒத்த உயரிய மனப்பக்குவத்தை உடையவரே திரு. வேலாயுதம் புவனேந்திரன் அவர்கள். யா/ வயாவிளான் மத்திய மகா வித்தியாலயமாக இருந்தவேளை ஆசிரியராக இணைந்துகொண்ட அவர் யா/ வயாவிளான் மத்திய கல்லூரியாகத் தரம் உயரும்வரை உழைத்த உத்தமராவார்.

கணித பாடத்தை போதிப்பதிலே வல்லுநராகத் திகழ்கின்ற அவர் மாணவர்கள் எவ்வித தயக்கமுமின்றி அவரை அணுகித் தமது ஐயங்களைத் தீர்த்துக் கொள்ளக்கூடியவராகத் திகழ்ந்தார். யுத்த காலங்களில் எமது பாடசாலை இடம் பெயர்ந்து உரும்பிராய் இந்துக் கல்லூரியில் இயங்கிய வேளையில் பாடசாலையின் இயக்கமானது சீராக இருப்பதற்கு அந்நேரத்தில் பதவியிலிருந்த அதிபர் அமரர் ஆ.சி.நடராஜாவுடன் இணைந்து கடுமையாக உழைத்தவர்.அதன் பின்னர் உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு எதிரே இருந்த காணி கொள்வனவு செய்யப்பட்டு அக்காணியிலேகொட்டகைகளை உருவாக்கி பாடசாலையை மீள இயக்குவதிலே ஏனையோருடன் இணைந்து பணியாற்றியவர்.

ஆசிரியர், உபஅதிபர், பிரதி அதிபர் என பல்வேறு பதவிகளிலே 29 ஆண்டுகள் நிறைவான, அர்ப்பணிப்பான கல்விச் சேவையாற்றி 02/07/2018 அன்றைய தினம் ஓய்வு பெறுகின்ற யா/ வயாவிளான் மத்திய கல்லூரி என்னும் விருட்சத்தின் பிரதான வேர்களுள் ஒன்றாகிய திரு. வேலாயுதம் புவனேந்திரன் அவர்கள் தனது ஓய்வுக் காலத்தில் மன சகல சிறப்புக்களோடு திகழவேண்டுமென 1997 ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவு மாணவர்கள் சார்பாக வாழ்த்துகின்றோம்.

எஸ். வி. பாலமுரளி,
கொக்குவில்.
(1997 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்கள் சார்பாக)



# அகவை அறுபதில் ஆசான் புவனேந்திரன் அவர்களை அகமகிழ்ந்து வாழ்த்தும் வாழ்த்துப்பா

சீர்மலிமேவும் சிறப்பான ஈழமணித் திருநாட்டின் வடபாலுள்ள
ஊர்களில் ஒன்றாய் உயர்ந்து விளங்கும் வயாவிளான் மண்ணிலே
பார் போற்ற வந்துதித்த பண்பான நல்லாசான் வேலாயுதம் புவனேந்திரன்
ஈர்மும்பது அகவை நாளில் இன்புறவே வாழ்த்துகின்றோம்.

ஓங்குபுகழ் வயாவிளான் மத்தியின் மாணவனாய் உயர்ந்து
பாங்குடனே பல்கலையில் கணிதத்துறையில் பயின்று
ஏங்கிள மாணவரின் இருள்கலைக்க ஆசானாய் உதித்து
தாங்கிய தம் சேவையை சளைக்காது செய்தவர்

ஆசானாய் பிரதிஅதிபராய் அரும்பணியாற்றி
மாசில்லா கல்லூரியில் ஈர்பத்தொன்பது ஆண்டுகள்
பாசமாய் பணிபுரிந்த பண்பான எம் ஆசானை
நேசமுடன் நாமிங்கு அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

மான் ஒத்த விழியாளுடன் மனையறம் நற்காத்து
தான் பெற்ற மகவிரண்டும் தரணியில் சிறந்து விளங்கிடவே
தேன் ஒத்த மொழி பேசி சீர்கல்வி போதித்த
நான் என்ற அகந்தையற்ற நல்லாசானை வாழ்த்துகின்றோம்

மணி விழாக் கண்ட ஆசான் வாழி !
மனைவி பிள்ளைகள் சுற்றம் சூழ
மகிழ்ந்தினிது இருந்து இன்னும்
ஈர்பத்து ஆண்டுகள் இன்புறவே வாழ்க என்று
வாழ்த்துகின்றோம்
வாழ்க பல்லாண்டு ! வளர்க அவர்தம் சேவை !

**சிவயோகவதனி லோகேஸ்வரன்**
ஆசிரியர்

# வாழ்த்துச்செய்தி

திரு.வே.புவனேந்திரன் ஆசிரியர் வயாவிளான் கிராமத்தைச் சேர்ந்தவர். அந்தக் கிராமத்தில் அமைந்திருக்கும் பிரபல்யமான பாடசாலையாகிய வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றவர். அவர் எனது அபிமானத்துக்குரிய மாணவராவார். அவருடைய வளர்ச்சியை மாணவனாக, ஆசிரியராக, கிரகஸ்தனாக, உபஅதிபராக என்னுடைய ஆசிரிய சேவைக்காலத்தில் காணக்கூடியதாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது.

அவர் மாணவனாக இருந்தபோது, 1972ம் ஆண்டு ஜனவரி மாதம் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் கடமையை ஏற்றுக் கொண்டேன். அப்போது அவர் க.பொ.த சாதாரண வகுப்பில் கல்வி கற்றுக் கொண்டிருந்தார். அவர் மாணவருக்குரித்தான சிறந்த பண்புகளுடன் விளங்கினார். கல்வி கற்பதில் ஆர்வமும், ஊக்கமும், கடமை உணர்ச்சி, பணிவு, அடக்கம், கீழ்ப்படிவு எல்லாவற்றிலும் சிறந்து விளங்கினார். ஆசிரியர்கள் எந்தப் பணியை அவரிடம் ஒப்படைத்தாலும் புன்முறுவலுடன் கடமை உணர்ச்சியுடன் கண்ணியமாகச் செயற்பட்ட ஒருவர். அவர் சகல பாடங்களையும் மிகவும் ஆர்வத்துடன் கற்றதுடன் கணித பாடத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றவராக இருந்தார். அவர் சகல பாடங்களையும் மிகவும் ஆர்வத்துடன் கற்றதுடன் கணிதபாடத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றவராக இருந்தார். அவர் சக மாணவர்களுடன் புரிந்துணர்வுடனும், சிநேகபூர்வமாகவும் நடந்து அவர்களிடையே ஒரு கதாநாயகனாகத் திகழ்ந்தார்.

புவனேந்திரன் ஆசிரியர் பல்கலைக்கழகம் சென்று அக்கல்வியைப் பூர்த்தி செய்தார். இவ்வாறு அவர் சேவை ஆற்றிய காலத்தில் இல்லறத்தை மேற்கொண்டார். வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவியும், வயாவிளான் கிராமத்தைச் சேர்ந்தவருமாகிய அன்னமலர் (எனது மாணவியும் கூட) என்பவரைத் தனது வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொண்டார். இல்லறத்தை நல்ல அறமாக ஏற்று நடப்பவர். அவரது திருமண வைபத்தில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பமும் எனக்குக் கிடைத்தது. அதுவும் மகிழ்ச்சியாக இருந்தது.

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் செய்த தவப்பயனால் அவர் ஒரு மாணவனாக ஆசிரியராக மட்டுமல்லாமல் உப அதிபராகவும், கடமையாற்றினார். அப்போது அவர் தனது பணிகளைச் சிறப்புடன் மேற்கொண்டதுமல்லாமல் புறவேலைகளிலும் பங்கு கொண்டு கல்லூரியின் வளர்ச்சிக்குச் சேவை செய்தார்.

பாடசாலை இடம்பெயர்ந்தபோதும் சரி, தனது சொந்த இடத்திற்குப் போனபோதும் சரி அவர் அமைதியாக, அடக்கமாகப் பாடசாலையின் முன்னேற்றத்திற்கு அயராது உழைத்துப் பாடசாலையின் தூண் போலத் திகழ்ந்தவர்.

இவ்வாறு பல நற்பண்புகளுடனும், கடமை உணர்ச்சியுடனும் பாடசாலையின் வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்த ஒருவர் இளைப்பாறுவது பாடசாலைக்கு ஒரு இழப்பு என்று தான் சொல்ல வேண்டும். எனினும் அவர் தனது ஓய்வுக்காலத்தில் கூட தன்னால் இயன்ற சேவையை வழங்குவார் என்பதில் ஐயமில்லை. திரு.புவனேந்திரன் ஆசிரியருடைய ஓய்வுக்காலம் பயனுடையதாகவும், வளமுடனும், ஆரோக்கியத்துடனும், நலமுடனும் அமைய வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

**திருமதி R.சோமசுந்தரம்**
ஓய்வுநிலை ஆசிரியை,
யா/வயாவிளான் மத்திய கல்லூரி

# என்இதயத்திலிருந்து சில வரிகள் ......

வயாவிளான் மத்திய கல்லூரியில் நீண்டகாலம் ஆசிரியராகப் பணியாற்றி இன்று ஓய்வு பெறுகின்ற திரு.புவனேந்திரன் ஆசிரியர் அவர்களை வாழ்த்துவதற்கு எனக்கும் ஒரு வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மனம் மகிழ்வடைகிறது.

1998ம் ஆண்டு யூலை மாதம் ஆசிரியராக இக்கல்லூரியில் கடமையேற்ற காலத்திலிருந்து 2014ம் ஆண்டு இடமாற்றம் பெற்றுச் செல்லும் காலம் வரை அவரை நன்கறிவேன். மிக அமைதியாக எந்த ஆரவாரமுமின்றி பணியாற்றிய ஒரு பெருந்தகை. அதிகம் அலட்டிக் கொள்ள மாட்டார் மாணவர்களுடன் மிகுந்த அக்கறையோடு கணித பாடத்தை புகட்ட வல்ல ஒருவர். கற்பித்தலில் அவருடைய பொறுமையைக் கண்டு வியந்திருக்கிறேன்.

கணித பாடத்துறையில் மட்டுமல்ல அவர் சிறந்த மதப்பற்றுள்ளவர். சந்தர்ப்பத்திற் கேற்றவாறு தன்னுடைய சமயத்தைப் போதிப்பதிலும் வல்லவர். கல்வியைக் காட்டிலும் ஒழுக்கம் மிக முக்கியம் என நினைப்பவர். மாணவர்கள் ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றத் தவறுகின்றபோதெல்லாம் மிக மனம் நொந்து கொள்வார். அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும் என்ற ஆதங்கம் அவர் வார்த்தையில் வெளிப்பட்டதை பல தடவை உணர்ந்திருக்கிறேன். சக ஆசிரியர்களுடனும் அவர் நல்ல உறவைப் பேணியவர்.

பாடசாலை பல இடப் பெயர்வுகளைச் சந்தித்த காலப்பகுதியில் கல்லூரிக்காகப் பாடுபட்டு சிறந்த மாணவர்களை உருவாக்கிய பெருமை அவருக்குண்டு. அதை அவரிடம் கற்ற மாணவர்கள் நன்கு உணர்வர். அவருடன் நீண்ட காலம் சேர்ந்து பணிபுரிந்தது எனக்குக் கிடைத்த ஒரு பேறு எனலாம். கருணை மிக்க நல்லுள்ளம் கொண்ட ஆசிரியர் அவர்கள் ஓய்வு காலத்தில் அமைதியுடனும், உடல் ஆராக்கியத்துடனும் வாழ இறைவன் அருள் புரிய வேண்டும் என்ற பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

**திருமதி வா.சுரேஷ்குமார்**
ஆசிரியர்,
யா/இராமநாதன் கல்லூரி.



# கண்ணியமான கணிதனே

மூவிருபது அகவையதில்
ஈர் முப்பதாண்டு சேவைக்கு
முற்றுப்புள்ளியிடும்
மூத்த எம் தனயனே
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்
உவகையுடன் ஏற்றிடுவீர்

கடமையிலே கண்ணியமாய்
கருத்துடனே செயற்பட்டீர்
தாமதமாய் வந்ததுமில்லை இங்கு
தாமதிக்காமல் சென்றதுமில்லை இங்கிருந்து
உமக்கு நீரே நிகராவீர்
உண்மையாய் உழைத்த உத்தமரே

கணிதத்தைக் கடினமென்போர்க்கு
கற்கண்டாய் இனிக்கச் செய்தவரே
ஓரிரண்டல்ல எட்டுப் பாடமதும்
அமராமல் சலிக்காமல்
நடையயின்றே கற்பிப்பீர்
கண்ணியமான எம் கணிதனே

ஓய்வுப் பாடவேளை கூட
ஒரு நிமிடம் ஓயமாட்டீர்
மாணவர் தேவை மட்டுமன்று
மரங்களின் தேவையும் அறிவீரே
இரங்கிய மனங் கொண்டு
இறைத்திடுவீர் நீரிணைப்ப

நல்லாசான் மட்டுமன்று
நல்லதோர் பக்திமான் நீர்
வேலைப் பளுக்கள் மத்தியிலும்
ஆலயம் செல்லத் தவறுவதில்லை

தேடிவந்த தெய்வமாய் எம்முன்னே
நடமாடும் ஆசான் நீரே
கண்ணெதிரில் காண்போரையெல்லாம்
புன்னகைக்கும் புவனேந்திரரே
கோபங் கொண்ட உம் முகத்தை
நாமறியோம் ஒரு நாளுமே
உளம் வாடி வருவோருக்கு
நலம் வாழ வழி சொல்வீரே

வயவையூர் பெருமையுடன் பெற்றெடுத்த
வயவன் அன்னையின் புத்திரனே
கல்வி புகட்டிய அன்னைக்கு
செஞ்சோற்றுக் கடன் தீர்க்கவென
செம்மை நெறி நின்ற எம்
செம்மலே நீடூழி வாழ்க

பூத்துக்குலுங்கும் மலர்களும்
பசுமை நிறைந்த மரங்களும்
போற்றிப் புகழ்பாடும் உம் நாமமே
காலத்தின் தேவையது உம் பிரிவு
ஞாலம் போற்ற விடை தருகின்றோம்
வாழ்க உம்பணி ! வளர்க உம் புகழ் !

**சோபி எட்வின்**
ஆசிரியை,
யா/வயாவிளான் மத்தியகல்லூரி.



# வயாவிளான் மத்திய கல்லூரிக்காகவே பிறந்த எம் ஆசானிற்கு ஒரு வாழ்த்து

வாழ்த்த வேண்டுமென்று மனம் துடிக்கிறது. ஆனால் வார்த்தைகள் தான் எனக்கு பஞ்சமாக உள்ளது. ஆனாலும் என்னால் முடிந்தவரை வாழ்த்துகின்றேன். உரும்பிராய் மண்ணில் தற்காலிகமாக எம்பாடசாலை இயங்கிய வேளையில் தான் நான் மாணவியாக தரம் ஆறிலிருந்து தரம் 11 வரை திரு.புவனேந்திரன் ஆசிரியர் அவர்களிடம் கற்கும் வாய்ப்புக் கிடைத்தது.

இவரிடம் கணிதம் கற்பதென்றால் எனக்குப் பெரிய ஆனந்தம் அந்தக் காலத்தில் வகுப்பறைக்கு வருகிறார் என்றால் சில மாணவர்கள் வருத்தத்துடன் இருப்பார்கள் ஏனெனில் தொடர்ச்சியாகப் படிப்பிப்பார் என்ற கூறுவார்கள். அப்படியாக தனது களைப்பைப் பொருட்படுத்தாது எட்டுப் பாடவேளைகள் என்றாலும் சலிக்காது கற்பிக்கும் திறமையுடைய ஆசான் ஆவார். கல்விக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்த ஒரு பேராசான். புதுக் கணக்கொன்றினைத் தந்து விட்டு செய்யுங்கள் என்று சொல்வார். நாங்கள் செய்து காட்டினால் அவருடைய முகத்தில் உள்ள சந்தோசம் அளவிட முடியாதது. அவரிடம் எல்லா ருக்கும் கவர்ந்த விடயம் அவருடைய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகும்.

நீண்ட காலங்களின் பின் என்னுடைய அதிஷ்டம் எம்முடைய சொந்த வயாவிளான் மண்ணில் இவருடன் ஆசிரியராகப் பணி புரியும் வாய்ப்புக் கிடைத்தது. அவருடைய பணிக்கு எம்முடைய பணி ஈடாகாது. வேலை நேரம் என்று ஒரு வரையறை கிடையாது. எந்நேரமும் எம் பாடசாலைக்காய் உழைத்த உத்தம ஆசான் ஆவார். எம்முடைய பாடசாலையில் உள்ள தாவரம் முதல் உயிரற்ற பொருள் வரை அவரின் கரம் படாத இடமில்லை. அடிப்படையாக எதையும் எதிர்பாராது தன்னை முழுமையாக அர்ப்பணித்த பேராசானின் சேவைக்கு அளவேயில்லை.

பாரிய சேவையாற்றிய எம் ஆசான் திரு.புவனேந்திரன் அவர்களிற்கு மணிவிழா செய்வதில் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகிய நாம் பெரும் மனமகிழ்வடைகின்றோம். மென்மேலும் பாரினில் சிறப்புடன் வாழ நாம் இறைவனை பிரார்த்திக்கின்றோம். எம் ஆசானே உங்களுடைய சேவைக்கு நிகர் நீங்கள் தான்.

**"கடமையைச் செய் பலனை எதிர்பாராதே"**

என்ற கூற்றுக்கும் அர்த்தம் எம் ஆசானே நீவிர் வாழ்க

**திருமதி க.சுஜீவன்**
ஆசிரியை



# போற்றி நிற்கின்றோம் புவனேந்திரன் ஐயா

ஓங்கிய புகழ் உன்னத கலைக்கூடமதில்
தங்கியே நற்பலன் தந்திடும் கற்பக விநாயகரும்
சிந்தியே நற்கருணை செய்திடும் இயேசுவும்
முந்தியே நின்றெமைக் காப்பதாமே !

சோதனைகள் வேதனைகள் சேர்ந்தே வந்தாலும்
சாதனைகள் ஆக்கியே சரித்திரத்தில் வயவனை
பேதமைகள் இன்றி போற்றி ஏத்திட்ட
மாதவ புவனேந்திரன் வாழி! வாழி!!

எண்ணும் எழுத்தும் ஏத்தியே வைத்தவர்
கண்ணும் கருத்துமாய் காத்து வளர்த்து - எம்மை
மின்னு (நவ)ரத்தினமாய் மேதினி எங்கணும்
வண்ண சிட்டாக வாழ வைத்தவர்

பக்குவமாய் பேசியே பல செய்கை செய்தவர்
பாங்குடன் படிப்பித்து பதவி மேல் வைத்தவர்
சத்தியம் தர்மம் சகோதரத்துவமதனை
நித்தியம் போற்றும் புவனேந்திரன் வாழி!!

அன்பு மொழி பேசி வந்து ஆதரவுக் கரம் தந்த
அண்ணலே வாழி!! வாழி!!

தன்னலம் கருதாது எம்நலம் கருதுகின்ற
மன்னவா வாழி! வாழி!!
சிந்திய வியர்வையால் சிறப்புற வயவனை
செதுக்கிய சிற்பி வாழி!!
புந்தியில் எக்கணமும் போற்றியே பரவுகின்றோம்
புவனேந்திரன் ஐயா வாழி! வாழி!

**திரு.நா.சிவசுந்தரசர்மா**
ஆசிரியர்,
யா/வயாவிளான் மத்தியகல்லூரி.



# அர்ப்பணிப்புடனான சேவையாளர்

யா/வயாவிளான் மத்தியகல்லூரியின் பிரதி அதிபர் திரு.வே. புவனேந்திரன் அவர்கள், தான் கல்வி கற்ற இப் பாடசாலையில் ஆசிரியர் பணியை ஏற்றுக் கடமையாற்றினார்.

இவர் தான் பிறந்த வயாவிளான் கிராமத்தில் தனது ஆசிரிய சேவையை அர்ப்பணிப்புடன் செய்தார். இன்று ஏறக்குறைய முப்பத்து நான்கு ஆண்டுகளுக்கு மேலாக தனது ஆசிரியர் தொழிலில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேர்மை, சேவை இவைகளே தனது வாழ்வு என்று வாழ்ந்து கொண்டிருக்கும் திரு.புவனேந்திரன் அவர்களுக்கு மணிவிழா எடுப்பதில் பெருமிதமடைகிறோம்.

இவர் பிரதி அதிபர் பணியில் பாடசாலை முகாமைத்துவ அணியினருக்கு உதவியவர். ஆசிரியர்களுடன் அன்பான முறையிலும், பண்பான முறையிலும் கலந்துரையாடி ஒவ்வொரு செயற்பாட்டையும் செயற்படுத்தினார். மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்தார். எக்காலத்திலும் சிறப்பாக சேவையாற்றி பாடசாலையின் பெயரினை மலரச் செய்தவர்.

சிறந்த தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட ஓர் நிர்வாகியாகவே அவரைக் காணமுடியும். ஒவ்வொரு நாளிலும் மேற்கொள்ள வேண்டிய கடமைகளை அன்றே செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டவர். நடுவுநிலைமை தவறாத பண்பு, மனிதத்துவம் நிறைந்த செய்கைகள், நிர்வாகத்தில் கண்டிப்புத் தன்மை, அன்பும், அரவணைப்பும் என இவரிடம் காணக்கூடிய பண்புகளைப் பட்டியல் போட்டு விடலாம்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளிலும், இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் முன்னேற்றமடையச் செய்து பாடசாலையின் பெருமையை நிலைநாட்டியவர் பிரதி அதிபர் திரு.புவனேந்திரன் அவர்கள் என்று சொன்னால் மிகையாகாது. அவருடைய பாடசாலைச் சேவை என்றும் மறக்கவோ, மறைக்கவோ முடியாது.

“கடமையைச் செய் பலனை எதிர்பாராதே” என்ற வாசகத்தை மனத்தில் கொண்டு கடமையாற்றியதோடு ஆசிரியர்களையும், மாணவர்களையும் அதன் படியே ஒழுங்குற வழிநடாத்தியவர். மாணவர்களுக்கு கணித பாடத்தினை மிகவும் விளக்கத்துடன் கற்பிப்பார். க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கு தனது வேலைகளையெல்லாம் ஒதுக்கி விட்டு மாலை நேர வகுப்புக்கள், விடுமுறை கால வகுப்புக்கள் என வைத்து கணித பாடத்தில் மாணவர்களை சிறப்புத் தேர்ச்சியடையச் செய்தவர்.

தமது சேவைக் காலத்தில் இருபத்தொன்பது வருடங்களாக யா /வயாவிளான் மத்திய கல்லூரியில் சேவையாற்றி பிரதேசப் பற்றை எடுத்துக் காட்டியவர். கல்வியில் கட்டாயக் கல்வியை வலுப்படுத்துவதற்காக பாடசாலைக்கு ஒழுங்காக வராத மாணவர்கள், இடைவிலகிய மாணவர்கள் வீடுகளுக்குச் சென்று கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தி மீண்டும் பாடசாலையில் கற்பதற்கு சந்தர்ப்பம் வழங்கியவர்.

யா/வயாவிளான் மத்தியகல்லூரி இடம்பெயர்வு ஏற்பட்ட காலத்தில் மிகவும் நெருக்கடியான சூழலில் மிகவும் சிரமங்களுக்கு மத்தியில் அதிபர், ஆசிரியர்கள் கடமையாற்றினார்கள். இந்த இடம்பெயர்வுக் காலத்தில் கல்வியை முன்னெடுத்துச் செல்வதில் இவர் பெரும் பங்காற்றினார்.

இவர் மாணவர்களின் ஒழுக்கத்திலும் விசேட கவனம் ஜெலுத்தி வந்தவர். தனது பாடசாலை மாணவர்களின் ஒழுக்கத்திற்குத் தேவையான ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும் சிறப்பாக வழங்கியவர்.

பாடசாலைச் சமூகத்தின் முழு ஒத்துழைப்புடன் எவ்வித இடர்பாடுகளின்றி பாடசாலையின் பெருமையை தனது சேவைக்காலத்தில் மிளிரச் செய்வதற்கு உதவியாக இருந்தவர். அவர் சேவையில் இருந்து இளைப்பாறினாலும் எமது பாடசாலைக்கு அவருடைய ஆலோசனைகள் என்றும் அவசியமாகும்.

பிறப்பதும், வளர்வதும், வாழ்வதும் பெரிதல்ல. ஒரு மனிதன் தன் வாழ்நாளில் தான் பிறந்த மண்ணுக்கும் தாய் மண்ணின் மக்களுக்கும் செய்கின்ற சேவையே மிகப்பெரியது. தன் குடும்பம், தன் உறவுகளுக்கும் தன்னால் செய்யக்கூடிய சமுதாயத் தொண்டுகள், தேவைகள் அறிந்து செய்வது இவரின் பண்பாகும்.

தமது பணிக்காலத்திலே "மக்கள் தொண்டு மகேசன் தொண்டே" என்ற பெரியார் கூற்றிற்கிணங்கவும் " அன்ன சத்திரம் ஆயிரம் வைப்பதிலும் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் புண்ணியம் கோடி புண்ணியம்" என்ற பாரதியாரின் வாக்கிற்கிணங்கவும் தன்னலம் கருதாது சேவை புரிந்தவர். தமது ஓய்விற்கான அகவை நிறைவெய்தி மணிவிழாக் காணும் வரையிலும் ஆற்றிய பணிகள் யாவும் போற்றுதற்குரியவை.

**திரு.க.கணேசதேவா**

ஆசிரியர், யா/வயாவிளான் மத்தியகல்லூரி.



## A Rare Gem - Mr.V.Puvanenthiran Sir

You are the one - who
- Mouldel them good citizens,
- Taught them without a shadow of doubt,
- Made them certain that they were thinkers, doers, writer, doctors, engineers, lawyers, schoolars and so on
- Showed them what 'more' meant and how sweet it could be through your crgstal knowledge of mathenatics.
- Imparted them so many the joys and trials of life and how to navigate them towards success.
- Pictured what humanity is

You are more than a teacher, you are friend, drill ser geant, mentor, confident......

you are so much wrapped into one sir.

You have done every thing that you can, for the last 20 years.

Our garden's beautiful plants will miss you so much than otus, Everyday, amazing to see your pleusant mint of teaching as the very first day of your career.

Now you don't have to worry about
- setting exam papers.
- Giving fair grades..

Now you don't have to botter about,
- Taking classes
- Walking up early or
- Forgetting your glasses

Because sir,
- In the book of your life
- You begin a new chupter
- By fullfilling a fruitful service.Dear sir....

You are not leaving us empty handed,
You have alredy Give us a lot
You have empowered us
With all that you have taught
It is time for you to enjoy the fruits of working hard for so many years.

Because sir.....

You listened, you motivated, you helped, you shared, you encourayed, you inspired everyone towauls the light. This is the start of your new adventure and you are going to learn more than you did at your job. now you can travel to the places you used to teach and see the sights and the people.

you are a rane gem, a great influence to all arround you, your price is fr above rabises. This is why we take this special day to wish you

Happy retirement sir.

**Mr.M.Thuseeban**
**Teacher,**
**J/Vayavilan Central College.**



# இலக்கிய மீளாய்வு (Literature Review)

ஆய்வு ஒன்றில் இலக்கிய மீளாய்வின் பங்கு இன்றியமையாததாகும். ஆய்வுக்கான பிரச்சினை ஒன்றை தேர்ந்தெடுத்துக் கொண்ட ஆய்வாளர் ஒருவர் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிச் சிந்திப்பதற்கு இலக்கிய மீளாய்வே இட்டுச் செல்கிறது. இலக்கிய மீளாய்வு என்பது,

"பிரதான கோட்பாட்டியலாளர்களின் கண்ணோட்டங்களையும் பெறுபேறுகளையும் ஒருங்கே முன்வைத்து ஆய்வுப் பொருள் குறித்த ஓர் உரையாடலை மேற்கொள்வதற்கு இலக்கியங்களைப் பயன்படுத்திக் கொள்வதே இலக்கிய மீளாய்வு ஆகும் என கலாநிதி த.கலாமணி குறிப்பிடுகின்றார் உண்மையிலே , இலக்கிய மீளாய்வு என்பது ஆய்வுத் தலைப்புடன் சம்பந்தப்பட்ட ஆய்வு வினாக்கள், ஆய்வுப்பிரச்சினை, ஆய்வுக் கருதுகோள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட கருத்துக்களுடனும் வாதங்களுடனும் ஆழ்ந்த ஈடுபாடு கொள்ளலாகும்.

இலக்கிய மீளாய்வானது நூல் மீளாய்வு, சார்பிலக்கிய கண்ணோட்டம், நூல் திறனாய்வு என்ற பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது.ஆங்கிலத்தில் Literature survey Review of Liture என வழங்கப்படுகிறது. ஆய்வு விடயத்திலே ஆய்வாளர் தமது துறை தொடர்பாக எவற்றையெல்லாம் அறிந்திருக்க வேண்டுமோ அவற்றையெல்லாம் தெரிந்து வைத்திருப்பது இலக்கிய மீளாய்வின் பாற்படும்.

## ஆய்வு ஒன்றில் இலக்கிய மீளாய்வின் முக்கியத்துவம்

ஆய்வாளர் ஒருவர் தமது ஆய்வுப் பெறுபேறுகள் போலி ஆக்கம் [ Plagiary] அன்று எனவும், அசலான பங்களிப்பு [Original Conribution] எனவும் நிறுவுதற்கு இலக்கிய மீளாய்வே ஆதாரமாக விளங்குவது அதன் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுகிறது. மேலும் ஆய்வினை ஆய்வாளன் அதே களத்தில், அதே வடிவில் அதே முடிவில் மேற்கொள்ளும் தவறினை இழைப்பதைத் தடுக்க இலக்கிய மீளாய்வு உதவுகின்றது. இதனை ஆய்வுப்புலத்தில் Reinventing the wheel எனக் கூறும். அதாவது சுமேரியர் எப்போதோ கண்டுபிடித்த சில்லை நாம் இப்போது திரும்பவும் கண்டுபிடிக்க வேண்டிய அவசியமில்லை என்பதாகும். முன்னைய ஆய்வாளன் ஆய்வு தொடர்பாக என்ன முடிவை விட்டுச் சென்றான், அவற்றை நாம் எப்படி முன்னெடுத்துச் செல்ல வேண்டும்? அதாவது ஆய்வு இடைவெளியினைக் கண்டு பிடித்து ஆய்வினை முன்னெடுக்க இலக்கிய மீளாய்வு ஆய்வுப் பரப்பில் முக்கியத்துவம் பெறுகின்றது.

ஒரு ஆய்வினைத் தொடக்குகின்றபோது குறித்த ஆய்வு வேறு யாராலும் இதற்கு முன்னர் மேற்கொள்ளப் பட்டுள்ளதா? என்பதை அறிவது ஆய்வாளனின் ஒழுக்கவியல் சார் கடமையாகும். இதன் மூலம் ஆய்வாளன் தான் மேற் கொள்ள இருக்கும் ஆய்வு முன்னர்

மேற் கொள்ளப்படவில்லை என்பதை உறுதி செய்து கொள்வதற்கும், தனது ஆய்வுக்கான கருப் பொருளை இறுதிப்படுத்திக் கொள்ளவும் இலக்கிய மீளாய்வு ஆய்வில் முக்கியத்துவம் பெறுகின்றது.

ஆய்வாளன், தனது ஆய்வின் கருத்தியல்களை வலுப்பெறச் செய்வதற்கு மேற்கோள்கள் பிரதான இடத்தினைப் பெறுகின்றன. தான் சொல்ல வந்த கருத்தியல்புகளையும், ஆய்வு முடிவுகளையும் தனது ஆய்வில் முன்வைக்கும் போது பொருத்தமான சான்றுகள் மூலம் அவை நியாயப்படுத்தல் வேண்டும். குறித்த கருத்தியல் பற்றி சார்பாகவும் எதிராகவும் வேறு ஆய்வாளர்களால் முன் வைக்கப்பட்ட ஆய்வு முடிவுகளைத் தனது ஆய்வின் கருத்தியல்களை வலுப் பெறச் செய்வதற்கு இவ் மேற்கோள்கள் உதவுகின்றன. இவ்வாறு பொருத்தமான மேற்கோள்களைத் தெரிவு செய்து முன்வைப்பதற்கு ஆய்வாளனுக்கு ஆழமான இலக்கியமான மீளாய்வு அவசியமாகின்றது.

ஆய்வுச் செயற்பாட்டில் ஆய்வாளன் ஒருவன் தனது ஆய்வுப் பிரச்சினை சார்பான எண்ணக்கருவைப் புதிதாக வடிவமைத்துக் கூர்மைப்படுத்துவதற்கு இலக்கிய மீளாய்வு அவசியமாகின்றது. அதாவது இலக்கிய மீளாய்வு செய்வதன் மூலம் ஆய்வாளன் குறிப்பிட்ட பிரச்சினை தொடர்பான ஏற்கனவே உருவாக்கப்பட்ட எண்ணக்கருவினை அறிய முடிகின்றது. இதன்மூலம் தனது ஆய்வின் எண்ணக்கருவை மெருகூட்ட முடிகின்றது.

இலக்கிய மீளாய்வு செய்வதன் மூலமாக முன்னைய ஆய்வின் பாதையினையும், தற்போதைய ஆய்வின் திசையினையும் எடுத்துக் காட்டுகின்றது. அது மட்டுமல்லாது முன்னரும் ஆய்வு செய்த ஆய்வாளர் எதிர்நோக்கிய பிரச்சினைகளை அறிந்து அவ்வாறான தவறுகளை ஓர் ஆய்வாளன் செய்யாது முன்னேற இலக்கிய மீளாய்வு முக்கியத்துவம் பெறுகின்றது. இதனால் நேரவிரயம், வழுக்கள் தவிர்க்கப்பட்டு குழப்பமற்ற தெளிவான புதிய கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளவும் ஆய்வாளனுக்கு இலக்கிய மீளாய்வு உதவுகிறது.

இலக்கிய மீளாய்வின் ஊடாக ஆய்வுப் பொருள் தொடர்பான பூரணமாகக் கிரகித்தலையும், அறிவினையும் ஆய்வாளர் பெற்றுள்ளார் என்பதை எடுத்துக் காட்டும். மேலும் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு புதிய தகவல்கள் சம்பந்தமாகக் கலந்தாலோசிக்கவும், விளக்கமளிக்கவும் ஆய்வில் இலக்கிய மீளாய்வு முக்கியமானதாகக் காணப்படுகின்றது. என்னென்ன விடயங்கள் ஆய்வுக்குட்படுத்தப் பட்டுள்ளன என்பதை அறிந்து கொள்வதனால் தேவையானவை மட்டும் பிரதி செய்யப்பட மீளாய்வு உதவுகிறது.

முடிவாக இலக்கிய மீளாய்வானது ஆய்வு ஒன்றை மேற்கொள்ளும் செயன்முறையில் இன்றியமையாததும் தவிர்க்க முடியாத ஒன்றாகவும் காணப்படுகின்றது.

ஆய்வுக்கட்டுரை ஒன்றை எழுத முற்படும் ஓர் ஆய்வாளன் இலக்கிய மீளாய்வு என்ற அம்சத்தினைக் கடந்து ஒருபோதும் செல்ல முடியாத அம்சமாகும். தனது கட்டுரை தொடர்பான உண்மைத்தன்மைக்கும், தெளிவுக்கும், வியாக்கியானத்திற்கும் இலக்கிய மீளாய்வு வலுச்சேர்க்கின்றது. எனவே ஆய்வுப் பொருளுடன் சம்பந்தப்பட்ட இலக்கியங் களுடனான சவாலாகவும், கருத்தாடலாகவும் அமையும் இலக்கிய மீளாய்வு என்பது உண்மையில் ஒரு புலமை சார் பயிற்சியேஆகும்.

உசாத்துணை நூல்கள்

01) த.கலாமணி இலக்கிய மீளாய்வை விளங்கிக் கொள்ளல் , கடல்

02) க.சின்னத்தம்பி கல்வி ஆய்வியல்

03) கை.தனராஜ் செயல்வழி ஆய்வு - ஓர்அறிமுகம்

04) பக்கீர் ஜஃபார், P.C கல்வியியலாய்வில் இலக்கிய மீளாய்வு, பார்வை இதழ் - 02

**திரு.ந.முரளிதரன்**

ஆசிரியர்,

யா/வயாவிளான் மத்தியகல்லூரி.



# அன்பினால் இணைந்தவர்

புவன இந்திரன்
உழவர்பூமிக்கு தண்மை
மழையை பொழிபவர் புவன இந்திரன்
வயவன்பூமிக்கு கல்வி
மழையைப் பொழிபவர்புவனேந்திரன்

கல்லூரி வரலாற்றில்
காவாசிப் பகுதிதான்
இவரின்
காலடிகள் பதிந்திருக்கவில்லை

ஊருடன் பகைத்தால்
வேருடன் கெடும் என்பது
மூதுரை கேளீர்
எங்கள் ஆசிரியர்
யாருடனும் பகையில்லை
யாவரும் இவர் கேளிர்

அதிக பேச்சில்லை
அலட்டிக்கொள்ள அவருக்கு நேரமில்லை
யாருடனும்
அலுத்துக்கொள்வதுமில்லை

எண்ணமே வாழ்வென்பர்
எண்ணியவாறே வாழ்வு அமையும்
கண்ணியத்துடன் கற்பித்தலிலேயே
கவனம் இவருக்கு குவிந்திருக்கும்
புண்ணியம் செய்திருக்கும் மாணவர் சமூகம்
புவனேந்திரன் ஆசிரியரிடம் கற்பதற்கு

குருவாக உருவாகி
ஒரு லட்சம் பாடவேளைகளாவது
எருவாக ஊ(உ)க்கியிருப்பார்
தருக்கள் பல ஆக்கியிருப்பார்

சக ஆசிரியர்களைக்
கண்டவுடன் ஒரு புன்னகை
அக மகிழ சில வார்த்தைகள்
"வாழ்த்துக்கள் சேர்" பாராட்டுவார்
"வணக்கம் சேர் எப்படியிருக்கிறீங்கள்" விசாரிப்பார்

பகுதித் தலைவராக
பிரதி அதிபராக அவதாரங்கள் எடுத்தாலும்
மிகுதியாக அவரிடம் காணப்படுவது
மதிப்புமிக்க பண்புத

கற்றலின்றி வகுப்பறைகள் காணப்படுகையில்
கவலை கொண்டிருக்கிறார்
மற்றவரை எதிர்பார்த்து நிற்காமல்
மனமுவந்து தானே
வெண்கட்டியை எடுத்துச் சென்றிருக்கிறார்

வயவன் குழந்தைகளுக்கு
வேண்டியது செய்திருக்கிறார்
வாடிநின்ற பயிர்களுக்கு
தேடித் தேடி நீர் ஊற்றியிருக்கிறார்
இனி...

ஓய்வு நிலையிலும் இவர்
தொய்வின்றி தொண்டாற்ற
ஒப்பற்ற ஆண்டவன் - வாழ்வில்
ஒளிபரப்பி அருள்புரிந்து
ஆசீர்வதிப்பாராக!

**ஆர்.தனஞ்செயன்**
ஆசிரியர்,
யா/வயாவிளான் மத்திய கல்லூரி.



# வயாவிளான் கல்வி வளர்ச்சியின் கலங்கரை விளக்கு

வயவையூரில் பிறந்து "வயவன்" கல்லூரியிலே கல்வி கற்று, வயவனிலே கற்பிக்கும் திரு.வேலாயுதம் புவனேந்திரன் பிரதிஅதிபர் அவர்கள் தனது அகவை அறுபதை நிறைவு செய்து ஓய்வுபெறும் இவ்வேளையில் கல்லூரிச் சமூகம் அவவை பாராட்டி மணிவிழா மலரினை வெளியிடுவது சிறப்பானது.

சொந்த இடத்தை விட்டு இடம்பெயர்ந்த வேளையிலும் கற்றல் செயற்பாடுகளுக்குத் தேவையான வசதிகள் இல்லாதபோதும் சிறு கொட்டில்களுக்குள் மாணவரை அடக்கமாக வைத்து அமைதியுடன் கற்பித்திடுவார். மாணவருக்கு ஒழுக்கத்துடன் கூடிய கல்வியை வழங்கி சிறந்த மாணவர் சமூகத்தை உருவாக்க வேண்டும் என அரும்பாடுபடுவார்.

பாடசாலையில் ஒவ்வொரு ஆசிரியருடனும், ஊழியருடனும் முரண்பாடில் லாமல் சிநேகிதமாகப் பழகுவார். இவரிடம் தான் பொறுமையை கற்றுக் கொள்ளலாம். என்ன இடர் வந்தபோதும் தன் கடமையைத் தவறாது பணி செய்வார்.

எந்த நேரத்தில் எவ்வாறு இருக்க வேண்டுமோ அந்த நிலைக்குத் தன்னை மாற்றிக் கொள்வார். சிநேகிதராக, சிற்றூழியராக இருந்தும் தன்னை மாற்றி கடமைகளைச் செய்தார். சொந்த இடத்திற்குப் பாடசாலை வந்தவேளை சிற்றூழியராக மாறித் தனது உடலை வருத்தி வேலை செய்தார். அளவான பேச்சு, எளிமையான தோற்றம், பொறுமையின் சின்னம், கூட்டுக் குடும்ப வாழ்க்கையில் ஒற்றுமை இவையெல்லாம் இவரின் சிறந்த குணாங்கள்.

ஒவ்வொரு ஆசிரியரின் நிலையினையறிந்து அதற்கேற்ப அவர்களுடன் பழகுவார். அறிவுரைகள் கூறுவார். இவரின் நற்குணங்களை அடுக்கிக் கொண்டே செல்லலாம். இவரிடம் கற்ற நல்ல பாடங்கள் அதிகம். எமது ஆசிரிய பணியின் வளர்ச்சிக்கு இவரது ஆலோசனைகள் பல.

இவ்வாறு வயவனின் புகழ் பூத்த பிரதி அதிபர் தனது ஓய்வுக்காலத்தில் தனது குடும்பத்துடன் சிறப்பாக பலதும் பெற்று பல்லாண்டு காலம் வாழ இறைவன் ஆசீர்வதிப்பாராக.

**திருமதி சி.முருகதாஸ்**
ஆசிரியர்,
யா/வயாவிளான் மத்தியகல்லூரி.



# புவனநாயகனே புவனேந்திரன்

வானுற ஓங்கிய வயவையின்
மாண்புறு புதல்வனே புவனேந்திரனே
சால்புறு ஆசானாய் சரித்திரமாய் ஆகிவிட்ட
சான்றோனே செல்வத்திருமகனே வாழி

பிறர்நலம் என்றுமே தன் நலமாய் நாடிடும் சிந்தையாளனே
களர்நிலத்துப் பிறந்த உப்பினை விளைநிலத்து
நெல்லினும் விழுமிதாகக் கொள்ளும் பங்குடையோனே
தளராமல் தன் பணி செய்யும் தவத்தோனே
வளர்க என்றும் நின்புகழ் மலைத்துணையே

கைத்தலம் பற்றிய காரிகையுடன் களிப்புடனே
மனையறம் சிறக்கவே மாண்புறு வாழ்வு வாழும் வயவனே
கர்த்தருக்கு பிரமாணிக்கமாய் நல்ல சமாரியனாய்
வாழும் உம்புகழ் எத்திக்கும்
எட்டிடுக ஏற்றமெல்லாம் பெற்றிடுக

ஆசான் என்போர் எம்மை அவனியில் முந்தியிருக்கச் செய்வோர்
பேசா மடந்தையாய் இராது எமைப் போதித்த
தேசுநிறை புவனேந்திரனே திருவுடைத் திலகமே
பாசமாய் என்றும் நேசக்கரம் நீட்டும்
மானுடநேயனே வாழி! வாழி!!

**திரு.நி.பவானந்த சர்மா**
ஆசிரியர்,யா/வயாவிளான் மத்தியகல்லூரி.

# இன்புற்று வாழியவே

வேண்டும் வரமருளும் வேழமுகன் அருளால்
வேலாயுதம் புவனேந்திரனாய் - அவனியில் பிறந்து
வயாவிளான் மத்திய கல்லூரியில் கல்வி பயின்று
தூய ஆசானாய் பிரதி அதிபராய் பணி செய்யும்
சாந்த சொரூபனே சற்குருவே நீவிர் வாழியவே!

மணிவிழாக் காணும் நாயகனே
தைரியமான உம் வழிகாட்டல்களால்
தரணியில் நாம் உயர்வுற்றுள்ளோம்
சீராளனே புவனமெல்லாம் உமை வாழ்த்த
புண்ணியசீலனே நீவிர் வாழியவே!

பொன் பெற்று பொருள் பெற்று
புகழ் பெற்று வளம் பெற்று
மண்பெற்று மதி பெற்று
இன்புற்று இனிது நீர் வாழியவே!

**பரமதேவன் டெனுசன்**
சிரேஷ்ட மாணவ தலைவன்
A/L 2018 கலைப்பிரிவு

# மாணவ சமுதாயத்திற்கு சிறந்த வழிகாட்டி

மாணவர் சமுதாயத்திற்கு சிறந்ததோர் வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் எனது ஆசான் திரு.வேலாயுதம் புவனேந்திரன் பிரதிஅதிபர் அவர்கள். நான் 2015ல் க.பொ.த சாதரணப் பரீட்சை எழுதும் போது இறுதியாகவும் எமக்குக் கற்பித்தவர். கணித பாடந்தனை மிகவும் எளிமையாக விளங்கப்படுத்துபவர் அவருடைய வேத வாக்கியமாக எமக்குத் தினமும் சொல்லுகின்ற வாக்கியம் " ஒரு நாளைக்கு ஒரு பகுதி கணக்கையாவது விளங்கிக் கொண்டு செல்லுங்கள் " என்பதாகும்.

அது மட்டுமல்லாது எமது சாரணர் அணியுடன் இணைந்து எந்த நிகழ்வு என்றாலும் அதிகாரத்தை எம் மீது செலுத்தாமல் மாணவர்களோடு சகஜமாக தானும் சேர்ந்து வேலைகளைச் செய்பவர். பாடசாலை நிகழ்வுகள் என்றால் முதல்நாளே மண்டபச் சுத்தம், வெளிப்புறச் சுத்தம் போன்றவற்றையெல்லாம் எம்மோடு சேர்ந்து முடித்து விட்டு எம்மையும் வீடு செல்ல அனுப்பி விட்டு தான் பின்னர் வீடு செல்வார்.

சிறந்த ஒரு ஆசிரியர் மூலம் சிறந்த ஒரு மாணவ சமுதாயம் உருவாகும் என்பதில் ஐயமில்லை. 1984 முதல் 2018 வரை ஆசிரிய வாழ்க்கையிலே 2000-2008 காலப்பகுதியில் எனது இரு சகோதரர்களுக்கும் கல்வி கற்பித்தவர்.

எமது பிரதி அதிபர் அவர்கள் ஓய்வு பெறும் காலத்திலும் மிகச் சிறப்பாக வாழ எல்லாம் வல்ல பரம்பொருளின் அருள் கிடைக்க நானும் அவரது மாணவர் என்ற வகையில் பிரார்த்திக்கிறேன்.

**செ.சசிகாந்**

ஜனாதிபதி சாரணர், சாரணர் தலைவர்

2018 /Arts

யா/வயாவிளான் மத்தியகல்லூரி.



# ஆசானுக்கு ஓர் அன்பு மடல்..

கல்விப்
பெரும் பணியில்
காலப்
பெருவெளியில்
மெழுகாய்
தனையுருக்கி
ஒளியால்
மாணவரைத் துலக்கி
வழியாய் இருந்தவரை
வாழ்த்துவது எப்படி நான் ...........

அகவை
போதவில்லை
அறிவும்
போதவில்லை
மொழியும்
போதவில்லை - தங்கள்
பெரும்புகழ்
மொழிந்து விட .....

கணிதக்
கலை விளக்கே!
எளிமையின்
வடிவுருவே!
புனிதப் பெரும்பணியில்
நீண்டதோர் சாத்தியமே ........

அன்பினில் வாழ்த்துகின்றேன்
ஆசிகள் வேண்டுமென
இன்னும் வாழ்த்துகின்றேன்
இதயப் பூச்சொரிந்து
மகவாய் வாழ்த்துகின்றேன்
மேன்மை கோடி பெற
உறவாய் வாழ்த்துகின்றேன்
உண்மையின் தரிசனத்தில்.........

உம் வழியில்
நாமும் சென்று
மகத்தான சேவைதனை
மாண்புடனே ஆற்றிடவே
மண்டியிட்டு வேண்டி
முடிக்கிறேன்
அன்பு மடலை.........

**திருமதி முருகவேல் நீரஜா**
ஆசிரியை,
யா/வயாவிளான் மத்தியகல்லூரி.

# சோர்விலா சேவை நாயகன்

இருபத்தொன்பது ஆண்டுகள் எங்களோடு எங்களாக
பாடசாலையில் பல படைப்புக்கள் படைத்தீர்
கணிதத்தைக் கண்ணியமாகவும் ஆங்கிலத்தை அற்புதமாகவும்
சொல்லித் தந்தீர் ஆசானே உம்புகழ் என்றும் வாழ்கவே

வாடும் பூமரங்களுக்கு உயிர் கொடுத்தீர்
வாழும் பிள்ளைகளுக்கு வரமாக உம்மையே கொடுத்தீர்
கற்பிக்கும் சக ஆசான்களுக்கு ஒவ்வொரு
கஸ்டங்களிலும் கரம் கொடுத்தீர்

உமது வீட்டைப் போல பாடசாலையை பராமரித்தீர்
உமது பிள்ளையைப் போல மாணவர்களை ஆதரித்தீர்
உமது உறவினர்களைப் போல ஆசான்களை வழிநடத்தினீர்
உம் உயிரை போல வயவன் அன்னையை அரவணைத்தீர்

பாடங்கள் மட்டுமன்றி பழக்கங்களும் சொல்லித்தந்தீர்
எதிர்ப்பார்ப்புகள் எதுவுமின்றி எல்லையில்லா உதவி செய்தீர்
வாதங்கள் ஏதுமின்றி வாஞ்சையாய் பழகி வந்தீர்
சோர்வுகள் எதுவுமின்றி சோதனைகளை வென்றெடுத்தீர்

மழை வெயில் பார்க்காமல் வேலைகள் செய்தீர்
மெழுகாக உருகி பள்ளிக்கு ஒளியைத் தந்தீர்
நீர் அளித்த தியாகத்திற்கு ஈடு எதுவுமில்லை
உம்மை மறவோம் என்றும், உயிருள்ளவரை நினைப்போம்

**பவித்திரா**
10 D



# உயர்வுடன் வாழ்க!

அன்பு காட்டுவதில் அன்னையாய்
ஆலோசனை கூறுவதில் ஆசானாய்
இன்பதுன்பத்தில் தோழனாய்
ஈகையில் கொடையாளனாய்
உலகம் மதிக்கும் உத்தம குணாளனாய்
ஊர் போற்றும் செல்வனாய்
எண்ணும் எழுத்தும் போதிக்கும் குருவாய்
ஏற்றமிகுந்த வாழ்வுடையவராய்
ஐயம் திரிபுறப் போதிப்பவராய்
ஒற்றுமையுடன் செயற்பட வைப்பவராய்
ஓதாமல் ஒருநாளும் இராதவராய்
ஔடதம் தினமும் பயன்படுத்தாதவராய்
தோற்றத்தில் எளிமையானவராய்
பார்வையில் பண்புடையவராய்
பார்போற்றும் உத்தமராய்
சேவையில் சேவகனாய்
செயலில் வீரனாய்
யேசுவின் சிந்தனையாளராய்
என்றும் உலவிடும் ஆசானே
வாழ்வில் உயர்வுடன் வாழ்க

திருமதி ஜெயரஞ்சனி தர்மபாலன்
பகுதித் தலைவர்(8.9)

# மனம் விரும்பும் மணி விழா நாயகர்

புன்னகை புரியும் முகத்தார் புவனேந்திரன் ஆசான்
புரிதலில் அவரைப் போல இன்னொரு மனிதர் காணேன்
சின்னவயது முதலாய் சீரிய நல் கணிதம் தந்தார்
சினந்து நான் அறிந்ததில்லை சீறிப்பாய்ந்ததில்லை
என்ன தான் தேவை எனினும் எப்போதும் உதவி நிற்பார்
எதையுமே பொறுமையாக எடுத்தியம்பும் இனிமையாளர்
பன்னெடுங்காலம் எங்கள் பள்ளியில் பணியை ஆற்றி
பழகிய நினைவை விட்டு பிரிகிறார் தெய்வமே போற்றி

நேற்றுப் போல் இருக்கிறது நேரங்கள் தவறவிடாமல்
நேர்த்தியாய் வகுப்பு வந்து கற்பித்த கணித பாடம்
ஏற்றதை மட்டும் பேசும் எளிமையும் இனிமையும் கொண்டார்
ஏற்றிட மாணவர் பலரை ஏணியாய் உழைத்த மனிதர்
ஊற்றுப்போல் உதாரணங்கள் உணர்ந்திட அறிவு தந்தார்
ஊர்ஊராய் இடம்பெயர்ந்தும் எங்களோடு உடன் இருந்தார்
நாற்றுக்கு மேடை தந்த நல்ல பள்ளிக் கூடத்திலே
நாம் விரும்பும் விவசாயி நல்ல விதை தூவியவர்

மணிவிழா கண்டு அன்னார் மண்டபம் விட்டுப்போனாலும்
மனங்களில் பதிந்து நின்று என்றுமே வாழும் ஆசான்
அணியாக இருந்து எம்மை ஆளாக்கிய ஆசான்கள் அவர்களுள்
அமைதியாய் உலவும் அந்த அழகு கண்டு நயந்தோம்
பணியினை பண்பொடு செய்து தந்தையாய் தாயாய் நின்றார்
பலதையும் அன்பினாலே பள்ளியில் அமுலாக்கி வந்தார்
தனியொரு இடத்தைப் பெற்று வயாவிளான் குருகுலத்துள்
தங்கமாய் ஒளிரும் ஆசான் தரணியில் நலமாய் வாழ்க

கற்றவர் மகிமை எல்லாம் கடமையில் தெரியுமென்பர்

கண்ணியம் மிக்க மனிதர் காலங்கள் நின்று வாழ்வார்

பெற்றோம் ஓர் பொக்கிசத்தை வயாவிளான் வளாகத்திலே

பெருமையாய் சொல்கின்றோம் இவர் எம் ஆசான்

வற்றாத நதிபோல வயாவிளானில் இருபத்தொன்பது வருடங்கள்

வளமான கல்வி தந்தார் வழிகாட்டி கூட்டிச் சென்றார்

கற்றோருக்கு எடுத்துக் காட்டாய் காலமெல்லாம் எங்களோடு

வளமோடு வாழ வாழ்த்துகின்றோம் வணங்குகின்றோம்

அன்பு கலந்த பணிவுடன்

பழையமாணவர், கவிஞர்

**தம்பித்துரை ஐங்கரன்**

குரும்பசிட்டி.

# கடமையின் பெரியவரே

ஐந்தில் எமை வளைத்து
அமுதனைய கல்வினை
நெஞ்சில் நிறைக்கின்ற
நேர்த்தியெலாம் கற்றவரே !

பேசரிய மாண்பெல்லாம்
பிள்ளைகள் எமைச்சேர
ஆசிரிய பணிசெய்யும்
அன்பின் தெய்வமே !

பொறுப்பேற்று எமை நடத்திப்
புகழ்மணக்கும் கல்வியினைக்
கண்ணியமாய்க் கற்பிக்கும்
கடமையிற் பெரியவரே !

குன்றளவு கொடுத்தாலும்
குறையாத செல்வத்தை
இயன்றளவு எமக்களித்து
இன்புறும் வள்ளலே !

ஈன்றோரின் மேலாக
எம்நெஞ்சில் நிறைபவரே !
சான்றோராய் எமை மாற்றும்
சாதனைகள் புரிபவரே !

தரிசை சீர் செய்து
தக்கபடி ஏர் நடத்தி
வரிசை பிடித்துவிதை
வார்த்திடுவார் மக்கள்
அறிவு நீர் பாய்ச்சி
அகந்தையின் களையகற்றி
செறிவுடையோராய் எம்மைச்
செய்உழுவர் நீங்களன்றோ !
சிலையின் இறுதிநிலை
சீர்மிகு கண்திறப்பாம்.......
விளையும் பயிருன்றோ
வழி திறப்பே முதல் நிலையாம்......
எண்ணோடு எழுத்தென்னும்
இரு கண்கள் திறக்கின்ற
திண்ணிய பணி செய்யும்
சிற்பியரும் நீங்களன்றோ !

வாழ்நாள் முழுவதையும்
மாணவர்களுக்காய் அளித்து
வீழ்நாள் இலான் கல்வி
விளைக்கும் நீ வாழியவே !

**செல்வி எல்.கஜனா**
உள்ளகப் பயிற்சி ஆசிரியர்
தேசிய கல்வியியற்கல்லூரி,
கோப்பாய்.

# நெஞ்சில் நிலைத்த ஆசான்

ஆசிரியர் எனும்,
மாண்புமிகு பணிதனைச் செய்து - இன்று
மணிவிழாக்காணும் புவனேந்திரன் ஆசானுக்கு
இதயத்தால் இக்கவியை வைக்கின்றேன்

வயவன் தந்த மகன்
பண்பாளன் புவனேந்திரன் தனக்கான
பணிகளிலே
தளராது நின்றுழைக்கும்
கணக்கான மனிதனிவர்
கணிதபாடத்தை சிறப்பாகப் புகட்டி
சமய நெறிகளிலும்
சகல பொது சேவைகளிலும்
தளராது சேவை செய்கின்ற
இவர் சேவை வாழியவே !

கல்விப் பணிக்காய்
கடமை தவறாது
உடல் வருத்தம் பாராது
உள்ளமதை அர்ப்பணித்த
பொறுமை மிகு ஆசான்
வரும் எதிர்காலமெல்லாம்
வாழ்வினில் வசந்தம் பொங்க வாழியவே!

வயவனில் பிறந்து
வயவன் அன்னையின் பணியாற்றி
மணிவிழாக்காணும் என் இனிய ஆசானே
உமது சேவையால் இங்கு
எத்தனை மாணவர்கள் சீர்பெற்றுள்ளார்கள்
எத்தனை மலர்கள் சிரிக்கின்றன
கல்விப் பணிக்காய் பணியாற்றிய
எம் ஆசானே வாழிய வாழியவே !

தாராள மனப்பான்மை கொண்ட பேராளன்
கணிதபாடத்தை விருப்புடனே போதித்த
பார்போற்றும் பண்பு கொண்டவர் நீவிர்
சிந்தை மகிழ்ந்தோமிங்கு சீருடன் சேவைதனை
சிறப்பாக ஆற்ற புவனம் அளித்த இந்திரனே
நல்லறிவு புகட்டும் நல்லாசானாய்
தன்புகழ் ஓங்கிட சேவை செய்து
ஓய்வுபெறும் வேளை உங்களை
மனமார வாழ்த்துகின்றேன்

**ஸ்ரீபன் தனுசியா**

தரம் 9D

# Why I Would Like to be a Docter

It is my earnest with to be a docter one day. About three years ago my grand mother was hospitalised and while visiting her, I could hear the painful groans and moans of ailing patients and see for my self their agony and suffering. Ever since then I have decided to enter the medical profession. I would like tocure the sick and relieve them of their pain and suffering. I have often heard people say that a physician is next to god. I do feel that there is aworld of truth in this saying.

It is not an easy task to qualify as a doctor. To enter the medical profession there is competition. I have to burn the midnight oil and work hard at subjects like chemistry, zoology, botany and physics. I have to attain a very high standard in these subjects, Once I enter the medical faculty, Ihave to labour hard to achieve. success, besides the period of training is rather long. Nevertheless my mind is made up.

I would like to treat suffering patients and help them to live healtheir and happier lives. There is, at present a shortage of doctors in our country. Particularly in the North and East. Eventhough agreat many youngsters pass out as doctors year by year,most of them prefer to go abroad seeking greener pastures. Thrir only aim is to a mass a handsome suim of money by setting up a lucrative practice there. But man does not live by bread alone. Mere material gain is no consideration for me. It is my sincere wish to serve my unprivileged fellowmen in their hour off need. Many poor patientsdie pathetically for wont of proper medical assistance. So I would like to save these precious humen lives whice cannot be bought for money. This is the greatest service i can render to my fellow men.

I know pretty well that a doctor's time is never his own.He takes his lunch at all sorts of hours. So it is with his dinner, since he is likely to be called at odd times in the night. His is a life of dedicated servic. He should not look for his fees alone. He should be willing to serve the poor patients and look upon them as his own brothers and sisters. He should never forget the fsct that service is sure to be appreciated by society and rewarded by God.

It is my desire at a leter stage to set up a hospital of my own and help the poor by goving them medicine free of charge. It is my Fond hope that my dream will come true one day!

**Kayani.suthas**
**தரம் -11D**



# 29 வருட கல்விச்சேவையில் கணித ஆசானாக, உதவி அதிபராக, பிரதி அதிபராக கடமையாற்றி ஓய்வு பெறும் மணிவிழா நாயகனுக்கு வாழ்த்துச் செய்தி

பெற்றோர்முதல், ஆசிரியர் இரண்டாம் என்ற வாக்கிற்கமைய இன்றைய மணி விழா நாயகன் புவனேந்திரன் அவர்கள் எமது கல்லூரியின் அனைத்து மாணவர்களுக்கும் இரண்டாம் நிலைப் பெற்றோராக இருக்கிறார். இத்தகைய பல சிறப்புக்களைக் கொண்ட நாயகன் 02.07.2018ல் ஓய்வு பெறுகிறார். அவருடைய மனம், உடல் என்பவற்றுக்கு ஓய்வு இல்லை. அவர் என்றும் எமது கல்விச் சமூகத்திற்கு பணிகளை ஆற்ற வேண்டும்.

ஆசிரியருக்கு நல்ல தோற்றம் வேண்டும், கவர்ச்சியான தோற்றம், தாய்மை, தோழமைத்தன்மை, பொறுமை, நகைச்சுவைத்தன்மை, மரியாதை, நேர்மை, பாரபட்சமின்மை, தற்பெருமையின்மை, தொழிலில் ஈடுபாடு முதலிய பண்புகள் வேண்டத்தக்கது. இத்தகைய பண்புகள் அனைத்தையும் ஒருங்கே கொண்டவர் தான் எங்கள் பிரதி அதிபர் புவனேந்திரன்.

இன்றைய காலகட்டத்தில் ஆசிரியர்களுக்கு பல்வேறு ஏவல்கள், அறைகூவல்கள் எழுகின்றது. இவைகளின் மத்தியில் மணிவிழா நாயகன், மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுத்ததுடன் வெறுமனவே ஊதியத்திற்காகப் பணியாற்றாது முற்றுமுழுதாக சேவை மனப்பாங்குடன் பணியாற்றியவர். மதத்தை நேசிக்கின்ற ஒருவனிடம் ஏனைய பற்றுக்கள் யாவும் ஒருங்கிணைந்து காணப்படும் என்பதனை கல்லூரியின் நிகழ்வுகள் ஒவ்வொன்றிலும் எடுத்துக் காட்டும். கல்விச் சமூகத்திற்குத் தன்னை இணைத்துக் கொள்கின்ற ஒருவன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு எங்கள் பிரதி அதிபர் புவனேந்திரன் முன்னுதாரணமாவார்.

ஆசிரியத்துவக் காலத்தை அழகுறச் செய்து சமூகம் நயந்த பெருமனிதன் வேலாயுதம் புவனேந்திரன் அவர்கள். ஆசிரிய சமூகத்திற்கு முன்னோடியாக விளங்கியவர் அவர் தனிப்பட்ட வாழ்வில் பின்பற்றிய ஒழுக்கம் சமூகத்திற்கும் கல்லூரிக்கும் கொண்டிருந்த பந்தம் நெருக்கமானது.

மணிவிழா நாயகனும் அவரது குடும்பமும் நீண்ட காலம் வாழ இறைவன் அருள்புரிவதுடன் அவரை வாழ்த்துவதிலும் மகிழ்வடைகின்றேன்.

**சி.பாலகிருஷ்ணன்**
ஆசிரியர்,யா/வயாவிளான் மத்தியகல்லூரி.



# BE A GOOD TEACHER .......

A teacher is an important person in a society. A community depends on teachers, because they are the backbones and real builders of the nations. patience, toterance kindness and confident are the best qualities for a teacher.

A good teacher should have the best qualities.

They are

- Be humble
- Be smart
- Be a brave and peaceful person
- Be a noble and sincere person among the students
- Be a friendly and guiding light
- Be a popular person with inner qualities
- Be a flexible person
- Know the students and accept them well
- Integrate them -then you will be happy
- Be a country and forgiving person
- Keep a good relationship with all

The most important for a teacher is the appearance, because it gives amart and self confident, good colthes are good investment.

" if you give your best the best will come back to you "

"the basis of good apperance is good health"
If a teacher keeps all these qualities, he/she should share achieved the goal.

May you enjoy a blessed retirement and may the god bless you with long life, health and happiness.

**Best wishers and congratulation**
**R.Sivkumar, Teacher**
**J/V.C.C.**

# அன்பின் பெரும் சொத்து நீரே!

பூவாய் மலர்ந்து இப்பூமியில் அவதரித்த
எம் கல்லூரி ஆசானே,
இப்பாடசாலைக்கு நீர் கிடைத்தது
பெரும் சொத்து

இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்கு
எமக்கு ஓர் ஆலயம் அமைத்துத் தந்து
அவ் ஆலயத்தை அழகுறச் செய்து
எம்மை வழிப்படுத்திய ஆசானே

இருபத்தொன்பது ஆண்டுகளாய் எமது கல்லூரியில்
மாணவர்களை நன்முறையில் வழிப்படுத்தி
சமூகத்தில் நற்பிரஜையாக வாழ எம்மை
நெறிப்படுத்திய எம் ஆசானே

மாணவர்களுக்கு கல்விதனை
பொறுமையுடன் கற்பித்து
பொன்னான நேரம் தனை கண்ணாக
காத்திடும் எம் ஆசானே நீர் என்றும் வாழ்க !

கல்லூரியின் பிள்ளைகளை தம் சொந்த
பிள்ளைகள் போல் எண்ணி வழிநடத்துபவரே
அந்த ஆகாயம் கூட ஈடாகுமா? உங்களுக்கு.......
உமது ஆயுட்காலம் நீடிப்பதற்கு வாழ்த்துகின்றோம்

யூலை மாதத்தில் மலர்ந்த அன்பு ஆசானே
வாழ்க்கையில்பல சீரும் பெற்று
வாழ வேண்டும் என்று
உள்ளம் குளிர்ந்து வாழ்த்துகின்றோம்

**ஏ.அனித்தா**
தரம் 11 C

# Science and technology

Science Promotes logical thinking
Technology uses man's thinking.

Science and technology has helped people to gain control over nature. The first people had little control over nature. They had to depend on nature for their living. They had to depend only simple tools. They did not know how to raise animals or plants. They had no permanent homes. Animals skins were their only protection against the cold. The cold. The sun was their only source of light. With the passage of time, people discovered how to make fire and learnt to raise animals and crops. With the development of farming, they began to build settlements. Then they discovered new methods to make their work easier, and to increase their comforts. Through the ages technology has helped people to build a more comfortable way of life.

Industrial technology began with the invention of the steam engine. The work in factories become faster. The production increased. The working hpurs were reduced. The redio and telivision changed their entertainment habits.

technology helps people to live in greater comfort and security than in the past Agriculture, medicine and transport technologies have brought many benefits to man.

Today machines do most of the work. powered machines have increased production and given people more leisure. The needs of the people began to increase. The result is the creation of a world of modern science and technology.

**J.Pavikshana**
Grade 9D

# எங்கள் ஆசான் திரு.வே.புவனேந்திரன் அவர்கள்

யா/வயாவிளான் மத்திய கல்லூரியில் பல வருடங்கள் திரு.வே.புவனேந்திரன் ஆசிரியரிடம் கணிதம் பயின்றிருக்கிறேன். பாட மணி ஒலித்ததுதான் தாமதம் உடனே ஆசிரியர் வகுப்பறைக்கு வந்துவிடுவார். தகுந்த ஆயத்தங்களோடும் மேலதிக கணித வினாக்களோடும் தான் எப்போதும் வருவார். பாடத்தில் விளக்கமற்ற பகுதிகளை எத்தனை தடவைகள் கேட்டாலும் சலிக்காமல் விளக்கம் தருவார்.

கணிதத்தில் ஆர்வம் குறைந்த மாணவர்களை கரும்பலகைக்கு அனுப்பி கணக்குகளைச் செய்வித்து விளக்கம் கொடுப்பார்.சிறந்த அறிவுரைகள், ஆலோசனைகளைச் சொல்லி கல்வியில் வளம் பெற நல்வழிப்படுத்துவார். தனது ஓய்வு நேரங்களில் கூட எமக்கும் பாடம் நடைபெறாதிருந்தால் கணிதப் பயிற்சிகளைச் செய்விப்பார்.

மாணவர்களுடன் கதைக்கும்போது தான் கோபத்தில் நின்றாலும் மாணவர்களின் மனது புண்படாதபடி அன்பாக தவறுகளை எடுத்துச் சொல்வார். ஒருசில வேளை கற்றற் செயற்பாடுகளை மாணவர்கள் யாராவது குழப்ப நினைத்தால் சும்மா இருக்கமாட்டார். அவர்களைக் கண்டித்து அமைதியாக இருக்கச் செய்தபின்பே பாடத்தைத் தொடர்வார்.

உண்மையில் இந்த ஆசிரியரிடம் கணித பாடம் கற்பிக்கும் வாய்ப்புக் கிடைத்தால் மாணவர்களுக்கு வேறு பிரத்தியேக வகுப்புக்கள் ஏதும் தேவைப்படாது. என்றாலும் பாடசாலை தொடங்கு முன்பும் பாடசாலை முடிவுற்ற பின்பும் மேலதிக வகுப்புகள் எடுப்பதற்கு அவர் தவறுவதில்லை.

இத்தனை பற்றுறுதியுடன் பணியாற்றும் ஆசிரியருக்கு எங்கே நேரம் கிடைகிறதோ தெரியவில்லை பூங்கன்றுகள், மரங்கள் வாடி நின்றால் எப்பாடுபட்டாவது தண்ணீர் பாய்ச்சத் தவறமாட்டார். மாணவர்களையும் அன்போடு அழைத்து பூமரங்களை பராமரிக்கச் செய்வார்.

நீண்ட காலமாக புவனேந்திரன் ஆசிரியர் அவர்கள் எமது கல்லூரியில் பணியாற்று வது எமக்கு பெருமைதான். இப்போது அவர் பணியிலிருந்து ஓய்வடையப் போகிற செய்தி எம்மை கவலையடையச் செய்கிறது.
ஆசிரியர் எல்லா வளமும் நலமும் பெற்று பல்லாண்டு வாழ இறைவனை வேண்டிக்கொள்கிறேன்.

**ஜெனோபா**
(தரம் 13, கலைப்பரிவு)

# கவி எழுதும் மாணவி

கவி வடிப்பதற்கு நான் கவிஞனும் அல்ல கண்ணதாசனும் அல்ல
இருப்பினும் வடிக்கிறேன் உள்ளத்தில் உள்ளதை உள்ளபடியே

வாழ்வுக்கு வழிகாட்டும்
வயவன் அன்னையின் புதல்வனாய்
மாணவப் பருவத்திலே
எம் பள்ளி தனிலே இணைந்து
நல் ஆசானாகியும் எம் பள்ளியை விட்டுப் பிரியாது
இன்று வரை பணி புரியும் எம் அன்பு ஆசானே
உம் பணி மெய்யாகவே போற்றுதலுக்குரியதே

உம் பணியில் நாம் பெற்ற நன்மைகள் பல - எமக்கு
அறிவை மட்டும் அன்றி அன்பை மட்டும் அன்றி
ஒழுக்கத்தையும் ஊட்டி வளர்த்த - எம்
அன்பு மிகு ஆசானே!
உம்மை வாழ்த்துகின்றோம் போற்றுகின்றோம்

பற்பல நேரங்களில் - உமது தனிப்பட்ட செயற்பாட்டில் கூட
பங்கெடுக்காது - செய்யும்
தொழிலே தெய்வம் என எண்ணி
எமக்கு கல்வி புகட்ட
பள்ளிக்கு வருகை தந்த எம்
கடமை தவறா ஆசானே - உம்பணி
அனைவருக்கும் முன்மாதிரியானதன்றோ !

நீர் எமக்கு செய்த சேவைக்கு
நன்றி சொல்ல வேண்டுமென்றால்
எம் வாழ்நாள் முழுவதுமே போதாது
அப்படி இருந்தும் - இறைவனை
பிரார்த்தித்துக் கொண்டு உமக்கு
சொல்கின்றோம் பல நன்றிகள்
நன்றி நன்றி நன்றி நன்றி

**த.அனோஜினி** - தரம் 10 A

# அன்பு ஆசானே

ஆசானாம் ஆசானாம் - எம்
புவனேந்திரன் ஆசானாம்
போற்றுகின்றோம், போற்றுகின்றோம் - உம்
சேவையை என்றும் போற்றுகின்றோம்

தங்கச் சொரூபமாய் மிளிர்கின்ற ஆசானே
பணிவும் அடக்கமும் புன்சிரிப்பும் கொண்ட - எம்
அன்புள்ள ஆசானே,
போற்றுகின்றோம் போற்றுகின்றோம் - உம்
சேவையை என்றும் போற்றுகின்றோம்

கணித விவேகம் தன்னை துல்லியமாகச்
சொல்லித் தந்த எம் அன்பு ஆசானே
போற்றுகின்றோம் போற்றுகின்றோம்

வழிமாறிப் போகும்போதும் வழிகாட்டி மரமாய் வந்தீரே
படிகளின் எம்மை ஏற்றி வைக்கப்
படிக்கல்லாய் உம்மை மாற்றினீரே
மறவோமே மறவோமே நாம்
என்றும் மறவோமே

**க.ஹம்சிகா**
தரம் -10D

# Good teacher quotes

1] Success is not a good teacher
failure makes you humble

2] A good teacher can inspaire hope,
ignite the imagination, and in still
a love of learning

3] I cannot emphasize enough the
importance of a good teacher

4] Experience is a good teacher,
but she sends in terrific bills

5] A good teacher is a de termined person

6] Of all the hard jobs around,
one of the hardest is being a
good teacher.

7] A good teacher is like
a candle - it
consumes it self to light
the way for others.

**P.Sobiya**
**JNCOE (16th Batch)**



# எண்ணக்கரு படமாக்கப்படல்

**எண்ணக்கருப் படமாக்கல் என்பது யாது?**

எண்ணக்கருப் படமாக்கலானது ஒரு செயல்முறையாகும். அங்கு மாதிரிகைகள், கருத்துக்கள் மற்றும் எண்ணக்கருக்களுக்கு இடையிலான தொடர்புகள் பற்றிய கட்புல அடையாளங்களை உருவாக்குமாறு மாணவர்களைக் கேட்கலாம். உங்கள் மாணவர்கள் எண்ணக்கருக்களைக் கொண்ட வட்டங்கள் மற்றும் கோடுகளையும் கோட்டிலுள்ள சொற்றொடர்களையும் இணைத்தல் வேண்டும். இதனைத் தனியாகவும், குழுக்களாகவும் செய்யலாம். மாணவர்கள் எதிர்பார்ப்பது போல அதனைத் திரும்பவும் செய்யும் பொழுது புதிய தகவல்களும் கண்ணோட்டங்களும் பகிரப்படலாம், கலந்துரையாடப்படலாம் மற்றும் விமர்சிக்கப்படலாம்.

**எண்ணக்கருப் படமாக்கலில் பயன்படுத்தப்படும் அடிப்படைச் சொற்கள்**

- எண்ணக்கரு படமாக்கல்: அறிவையும், கருத்துக்களையும் படமாகப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு நுட்பமாகும்.
- அறிவுக்கோடுகள்: எண்ணக்கரு பற்றிய வலைப்பின்னல்
- வலைப்பின்னல் முடிச்சுகளைக் கொண்டிருத்தல் (குறிப்புக்கள், தொடர்புகள், வளைவுகள், ஓரங்கள் ) என்பவற்றைக் கொண்டிருக்கும்
- முடிச்சுகள் : எண்ணக்கருக்களையும் தொடர்புகளையும் பிரதிநிதித்துவம் செய்யும்
- தொடர்புகள்: எண்ணக்கருக்களுக்கு இடையிலான தொடர்பினைப் பிரதிநிதித்துவம் செய்யும்.

பின்வரும் எண்ணக்கருப்படத்தில் இவ்வாறான சொற்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன

எண்ணக்கருவும் சில நேரங்களில் தொடர்புகளும் பெயரிடப்படுகின்றன. தொடர்புகள் திசையற்றவையாக அல்லது இரு திசை கொண்டவையாக இருக்கலாம். எண்ணக் கருக்களும் தொடர்புகளும் வகைப்படுத்தப்படலாம். இவை இலகுவாகச் சேர்க்கக் கூடியவை, குறிப்பானவை அல்லது காரணமும் தற்காலிக தொர்புகளும் என்ற வகையில் வகைப்படுத்தக் கூடியவை.

இந்த முறையை கேர்னல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் joseph D.Novak என்பவர் 1960இல் விருத்தி செய்தார். இது David Ausbel என்பவருடைய கொள்கைகளை

அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. புதிய எண்ணக்கருக்களைக் கற்பதற்கு முன்னைய அறிவு அவசியமென ஒசுபல் வலியுறுத்தினார். அவர் தனது பணியைப் பின்வருமாறு சுருக்கமாக கூறினார். "பொருள் பொதிந்த கற்றலானது புது எண்ணக் கருக்களையும் தற்போதுள்ள அறிகை அமைப்புக்களின் பிரேரணைகளைத் தன்மயமாக்குவதிலும் ஈடுபடுகிறது " என்கிறார்.

**எண்ணக்கருப் படத்துக்கும் உளப்படத்துக்கும் இடையிலான வித்தியாசம் என்ன?**

எண்ணக்கருப் படத்துக்கும் உளப்படத்துக்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில் உளப்படத்தில் ஒரேயொரு எண்ணக்கரு மட்டும் இருக்கும். எண்ணக்கருப் படத்தில் பல எண்ணக்கருக்கள் இருக்கலாம். எனவே தான் உளப்படத்தினை ஒரு மரம்போல பிரதிநிதித்துவம் செய்யலாம். எண்ணக்கருப்படத்துக்கு வலைப்பின்னல் சார்ந்த பிரதிநிதித்துவம் செய்யலாம். எண்ணக்கருப்படத்துக்கு வலைப்பின்னல் சார்ந்த பிரதிநிதித்துவம் தேவை.

**எனது வகுப்பறையில் அதனை எப்போது பயன்படுத்தலாம்?**

உங்கள் மாணவருக்கு ஒரு எண்ணக்கருவை அறிமுகம் செய்யத் திட்டமிட்டால் கருத்துக்களுக்கு இடையிலான தொடர்புகளை அவர்கள் விளங்கிக் கொள்ள இணைப்புக்களுடன் கூடிய கற்றல் படங்களை உருவாக்குதல் மூலம் உதவலாம். அப்போது இம்முறையைப் பயன்படுத்துவது பொருத்தமானது.

இந்த முறையானது பல பாடத்துறைக்கும் தலைப்புக்களுக்கும் எந்த மட்டத்திலும் பயனுள்ளது. ஏனெனில் உங்கள் மாணவர்கள் ஏற்கனவே கொண்டிருக்கும் கருத்துக்களுக்கும் தற்போதைய கருத்துக்களுக்கும் புதிய கருத்துக்களுக்கும் மற்றும் ஏற்கனவே உள்ள அறிவுக்கும் இடையில் இணைப்புக்களை ஏற்படுத்த இடமளிக்கின்றது. கருத்துக்களை இறுக்கமான அமைப்பாகவன்றி தர்க்கரீதியாக ஒழுங்கமைப்பதால் எதிர்காலத் தகவல்களுக்கும், கருத்துக்களுக்கும் இடமளிக்கலாம்.

சிக்கலான எண்ணக்கருப் படமாக இருந்தால் சிறு மாணவர் குழுக்கள் (3-5) கூட்டாக வேலை செய்யலாம். எளிமையான எண்ணக்கருப் படமானால் உங்கள் மாணவர் தனித்தனியாகவும் வேலை செய்யலாம்.

**இந்த முறையைப் பயன்படுத்துவதற்குத் தேவையதான வளங்கள் எவை?**

இந்த முறையைப் பயன்படுத்துவதில் உங்களுக்குச் சில உசாத்துணைகளும்

படங்களும் தேவைப்படலாம். மாணவர்களுக்கு எண்ணக்கருக்களைப் படமாக்க சுழல் அட்டவணைகள், துப்பரவான தாள்கள் தேவை.

**இதனை எனது வகுப்பறையில் எவ்வாறு பயன்படுத்தலாம் மற்றும் பின்பற்றலாம்?**

ஒரு எண்ணக்கருப் படத்தை உருவாக்க மாணவர்கள் முதலில் சில உசாத்துணைகளை வாசிக்குமாறு கேட்டு அவற்றினை 10-15 முக்கிய எண்ணக்கருக்களாக அல்லது கருத்துக்களாக பல உதாரணங்களுடன் கூடிய பட்டியல் ஒன்றைத் தயாரிக்குமாறு கேட்கலாம்.

உங்கள் மாணவர்கள் ஒரு வகுப்பாக அல்லது சில குழுக்களாக எண்ணக் கருப்படத்தினை கட்டியெழுப்ப பின்வரும் படிமுறைகள் உதவுகின்றன. அதே பட்டியலைக் கொண்டு வெவ்வேறு படங்களை உருவாக்குமாறும் உங்கள் மாணவரைக் கேட்கலாம். அவை கருத்துக்களுக்கு இடையேயுள்ள தொடர்புகளுக்கு நீங்கள் எவ்வாறு விளக்கமளிக்கிறீர்கள் என்பதில் தங்கியுள்ளது.

1) எண்ணக்கருக்களையும் உதாரணங்களையம் சிறுதுண்டுக் கடதாசிகளுக்கு மாற்றுமாறு உங்கள் மாணவரைக் கேட்டுக் கொள்ளுங்கள்.

2) சிறுதுண்டுக் கடதாசிகளை ஒரு பெரிய கடதாசியில் அல்லது சுவர்ப்பலகையில் ஒழுங்கு செய்ய விடுங்கள். பரந்த மற்றும் மிகவும் கருத்து நிலைசார்ந்தவற்றை மேற்புறத்திலும் குறிப்பான கருத்துக்களைக் கீழ்ப்புறத்திலும் ஒழுங்குபடுத்தலாம். உதாரணங்களை இப்போது சேர்த்துக் கொள்ள வேண்டாமென அறிவுறுத்துங்கள்.

3) இயலுமானால் எண்ணக்கருக்களை ஒழுங்குபடுத்துமாறு மாணவர்களைக் கேட்டு அவர்கள் கருத்துக்கள் ஒவ்வொன்றுடனும் தொடர்புள்ள கருத்துக்களின் கீழ் நேரடியாகச் செல்லலாம். ஆயினும் உங்கள் மாணவரால் அதிகமான கருத்துக்கள் வழங்கப்படுமானால் கூடுதலான எண்ணக்கருத்துக்களை சேர்க்க அல்லது அவர்களிடமுள்ளவற்றை விரிவாக்க உதவலாம்.

4) பின்னர் மேலேயுள்ள எண்ணக்கருக்களிலிருந்து கீழேயுள்ள எண்ணக்கருக்க ளுக்கு ஒன்றோடொன்று தொடர்புள்ளவற்றுக்கு கோடுகளை வரைந்து கொள்ளுமாறு கேட்கலாம். அவ்வாறே ஒரே மட்டத்தில் இருக்கும் தொடர்புடைய எண்ணக்கருக்களுக்கு கோடுகளை வரைவிக்கலாம். தேவையானால் இந்தக் கட்டத்தில் கடதாசித் துண்டுகளை மீள் ஒழுங்கு படுத்துமாறு ஆலோசனை வழங்கலாம்.

5) எண்ணக்கருப் படமாக்கலின் அடுத்த படி முறை மிக முக்கியமானதும், கடினமானதுமாகும். ஆகவே, கோடுகளை இணைப்பதற்கு நீங்கள் உதவலாம், வழிகாட்டலாம். சொற்களை அல்லது சொற்றொடர்களை எழுதி எண்ணக்கருவுக்கு மத்தியில் தொடர்புகளைக் காட்டலாம்.

6) இணைப்புகளை மேற்கொண்ட பின்னர் எண்ணளக்கருக்களின் கீழே உதாரணங்களை வைக்குமாறு உங்கள் மாணவரைக் கேட்கலாம். அத்துடன் "உதாரணமாக" என்னும் சொற்றொடரைக் கூறி எண்ணக்கருவினை உதாரணத்துடன் இணைக்கலாம்.

7) இத்தகைய படிமுறைகள் எல்லாவற்றையும் செய்த பின்னர் மேற்கூறிய படிமுறைகளை ஒரு தனித்தாளில் பிரதி பண்ணுமாறு மாணவர்களைக் கேட்கலாம். குறிப்புக்களை வழங்குவதற்குப் பதிலாக எண்ணக்கருக்களைச் சுற்றி வட்டம் வரையக்கூடாது என்பதனை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

**நடராசா மகேந்திரன்**
ஆசிரியர்,
யா/வயாவிளான் மத்தியகல்லூரி

# என் அன்பான ஆசானே

நாம் வணங்கும் ஆசானே நேரில் வாழ்த்திட
துணிவின்றி கவிதையாய் வாழ்த்துகின்றோம்
தங்களின் சேவையை கோர்வையாய் பாட
கவிதையில் பார்வையை செலுத்துகிறேன்
கடந்த பாதையிலே

வாழ்க்கையின் பல போராட்டங்களை
துணிவுடனே சந்தித்து
கல்லூரியின் பெருமையை உயர்த்த
அயராது உழைத்த தந்தையே !

நம்பாடசாலை சொத்துக்களை பேணிப்பாதுகாத்து
அதனை சீராக்கம் செய்தவரே !
இறைவனுக்கு நன்றி செலுத்த நமக்கென ஓரிடம் தந்து
நற்பண்புடன் வழிகாட்டியவரே

பாடசாலையை நல் அழகுடன் பேணுவதற்கு
விருப்புடன் நாட்டிய பூக்கன்றுகள்
வரிசையாய் நின்று வணக்கம் சொல்லி
என்றும் எமக்கும் உம் நினைவைப் பரிசளிக்கும்

முப்பது ஆண்டு காலம் எமது கல்லூரியில்
மாணவர்களுக்கு கணித பாடந்தனை
பல்வேறு முறைகளில் அன்புடன் அரவணைத்து
நுணுக்கமாக அறிவூட்டிய எம் ஆசான் நீரே

ஞாயிறு போன்று ஒளியினைத் தந்து
எமை நிலவு போல ஒளிரச் செய்து
சேவையால் தானும் பேரொளி வீசிய ஆசானே
நீடூழி காலம் ஆண்டவரின் ஆசியுடன் வாழ்வீராக !

**வர்னிகா**
தரம் 11 C

## நல் ஆசான்

புன்னகை பூத்த வதனத்துடன்
அழகிய ஜோதியாம் நம் பள்ளியில் .....

வன்மையான சொல் ஒன்றைக் கூட
வாய்விட்டு சொல்லிடாத ஆசான் .....

மனிதநேயத்துடனும் அழகிய
நேத்திரத்துடனும் பள்ளியில்
வலம் வருபவரே
நம் ஆசான்......

எந்திரனும் வியக்கும்படி
இயந்திரத்தை இலகுவாக
இயக்குபவரே
நம் ஆசான்

திறமை பல இருந்தாலும்
நிறைகுடமாய் தளம்பாது
திமிரின்றி தன்னடக்கம்தனை
திடமாய் பூண்டவரே எம் ஆசான்

இனிமையாகக் கதை பேசி
இரசனை கொண்டு
கணிதக் கல்வி தருபவரே
நம் ஆசான்

என்னிடமும் உன்னிடமும்
பாரபட்சம் பார்க்காமல்
பழகிச் செல்பவரே
நம் ஆசான்

நேரம் தவறாமல்
பள்ளிக்கு வந்து
கடமைதனை தவறாமல்
கச்சிதமாய் முடிப்பவரே
நம் ஆசான்

கண்ணியமாய் நமக்கு
கணித பாடத்தை
கற்பிப்பதே அவர்
முதல் வேலை

காலம் நேரம் பார்க்காது
நம் பள்ளிக்காக
அயராது உழைப்பவரே
நம் ஆசான்....
அவரே எங்கள்
மதிப்புக்குரிய புவனேந்திரன் ஆசான்

விதுஜா சந்திரசேகரன்
2020 A/L
வர்த்தகம்

# அன்பு ஆசானுக்கு

தித்திக்கும் நினைவுகளுடன்
வெள்ளை புறாக்களைப் போல்
திரியும் எம்மை ஒன்றிணைத்த
கல்லூரித்தாயின் அன்பு மலர் நீங்கள்

தோல்வியுற்ற வேளைகளில்
கை கொடுப்பது உமது கல்வியால்
கல்வி எனும் ஒளியினை ஊட்டி
வாழ்க்கையில் உயர வைப்பது உமது சொற்களே

நீர் நாட்டிய மரங்கள் இன்றும்
உம் பெயர் சொல்லி அழைக்கின்றன
அதில் பூக்கும் பூக்கள் உம் முகம் பார்த்து
நித்தமும் புன்னகைக்கும்

கல்வியும் பாசமும் பகிர்ந்த நேசமும்
அன்பின் கோபமும், இதமான புன்னகையும்
கனமான வலியுடன் இதயத்தை அடைக்கிறதே
பிரியாவிடை எனும் சேதிகேட்டு

நீர் இங்கு இருந்த போதும் உம்புகழ் பாடினோம்
நீர் சென்றாலும் உம் புகழ் பாடுவோம்
என்றும் புகழோடு வாழ வயவன் அன்னையின்
ஆசி என்றும் உம்மோடு துணைவரும்

**ஜெசியா.கே**
தரம் 11 C

# வயவன் அன்னையின் முத்துமகன்

வயவன் ஈன்றெடுத்த முத்துமகனாம் புவனேந்திரன் ஆசிரியரே
வயவனின் மாணவனாக அடியெடுத்து வைத்து
புவனம் போற்றிடவே வெளியேறும் சிறந்த மகான்
கல்வி பொங்கும் பூங்சோலையில் கணிதம் எனும்
தேன்மழை பொழிந்து இயேசுவின் தூதனே!
பாகல் போன்று கசந்திட்ட கணிதம் தனை தேன் சுவைபோல்
மனதில் ஊறவைத்த அறிஞர் நீரே
நீர்வரும் போது முகம் மலர்ந்த வயவன் உம் பிரிவினால்
முகம் வாடி நிற்குதையா
ஒவ்வொரு விடியலிலும் உமது வருகையைப் பார்த்து மலர்கின்ற
செடிகள் உம்மை காணாது தேடுதையா
ஒவ்வொரு செடிகளின் தேடலிலும்
உம்முகம் தெரியுதையா
நீர் கால் பதித்த சுவடுகளெல்லாம்
ஏங்குதையா உம் வருகைக்காக
உம் பெரும் பிரிவினால் நிலங்கள்பசுமை இழக்குதையா
உம் பிரிவின் பின் மரங்கள் பசும் தளிர் பரப்ப மறுக்குதையா
மீண்டும் கல்விதனைப் போதிக்க
உமது வயது தான் தடுக்கிறதே
சிறந்த சேவையாளன் உம் பிரிவால்
மீளாதுயரடைய வைத்து விட்டீரே நம்மை
வயவன் அன்னையின் கள்ளமில்லா புத்திரனே
உம் சேவை நம்மை வியக்க வைக்குதையா
பட்டாம் பூச்சி போன்ற நாம் தேன் போன்ற கல்வியைப்
பெற உம்மை அர்ப்பணித்தீரே
உம் சேவையைக் கண்டு வயவன் பூமி
வாயடைத்து நிற்கிறதே
தன்னலம் பேணாது பிறர் நலம் பேணும்
வஞ்சனை இல்லாத குழந்தை மனம் உம் முடையதோ
இனி இவ் வயவனில் உம்மைப் போன்ற மகனைப்
பார்ப்பதும் கடினமே
வயவன் அன்னை தன் குழந்தையை இழந்து தவியாய் தவிக்கிறாளே
இருபத்தொன்பது வருட கால உம் சேவை வாழ்க ! வாழ்க !

**எஸ்.அஸ்வினி, பி.கிருசாந்தினி** - தரம்11 D

# அன்பு ஆசானுக்காக

பல கனவுகளை மனதிருத்தி உயர்தரம்
என்ற ஏணிப்படிகளை எட்டியவேளையில்
தந்தையாக நீரிருந்து - ஏக்கம் தனை
அளித்தவரே உமை என்றும் நான் மறவேன்

தினம்தினம் வகுப்பறையிலே - தந்தையாய்
நீரிருந்து நமக்காகக் கூறும் - அத்தனை
புத்திமதிகளும் பள்ளிப்படிப்பு முடிந்திடினும்
மறந்து விடக் கூடியதா?

என் வாழ்வில் நிச்சயமாய் நான் உமது
விருப்பப்படி உச்சிமலை தொட்டிடுவேன்
எத்தனை புகழ் என்னைச் சார்ந்திடினும்
என்வாழ்வில் உமை மறவேன்

நித்தமும் நீர் கூறும் பாடங்கள் - என்
வாழ்வை முன்னேற்ற வழி கூறும்
படிக்கட்டுகள் நிச்சயமாய் உம் விருப்பை
நிறைவேற்றி உமக்குப் புகழ் சேர்க்கும்

நான் தோல்வியுற்ற போதிலெல்லாம் - குழந்தையாய்
கைகொடுத்து நம்பிக்கை எனும் ஒளியினை
எனக்கூட்டி - என் வளமான வாழ்விற்கு
வழியமைத்தவரை ஆயுள் வரை மறவேன்

வேதனைகள் வாழ்வில் இல்லை - தோல்விகள்
தொடர்கதைகளன்று - எனத்
தினம் தினம் கூறிச் சாதனை வீரராய்
எமை மிளிர செய்த கணித பாட ஆசானே - உம்
பணி என்றுமே உயர் பணி தான்

ஈருயிர் ஓருயிராய் கலந்த நம் பள்ளி நட்புக் கூட
காலப்போக்கிலே காணாமல் போகலாம்
ஆனால் எதிர் காலத் தீபமாய் சுடர்விடும்

உம் பணி உயிருள்ளவரை மனதிலே நிழலாடும்
இளம் பிஞ்சுகள் நம்மனதில் நல்வித்துக்கள் தனை வீசி
ஞால அன்னைக்கு நல்முத்தாய் அளிக்கும்
உம்பணி எதற்குத்தான் ஒப்பாகும்?

ஆசானே என் தந்தை வடிவுருவிலே உருவான
உம் பாதம் தான் பணிந்து
பல்லாண்டு நீர் வாழ்ந்து - உம் பணி
பரவ இறைவனை வேண்டுகின்றேன்

**ஸ்ரீ.அபிராமி**
A/L (2020) Arts

# கலங்கும் விழிகளுடன்..........

வாழ்த்து அட்டை நீட்டுகின்றோம் புன்னகையுடன் ஏற்றுக் கொள்ளுங்கள்

கல்வியையும் மகிழ்ச்சியையும் இரட்டிப்பாக
அருகில் இருந்து எமக்களித்தீர் - உண்மையான
ஆசானுக்கும், அன்பிற்கும் இலக்கணம் நீர்

தேய்பிறை திகதிகளிலும் குறைவதில்லை
நிலவின் அழகு
உம் கோபத்தின் பொழுதினும் குறைவதில்லை
உம் கல்வியின் அழகு

30 வருடங்களில் மூன்று கோடி
கணித நுணுக்கங்களை
நுணுக்காய் கற்றுத் தந்தீர் எமக்கு - இதை
நாம் என்றும் மறவோம் எம் வாழ்வில்

மழைக்கால வானவில் போல ஒரு
நேரத்தில் வந்தீர் மனம மகிழும்
கல்வி அதை எமக்களித்தீர்
வானவில் மறைந்தாலும் நீர் தந்த கல்வி மறையாது

கடவுளைப் பிரார்த்திக்க எம்மை ஒன்று திரட்டிய
வேளையெல்லாம் இன்றும் நாம்
மறக்கவில்லை கவிதை எழுதும்
போதே கண்கள் பனிக்கின்றன
பிரியாவிடை கொடுக்க மனம் மறுக்கின்றது

கல்வியை உணர்த்திட ஆசான் எனும் உறவு தொடரட்டும்
உங்கள் சேவையே சிறப்பென்று உலகம் உரைக்கட்டும்
காலத்தின் மாற்றத்தில் பிரிவின் வலி மறையட்டும்
கலங்கும் விழிகளை விரல்கள் துடைக்கட்டும்
உங்கள் பயணம் சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்

**பே.புகழினி** - தரம் 11 C

# அன்புள்ள எங்கள் ஆசான்

அன்புள்ள ஆசான் தனது சிறிதளவு கவலைக்கும் இடம் கொடுக்காது எப்போதும் ஆனந்தம் நிரம்பியவராக இருந்து கணித பாடத்தை கண்ணியமாகப் படிப்பிப்பவரே. நீங்கள் மிகவும் பண்பானவராகவும், ஒழுக்கம் நிரம்பியவராகவும் உள்ளதால் இறைவன் எமது கல்லூரிக்கு தந்த முதல் முகவரி நீர் என்று கூறலாம். எமது பாடசாலையில் நடைபெறும் ஒவ்வொரு செயலையும் தம் நெஞ்சில் சுமந்து அர்ப்பணிப்புடனும் நல்லதோர் பிரதி அதிபராகவும் கடமையாற்றியவரே. எமது பாடசாலை வளங்களை சுற்றும் நட்புடன் பாதுகாத்து வந்தவரே கட்டாயமான கணித பாடத்தை தன்னிடம் படிக்கும் ஒவ்வொரு மாணவனும் நல்ல பெறுபேறு பெறவேண்டும் என்னும் எண்ணத்துடன் கற்பிப்பவரே. கண்ணுங்கருத்துமாய் எமது கல்லூரியை நெஞ்சில் சுமந்து காத்தவரே. கடிகார முள்ளாய் கல்லூயின் ஒவ்வொரு செயல்களையும் கவனித்து ஆனந்தம் கொண்டவரே இன்னும் பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென்று இறையாசியை வேண்டிநிற்கின்றேன்.

**அபிராமி விமலேஸ்வரன்**
தரம் 9 C

# எம் ஆசான்

1989ஆம் ஆண்டில் யா/வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் என்னும் எமது பாடசாலையில் கால் பதித்த திரு.வே.புவனேந்திரன் ஆசிரியர் அவர்களே! எங்களுக்குக் கணித பாடத்தினைக் கண்ணியமாய்க் கற்பித்தீர் ! பிரதி அதிபராக இருந்து செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்தீர்.கல்லூரியின் சுற்றுச் சூழலையும் வகுப்பறைகளையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென சூழலிலுள்ள புற்களை மாணவர்களின் உதவியுடன் செதுக்கினீரே. கணித பாடத்தினை மாணவர்களுக்கு விளங்கும் அளவில் கற்பித்து மாணவர்களைக் கணித பாடத்தில் முன்னேற்றி அவர்களை க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடையச் செய்தீர்களே. உரிய நேரத்திற்கு வருகை தந்து அதிபருடன் சேர்ந்து செய்ய வேண்டிய கடமைகளை ஒழுங்காகச் செய்தீர்கள். எமது பாடசாலையில் இருபத்தொன்பது ஆண்டுகளாகப் பணியாற்றி மிக மகிழ்ச்சியுடன் இருந்தீர்கள். இக் கல்லூரியில் மிக அமைதியுடன் மாணவர்களையும் அமைதியாகப் பேணிக் காத்தீர்கள்.

பாடசாலையின் அனைத்துச் செயற்பாடுகளிலும் முன்னின்று உழைத்த உங்கள் ஓய்வுகாலம் சிறப்புற இறைவனை வேண்டுகிறோம்.

**யதுர்சிகா தாசன்**
தரம் 9 C

# எந்த உறவு

எமது பாடசாலையின் பழையமாணவன் என்றால் எனக்கு அண்ணன், எமது பாடசாலையின் ஆசிரயர் எங்களை வழிநடத்துவதிலே தந்தை, எங்களோடு அன்பாகப் பழகுவதில் நண்பன், அப்பாவின் நண்பர் என்றதால் அவர் மாமா, அவருடைய மதிப்பு உப அதிபர், பாடசாலை வேலை செய்வதில் சேவகன் இவ்வாறு பல பாத்திரம் கொண்ட உறவு முறைகளை ஏற்று எந்த உறவு என்று தெரியாமல் அன்பாகப் பழகியவர் எங்கள் ஆசான்.

பாடவேளை போடாவிட்டாலும் அவர் அதிகமாக வகுப்பறைக்கு வந்துள்ளது பெருமைப்படும் விடயமாகும். வகுப்பிற்கு வரும் போது வகுப்பை கோவில் போன்று புனிதமாக மதித்து வருகின்ற தன்மையைப் பார்க்கும் போது எமக்கு அவர் மீது பயமும், பக்தியும் உருவாகும். ஆசிரியர் - மாணவர் உறவு இன்று சீரழிந்த நிலையில் காணப்படுகின்றது. ஆனாலும் இவர் ஆசிரியர் மாணவர் உறவு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்கியவர். பழைய மாணவர் என்று பலர் கூறிக் கொண்டாலும் வயவன் அன்னை பெற்று எடுத்த தவப் புதல்வர்களில் இவர் முக்கியமான இடத்தைப் பிடிக்கின்றார்.

வயவன் அன்னைக்கு சேவைசெய்தலை அவர் இறை பணியாக கொண்டு செயற்பட்டவர். பிரதி அதிபர் என்ற நிலையில் இருந்தாலும் அன்னைக்கு சேவை செய்வதில் சிற்றூழியராக மாறிய நிலையைக் கண்டு என் மனம் பதைபதைக்கும். இப்படி ஒருவரை நான் இதுவரை கண்டதும் இல்லை ! எனது பாடசாலையும் கண்டிருக்க முடியாது.

கருணையின் வடிவாக கலங்கரை விளக்காகக், கடமை வீரனாக, கல்விக்கடலாக காட்சியளிக்கும் இவர் எமது பாடசாலையிலே தனது அறுபது வயதைப் பூர்த்தி செய்து மணி விழாவை கொண்டாடுவதையிட்டு மனம் மகிழ்கிறோம்.

**ப.சயந்தர்சினி**
தரம் 11 D

# நல்லாசானுக்கு முன்னுதாரணம்

கணிதபாடம் என்றாலே எங்கள் அனைவருக்கும் புவனேந்திரன் ஆசிரியர் அவர்களைத் தான் ஞாபகம் வரும். அவரது வகுப்பறையில் அமர்ந்த எந்த ஒரு மாணவராலும் கணித பாடத்தைப் பிடிக்காது எனக் கூற முடியாது. அவர் கணித பாடத்தை மிகவும் இலகுவாக மாணவர்களுக்கு விளங்கப்படுத்துவார். இறுதியில் புரியாத மாணவர்களுக்குக் கூட நன்றாக விளங்கப்படுத்தி விடுவார்.

புவனேந்திரன் ஆசிரியர் என்றாலே வந்திறங்கும் மிகவும் எளிமையான தோற்றம் கொண்ட ஆசிரியராகவே எங்கள் நினைவுகளில் இருக்கிறார். ஒரு நல்லாசான் எப்படி இருக்க வேண்டும், மாணவர்களோடு எப்படிப் பழக வேண்டும் என்பதற்கு சிறந்த முன்னுதாரணம் ஆவார். எமது பாடசாலையின் நெருக்கடியான காலகட்டங்களில் கூட அன்று எமது அதிபராக இருந்த ஆ.சி நடராஜா அவர்களோடு கூடவே ஒத்துழைத்து சிறப்பாகப் பணி புரிந்துள்ளார். எமது பாடசாலை உரும்பிராயில் இடம்பெயர்ந்து இயங்கிய போதும் சரி, தற்போது வயாவிளானில் சொந்த இடத்தில் இயங்கும் போதும் சரி தற்போது ஓய்வு பெறும் வரை எமது பாடசாலை சமூகத்தோடு பல வழிகளிலும் நல் ஆசிரியராக, ஆலோசகராக, வழிகாட்டியாக விளங்கியுள்ளார். எமது பாடசாலைச் சமூகம் பெருமளவில் புவனேந்திரன் ஆசிரியருக்குக் நன்றிக் கடன் பட்டுள்ளது. அவருக்கு பணிநலன் பாராட்டு விழா எடுப்பதில் பழைய மாணவர்களாகிய நாமும் பெருமகிழ்வு அடைகின்றோம்.

ஆசிரியர் அவர்களும் அவரது குடும்பத்தினரும் நல்ல டிஆரோக்கியத்தோடு பல்லாண்டு காலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**அனித்தா அருணேஷ்**
2002, O/L Batch

# ஒரு நாளைக்கு ஒரு விடயம் விளங்கினால் போதும்

"ஒரு நாளைக்கு ஒரு விடயத்தை ஒரு கணக்கை நன்றாக புரிந்து கொண்டு வீட்டுக்குப் போங்கோ, அப்போ தான் எனக்கும் படிப்பிக்கிறதில ஒரு திருப்தி இருக்கும்" இது புவனேந்திரன் சேர் அடிக்கடி எங்களுக்கு சொல்லும் வாசகம்.

ஒரு கணக்கை விளங்கப்படுத்துவதற்கு எத்தனை முறை வேண்டுமானாலும் முயலுவார். மாணவர்கள் எந்த நேரம் எத்தனை தடவை கேட்டாலும் அத்தனை தடவைகள் புரியாத கணக்கை விளங்கப்படுத்த அவர் தவறியதில்லை.

சில மாணவர்கள் கணக்கில் ஆர்வம் செலுத்தாமல் வகுப்பறையில் இருந்தால் படிக்காமல் அநியாயமாக போறானே என்று சரியாகக் கவலைப்படுவார். தொடர்ந்தும் அவதானிக்காமல் விடும் மாணவர்களுக்கு வருடத்தில் ஒரு முறையாவது பலமாக விழும் அவரது கவனிப்பை வாழ்நாளில் மறக்க மாட்டார்கள். அவர் சரியாகப் படிப்பித்தும் கணக்கில் சித்தியடையத் தவறும் மாணவர்களிடம் பின்பு அதிக அக்கறை எடுத்துப் பின்னேரம் நின்று விசேட வகுப்புக்கள் நடாத்தி அடுத்த வருடமாவது அவர்களை உயர்தரத்துக்குத் தகுதியானவர் களாக மாற்றி விடுவார்.

மாணவர்களிடமும் தன்னுடைய சொந்தப் பிள்ளைகள் போன்று அக்கறை செலுத்தி மிகுந்த தோழமை உணர்வோடு பழகுவார். பள்ளிக்கூடம் வந்தால் அவர் முழுமையான ஈடுபாட்டுடன் தனது வேலைகளைச் செய்வார். மாணவர்களோடு மட்டுமல்ல ஆசிரியர்களுக்கும் நண்பராகவும், ஆலோசகராகவும் விளங்கியிருக்கிறார்.

மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதோடு மட்டும் நின்று விடாமல் அவர்களின் கல்வியைப் பாதிக்கும் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்க முயற்சிப்பார். புவனேந்திரன் ஆசிரியர் போல் முன்மாதிரி ஆசிரிய சமுதாயம் தான் எமது மாணவ சமுதாயத்தை நல்வழிக்குக் கொண்டு செல்லும்.

நாங்கள் படிக்கின்ற காலத்தில் ஒரு அதிபர் எப்படி இருக்க வேண்டுமென திகழ்ந்த முன்னை நாள் அதிபர் திரு.ஆ.சி நடராஜா அவர்களுடனும் தோளோடு தோள் நின்று பாடசாலையில் வளர்ச்சிக்காக எப்போதும் பாடுபடுவார். பல்லாண்டு காலம் ஆசிரிய சேவை புரிந்தாலும் அவருடைய வாழ்நாயில் பெரும்பகுதி வயாவிளான் மத்திய கல்லூரியிலேயே கழிந்துள்ளது. எங்களுக்கு 2000களில் படிப்பித்த 90வீதமான ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்தாலும் புவனேந்திரன் ஆசிரியர் மட்டும் தொடர்ந்தும் எமது பாடசாலைக்காக அயராது சேவையாற்றி தற்போது ஓய்வு பெற்றுச் செல்கிறார். எமக்காக தம் வாழ்நாளை அர்ப்பணித்த புவனேந்திரன் ஆசிரியருக்கு தகுந்த நேரத்தில் பணிநலன் பாராட்டு விழா எடுக்கும் எமது அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், எமது சக பழைய மாணவர்கள் ஆகியோருக்கு வாழ்த்துக்களும், நன்றிகளும் உரித்தாகுக. இனி அவரது ஓய்வுக்காலம் குடும்பத்துடன் இனிமையாக கழிய ஆண்டவனைப் பிரார்த்திப்போம்.

**செல்வநாயகம் கிரிசாந்** - 2002, O/L Batch

# மணி விழா நிகழ்விற்கு நிதிப் பங்களிப்புச் செய்த நல்லுள்ளங்கள்

| | |
|---|---|
| ஆசிரியர் நலன்புரிக்கழகம் (யா/வ.ம.க) | - 65000.00 |
| 1996 க.பொ.த(சா/த) பிரிவு | - 25000.00 |
| பழைய மாணவர் சங்கம் (லண்டன் கிளை) | - 20000.00 |
| திரு.இரத்தினம் உதயகுமார் (அவுஸ்ரேலியா) | - 20000.00 |
| திரு.சூரியகுமார் சுதர்சன் (கனடா) | |
| திரு.சூரியகுமார் மயூரன் (கனடா | |
| திரு.சூரியகுமார் சசிதரன் (அதிபர், யா/வட்டு.கார்த்திகேய வித்தி.) | - 20000.00 |
| திரு.துரைசிங்கம் அமரசிங்கம்(சுவிஸ்) | - 10957.96 |
| திரு.சுந்தரலிங்கம் விக்னேஸ்வரன் (லண்டன்) | - 10000.00 |
| திரு.நடராசா பபீசன் (பிரான்ஸ்) | - 10000.00 |
| திரு.சர்வானந்தன் சர்வராஜா (பொறியலாளர்) | - 10000.00 |
| திரு.திருமதி லோகநாதன் (டயஸ்) பிரபல ஆசிரியர் | - 10000.00 |
| திருமதி வாசுகி சுரேஷ்குமார் (ஆசிரியர்) | - 10000.00 |
| திருமதி பானுரேகா சதீசன் (கனடா) | - 10000.00 |
| திரு.சிவலிங்கம் முருகவேள் (கனடா) | - 7000.00 |
| திருமதி ஆர்.சோமசுந்தரம் (ஓய்வு பெற்ற ஆசிரியை) | - 5000.00 |
| டாக்டர் எஸ்.பிரசன்னா (மட்டு. ஆதார வைத்தியசாலை) | - 5000.00 |
| திரு.தயாநிதி கஜந்தன் (கனடா) | - 5000.00 |
| திரு.பாலசுப்பிரமணியம் சஞ்ஜீவ் (ஜேர்மன்) | - 5000.00 |
| திருமதி புஸ்பவதி சிவகுமார் | - 5000.00 |
| திரு.சற்குணராஜா சுதர்சன் (நிலஅளவையாளர்) | - 4000.00 |
| திருமதி மனோகரன் (ஆசிரியர்) | - 2000.00 |
| திருமதி இராசநாயம் புஸ்பராணி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) | - 1500.00 |
| திரு.தம்பித்துரை ஜங்கரன் (ஊழியர் மக்கள் வங்கி) | - 2000.00 |
| திரு.பாலசுப்பிரமணியம் ஆரூரன் (இ.போ.ச) | - 1000.00 |
| திருமதி டினேஸ் ரூபா | - 1000.00 |
| திருமதி சாந்தரூபன் தாரணி | - 1000.00 |
| திரு.கி.மணியம்(ஓய்வுநிலை அதிபர்) | - 1000.00 |
| திரு.ம.துஷ்யந்தன் [A.D.P] | - 1000.00 |
| திரு.க.செல்லப்பிரகாசம் (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்) | - 500.00 |



# மணிவிழா மலர் வெளியீட்டுக்கு உதவி புரிந்த அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்



முத்து பிறின்டேர்ஸ், சுன்னாகம். 077 8038629